
இதழ் 64-66 ஒக்- டிச/ 2016 விலை: 100.00

எல்லையுற்று விரியும் அறிவுத்தளம்...

Aasiriyam pedagogy

# ஆசிரியம்

ආසිරියම්




யாழ்ப்பாண பொதுநூலகம்

## காலம் மறந்த கணித மேதை?

■ இரா. சிவராமன்

## நவீன ஓவியம்

■ கோ. கைலாசநாதன்

## அதிபர் தேர்வும் பாடசாலை ஆரம்பித்தலும் ஆசிரியர்களின் காலை வரவும்

■ அன்பு ஜவஹர்ஷா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு




**விலை 460.00**

யூ.ஜி.50 பீப்பிள்ஸ் பார்க் கொழும்பு–11
தொ.பே: 011–2472362 தொ.ந: 011–2448624
மின்னஞ்சல் : chemamadu@yahoo.com
இணையம் : www.chemamadu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


◈ பாடசாலை ஆரம்பித்தலும் ஆசிரியர்களின் காலை வரவும்
அன்பு ஜவஹர்ஷா 05

◈ பண்பாடும் வாசிப்பும்
எஸ்.ரகுராம் 17

◈ ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் யாழ்ப்பாணத்து சைவாசிரிய கலாசாலை
தி.செல்வமனோகரன் 22

◈ உள்ளகப் பயிற்சி மாணவ ஆசிரியர்களிடம் விருத்தியாக்கப்பட வேண்டிய மிருதுவான திறன்கள்
க.சுவர்ணராஜா 33

◈ பாடசாலைக் கலைத்திட்டமும் சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வூட்டலும்
கி.புண்ணியமூர்த்தி 42

◈ நவீன ஓவியம்
கோ.கைலாசநாதன் 51

◈ தமிழர் வாழ்வு அழகியற் கல்விச் சிந்தனைகளும்
சபா.ஜெயராசா 58

◈ காலம் மறந்த கணித மேதை?
இரா.சிவராமன் 63

◈ ஆசிரியத்தில் உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகள்
அன்பு ஜவஹர்ஷா 65

◈ ஃப்ராய்ட்டின் மேஜையில் விஷ்ணு சிலை
ச.ஃபி 71


உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 2021-9041

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

# ஆசிரியம்

இதழ் 64-66

**ஆசிரியர்:**
தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள்:**
அ.ஸ்ரீகாந்தலட்சுமி
எம்.என்.மர்சூம் மௌலானா, காசுபதி நடராசா

**ஆசிரியர் குழு:**
பேரா.க.சின்னத்தம்பி, பேரா.சபா.ஜெயராசா
பேரா.சோ.சந்திரசேகரன்

**சிறப்பு ஆலோசகர்:**
அன்பு ஜவஹர்ஷா

**ஆலோசகர் குழு:**
பேரா.மா.கருணாநிதி,
பேரா.மா.செல்வராஜா, பேரா.தை.தனராஜ்,

**நிர்வாக ஆசிரியர்:**
சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு:**
வை.கோமளா

**தொடர்புகளுக்கு:**

தெ.மதுசூதனன்
077 1381747 / 011 2366309/ 021 2227147

காசுபதி நடராஜா - 077 3247132
மர்சூம் மௌலானா - 077 4747235
அ.ஸ்ரீகாந்தலட்சுமி - 0777 286211

**படைப்புகள் அனுப்ப:**

*aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*

**பணம் அனுப்ப:**

Chemamadu book centre - BOC Bank
A/C- NO :8081150

Chemamadu book centre - COM Bank
A/C- NO:1120017031

**அச்சுப்பதிப்பு:**
**Printed by: cbc press**
Tel : 0777 345 666

**தொடர்புகளுக்கு:**
"Aasiriyam"
180/1/50 People's Park, Colombo -11,
Tel: 011-2331475
E-mail :aasiriyam@gmail.com,
Web:www.chemamadu.com/aasiriyam.aspx

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்றல் - கற்பித்தலும் கல்வியின் அரசியலும்...

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் சைவ வித்தியா விருத்திச் சங்கம் 1923ஆம் ஆண்டு தொடக்கம் 1961ஆம் ஆண்டுவரை இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பாடசாலைகளை அமைத்து கல்வித் துறையினை பரவலடையச் செய்வது எனும் ஆக்க பூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. இந்த அமைப்பு சைவாசிரிய கலாசாலையை உருவாக்கி (1929-1961) ஆசிரியர்களை வாண்மைச்சிறப்புள்ள ஆசிரியர்களாக உருவாக்கி பல்வேறு பாடசாலைக ளுக்கும் பணிபுரிய அனுப்பி வந்தது. இந்தக் காலம் ஆசிரியர் தர உறுதிப்பாட்டில் மிகமுக்கியமான கால கட்டமென்றே கருதவேண்டும். சைவாசிரிய கலாசாலை வழிவந்த ஆசிரியர்களது கற்றல் - கற்பித்தல் பணிகள் மிகச் சிறப்பாக இருந்துள்ளன. இந்த நிறுவனம் சார்ந்த ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் இன்னும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. இவை குறித்து நாம் சிந்திப்பதும் ஆய்வு ரீதியில் புரிந்துகொள்ள முற்படுவதும் சமகாலத்துக்கு அவசியமாக இருக்கும்.

இன்று மாணவர் நிலையில் கற்றல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து பன்முக ரீதியில் பலநோக்கு நிலையில் ஆக்கங்கள் வெளிவருகின்றன. ஆனால் நடைமுறையில் 'கற்றல்' சிந்தனை இன்னும் இறுக்கமாக ஒற்றைப் பரிமாண அணுகுமுறை சார்ந்த விடயப்பரப்பாகவே நோக்கப்படுகின்றது.

சூழலின் தேவைக்கேற்றவாறு நடத்தைகளை நெறிப்படுத்திச் செல்லல் கற்றலாகின்றது என்னும் எதார்த்தம் பெரும்பாலும் ஆசிரியர் மட்டத்தில் புரிந்துகொள்ளப்படுவதாக இல்லை. ஆசிரியர் தம்மை மேலிருந்து கற்றுக்கொடுப்பவர் - சொல்லிக்கொடுப்பவர் என்னும் நிலையிலிருந்து கீழிறங்கி தம்மை தளமாறுநிலையில் வைத்துப் புரிந்துகொள்வது முக்கியம். அப்பொழுதுதான் கற்றல் என்பது இலக்குகளை நோக்கி நகர்ந்து செல்லும் சமூகச் செயல்முறையாக விளங்கிக்கொள்ள முடியும்.

இந்த விளக்கம் தன்னிலை சார்ந்த நடத்தையில் நடைபெறும் மாற்றத்தையும் சுய விசாரணையையும் இணைத்துக்கொண்டதாக மேலெழும். குறிப்பாக நடத்தைக் கோலங்களும், சிந்தனை வெளிப்பாடுகளும் ஆளுமையுடன் நேரடித் தொடர்பு கொண்டதாகவே அமையும். ஆகவே ஆசிரியர் எத்தருணத்திலும் தம்மைப் புத்தாக்கமாக வைத்திருப்பதில் கவனம் செலுத்துதல் வேண்டும். நடைமுறையில் ஆசிரியர் சமூகத்திடம் கற்றல் ஒரு செயல்முறையாக விருத்திபெற முடியாதளவுக்கு உளச் சிக்கல்களால் வழிநடத்தப்படுகின்றனர்.

இன்று ஆசிரியர்களிடம் உடல், உள்ளம் மற்றும் மனவெழுச்சி இணைப்பு உயிர்ப்பாகவும் உறுதியாகவும் இல்லை. இதனால் சலிப்பூட்டும் பாணியிலான கற்றல் பாங்குகளை இயந்திரப்பாங்கில் வெளிப்படுத்தும் திறன் மட்டும்தான் இங்கு மிஞ்சுகின்றது. ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே மேலும் இடைவெளி அதிகரித்துக் காணப்படுகின்றது. கற்றலோடு தொடர்புடைய ஒழுங்குக் குலைவு மேலோங்குகின்றது. வாசிப்பதை அல்லது சொல்வதை முழுமையாகவோ பகுதியாகவோ கிரகித்துக்கொள்ள முடியாத இடர்பாடு அதிகரிக்கின்றது. மொழி வழியான தொடர்பாடல் இடர்பாடும் ஆசிரியர்களை மிகவும் பின்னடைவுக்குத் தள்ளுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தால் கற்றல்இயலாமை அல்லது கற்றல்இடர்பாடு உருவாக்கப் படுகின்றது. இந்தத் தன்மை மாணவருக்கு மட்டுமல்ல ஆசிரியருக்கும் பொருந்துகின்றது. கற்றல் இடர்பாடுகளுக்கு உட்படுவோர் சமூக நிலைப்பட்ட ஒதுக்கலுக்கும் உள்ளாகும் நிலை தோன்றுகின்றது. இதனால் மனவெழுச்சிக் குழப்பங்களும் இசைவாக்கப் பிரச்சினைகளும் ஏற்படும் வாய்ப்புகளும் அதிகரிக்கின்றது. அதாவது உடல்நிலையிலும் உளநிலையிலும் சமநிலைப் பாடுகள் குன்றுகின்றது. பதகளிப்பும், உளநிலையில் ஊசலாட்டமும் ஏற்படுகின்றது. தனிமனிதஆளுமையை, பாடப்புலமையை மற்றும் கல்வித் தலைமைத்துவத்தை வெளிப்படுத்துவதிலும் பல்வேறு சிக்கல்பாடுகள் தோன்றுகின்றது.

பொதுவாக நாம் இன்றைய மாணவர்கள் பற்றி மட்டும் சிந்திக்காமல் இன்றைய ஆசிரியர்கள் குறித்தும் நமது கவனத்தைக் குவிக்க வேண்டும். கற்றல் கற்பித்தல் தொடர்பில் மரபு வழியான அணுகுமுறைகளில் இருந்து விடுபட்டு புத்தாக்கமாக நமது சமூக இருப்பு, எதார்த்த நடைமுறைகளுடன் இணைத்துச் சிந்தித்து கல்வித்தலைமைத்துவம் பற்றிய பன்முக வெளிப்பாடுக்கான ஆற்றல்களையும் திறன்களையும் மேலும் வளர்த்துக்கொள்வதற்கான சூழமைவு குறித்த தேடலும் அறிவும் நமக்கு அவசியமாகின்றது.

நவீன ஆசிரியர் பல்வேறு திறன்களைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. ஆசிரியர் ஒற்றைப் பரிமாணத்திலே கற்பித்தலை முன்னெடுத்துச் செல்லாது, வகைவகையான செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வோராகவும் இருக்க வேண்டுமெனவும் வலியுறுத்தப்படு கின்றது.

இன்று பரீட்சை மையக் கல்வி மாணவரிடம் மட்டும் செல்வாக்குப் பெறவில்லை. ஆசிரியர்களிடத்தும் அவர்களது பதவியுயர்வுக்கான படிமுறையிலும் பரீட்சைகள் தான் முக்கியம் பெறுகின்றது. இதற்காகத் தம்மைத் தயார்ப்படுத்தும் வழிமுறைகளிலும் தீவிரமாக உழைக்கின்றனர். ஆனால் இன்று பரீட்சைக்காக சுயகற்றல், சுயதேடல், சுயவாசிப்பு சார்ந்து இயங்கும் ஆசிரியரது ஆளுமையில் ஏற்பட்ட மாற்றங்கள், நேர் மனப்பாங்குகள், வாண்மைத்துவத் திறன்கள் யாவை? இவை குறித்து நாம் சிந்திக்க வேண்டும்.

ஆசிரியத்துவத்தின் உன்னதம் தலைமைத்துப்பண்புகளை வளர்த்துக் கொள்ளலோடு இணைந்தது. இந்தத் தலைமைத்துவப் பண்பை திறன்கள் வழியாக நோக்கும் முறைமை காணப்படுகின்றது. அவ்வகையில் தொழில்நுட்பத்திறன், மனிதத்திறன், எண்ணக்கருசார்ந்ததிறன் ஆகியன முக்கியம் பெறுகின்றன. மேலும் ஆசிரியத்துவத்தில் வலியுறுத்தப்படும் கற்றல் கற்பித்தல் திறனும் இடம்பெறுகின்றது.

மேற்குறிப்பிட்ட திறன்களை பயன்படுத்தி கற்றலையும் கற்பித்தலையும் முன்னெடுக்கும் பொழுது வளமானதும் உயிர்ப்பு மிக்கதுமான தலைமைத்துவ நிலை வகுப்பறையில் தோற்றம்பெறும். நடைமுறையில் இந்தத் தோற்றம் சாத்தியப்படுகின்றதா? என்பதுதான் இன்றையப் பிரச்சினை. இவை பற்றி ஆழமான நுட்பமான வினாக்களையும் விசாரணைகளையும் மேற்கொண்டு கடந்து செல்வோம். இவை நமக்கான கல்வியின் அரசியல் ஆகும்.

தெ.மதுசூதனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை ஆரம்பித்தலும் ஆசிரியர்களின் காலை வரவும்

* அன்பு ஜவஹர்ஷா

இலங்கையில் உள்ள 10,144 அரச பாடசாலைகளும், மற்றைய அரசாங்க நிறுவனங்கள் போல் போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடங்களில் அமைந்துள்ளவை அல்ல. பௌதிக வசதிகளும், தொழில்நுட்ப வசதிகளும் எவ்வளவு விருத்தியடைந்தாலும் பல கிலோ மீற்றர் மண்ணடி பாதைகள் ஊடாக நடந்து சென்று கல்வி கற்க, சேவையாற்ற வேண்டிய பாடசாலைகளும், மலையேற வேண்டிய பாடசாலைகளும் நூற்றுக்கணக்கில் உள்ளன என்பதை இங்கு குறிப்பிட்டே இந்த ஆக்கத்தை எழுத வேண்டியுள்ளது.

கஷ்ட பிதேசங்களைப் போல, பல கிலோ மீற்றர்கள் (சில சமயம் 100 கிலோ மீற்றரையும் கடக்கக் கூடும்) பிரயாணம் செய்து சேவையாற்றும் ஆசிரியர்களும் உள்ளார்கள். இங்கு குறிப்பிடப்படும் விடயங்கள், சுற்றறிக்கைகள் பழையவையாக இருக்கலாம். ஆனால் காலம் கடந்தவை அல்ல என்பதையும் முதலில் சொல்ல வேண்டியுள்ளது.

நடைமுறை சாத்தியங்களை அனுசரித்தே இவைகளை அதிபர்கள் அமுல் நடத்தி வருகின்றார்கள். பதிவேடுகளிலும் அவ்வாறே பேணி வருகின்றார்கள். ஆனால் பாடசாலை ஆளணிச் சமூகம் இவை தொடர்பாக அறிந்து இருக்க வேண்டும். அப்போதுதான் பாடசாலைகளை சுமுகமாக கொண்டு நடத்த முடியும். முரண்பாடுகளை குறைத்து கடமையாற்றக் கூடிய சூழ்நிலை உண்டாகும்.

பல வருடங்களுக்கு முன்னர் இருந்த சூழ்நிலை இன்று இல்லை. போக்குவரத்து வசதிகள் விரிவடைந்து உள்ளதோடு, கணிசமான தொகையினர் மோட்டார் சைக்கிள் போன்ற தமது சொந்த வாகனங்களில் சேவை நிலையங்களுக்கு சென்று வருகின்றார்கள்.

எனது அவதானிப்பில் வசதிகள் கூடிய இடங்களில் இந்தச் சுற்றறிக்கைகளையும், நியதிகளையும் நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களும் குறைபாடுகளும் உண்டாகின்றன. பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு அந்த நேரத்தையிட்டு புத்தகத்தில் கையொப்பமிட்டால் போதும் என்ற மனப்பாங்கே வளர்ந்து வருகின்றது. பாடசாலை தொடங்க முன்னர் ஆசிரியர் வகுப்பறையில் இருக்க வேண்டும் என்ற தியாக சிந்தை குறைந்துகொண்டு வருகின்றது. கல்வி வர்த்தக பொருளாகி

**கட்டுரையாளர்**
ஓய்வுபெற்ற அதிபர்
ஆசிரியத்துவம்
கல்வி சார்ந்து
பல்வேறு
கட்டுரைகளை
தொடர்ந்து எழுதி
வருபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதால், நல்ல விழுமியங்கள் கொண்ட ஆசிரியர்களுக்கு உள்ள மதிப்பு குறைந்து வருவதால் பல விடயங்கள் சிக்கலாகி வருகின்றன.

அண்மையில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் வடபகுதி பாடசாலைகள் 2017ஆம் ஆண்டு தொடக்கம் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று தெரிவித்த கருத்து தொடர்பாக பல வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காலநிலைகளுக்கேற்ப மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையிலான குழுவொன்றில் தீர்மானத்துக்கு அமையவே இதை மாற்றலாம். இது இலங்கையில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் பொதுவான சுற்றறிக்கை. 2006.06.06 அன்று கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 2006/26 ஆம் இலக்கம் கொண்ட சுற்றறிக்கை இங்கே உள்ளது.

தொலைபேசி இல./Telephone Nos.

பணிப்பாளர் / Director } 2784832

செயலாளர் / Secretary } 2784811

அலுவலகம் / Office } 2785141-50 Fax 2784846

ஈமெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

உமது இல. / Your No.

கல்வி அமைச்சு

Ministry of Education

"Isurupaya", Sri Jayawardenapura Kotte

Battaramulla

எனது இல. / My No. ED/01/12/04/03/03

திகதி / Date 2006.06.06

சுற்று நிருப இலக்கம் - 2006/26

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல கோட்டத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்கள் ஆகியோருக்கு,

பாடசாலை, அலுவலகங்கள் நடைபெறும் நேரத்தை மாற்றியமைத்தல்

அமைச்சரவை விஞ்ஞாபன இலக்கம் CP06/0896/224/5.21 மற்றும் 2006.05.24 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு ஏற்ப 2006.05.19 ஆம் திகதி தொடக்கம் பாடசாலைகள் அலுவலகங்கள் ஆரம்பிக்கும், முடிவடையும் நேரங்கள் கீழ் குறிப்பிட்டவாறு அமையும்.

01. பாடசாலை ஆரம்பித்தலும் முடிவடைதலும்

1.1 பாடசாலை ஆரம்பித்தல் முற்பகல் - 7.30 மணிக்கு
பாடசாலை முடிவடைதல் பிற்பகல் - 1.30 மணிக்கு

1.2 எனினும் சகல முஸ்லிம் பாடசாலைகளும் முற்பகல் 7.30 மணிக்கு ஆரம்பிப்பதுடன் வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் பிற்பகல் 2.00 மணிக்கு முடிவடையும். வெள்ளிக்கிழமைகளில் பாடசாலை முடிவடைவது முற்பகல் 11.30 மணிக்கு ஆகும்.

1.3 பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் காலநிலைகளுக்கேற்ப மாகாணக் கல்விப் பணிப்பாளரின் தலைமையிலான குழுவொன்றின் மூலம் எடுக்கப்படும் தீர்மானத்திற்கமைய பாடசாலை ஆரம்பிக்கும் நேரத்தை மாற்றிக் கொள்ள முடியும். எனினும் பாடசாலை நடாத்தப்படும் காலம் 6 மணித்தியாலங்களாய் இருத்தல் வேண்டும்.

02. அலுவலக நேரம் ஆரம்பித்தலும் முடிவடைதலும்

2.1 முற்பகல் 8.30 மணியிலிருந்து ஆரம்பித்து பிற்பகல் 4.15 மணிக்கு முடிவடையும்.

03. மேற் கூறப்பட்ட நேரத்திற்கேற்ப பாடசாலைகள், அலுவலகங்களின் செயற்பாடுகள் 2006.06.19 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

எஸ். தர்மசேன
கல்விப் பணிப்பாளர் (பாடசாலை செயற்பாடுகள், தனியார் பாடசாலை)

ஒப்பம் : ஆரியரத்ன ஹேவகே
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் :-

1. பொது முகாமையாளர் (இலங்கை புகையிரத திணைக்களம்) - தயவு செய்து புகையிரத பயண நேரத்தை திருத்தம் செய்வதற்காக
2. தலைவர் (இலங்கை போக்குவரத்து சபை) - தயவு செய்து திருத்தப்பட்ட நேரத்திற்கேற்ப பஸ் பயணத்தை மேற்கொள்வதற்காக
3. தலைவர்கள் (பிராந்திய போக்குவரத்து சபைகள்) - தயவு செய்து திருத்தப்பட்ட நேரத்திற்கேற்ப பஸ் பயணத்தை மேற்கொள்வதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் காட்டப்பட்ட 2006/26ஆம் இலக்கம் கொண்ட கல்வியமைச்சின் சுற்றறிக்கையை வைத்தே மற்றைய கதையாடலை தொடர முடியும். புதிய 3901 என்ற எண்ணிக்கை கொண்ட 3ஆம் வகுப்பு அதிபர்களுக்கும் வருடா வருடம் நியமிக்கப்பட்டு வரும் ஆசிரியர்களும் ஆதார பூர்வமான தகவல்களுடன் இந்த விபரங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அமுலில் உள்ள பழைய சுற்றறிக்கைகளுடன் இந்த ஆக்கத்தை தயாரித்துள்ளேன்.

எந்தவித விவாதமும் இன்றி பாடசாலை தொடங்கும் நேரம் காலை 7.30 என்பதை மனதில் இருத்தியே பின்வரும் தகவல்களைச் சரிபார்த்துக்கொள்ள வேண்டும். சிலர் சொல்வது போல் காலை 15நிமிடம் அல்லது 30 நிமிடம் சலுகை நேரம் ஆசிரியர்களுக்கு இல்லை சகல விடயங்களும் இந்த பாடசாலை ஆரம்பிக்கும் நேரமான 7.30 என்பதை முன்னிருத்தியே கவனிக்கப்படல் வேண்டும்.

ஆனாலும் பாடசாலை ஆரம்பமாகும் நேரம் தொடர்பாக இன்னும் வாதங்கள் தொடர்ந்து வருகின்றன. இங்கு 1982.02.27 அன்று வெளியிடப்பட்ட 1981/13 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையும் முக்கியமானது. அதன் முன்பகுதியை இங்கு தருகின்றேன். இந்த விடயம் தொடர்பாக, கடந்த 35 வருட காலமாக இந்த சுற்றறிக்கையே பின்பற்றப்பட்டு வருவதால் இதை பற்றியும் நீங்கள் தெரிந்துகொள்வது முக்கியமானதாகும்.

சுற்றறிக்கை இல 1981/13

எனது இல 03/[illegible]/2/555
உள்ளக கணக்குப்பிரிவு
கல்வி அமைச்சு
மலே வீதி
கொழும்பு 02
1982.02.27

எல்லா அதிபர்களுக்கும்.

பாடசாலைகளில் மனித வலுவிலிருந்து உச்சப்பயனைப் பெறாதிருத்தல்

தலைமைக் கணக்குப் பரிசோதகரின் வருடாந்த அறிக்கையில், பாடசாலைகளில் மனித வலுப்பிரயோகம் குறைவாகவுள்ளதென எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் பிந்தி வருதல், வராதிருத்தல், உரிய வேலைகளை பொருத்தமான முறையில் செய்யாதிருத்தல், குறைபாடுள்ள மேற்பார்வை என்பன தொடர்பாகவும் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடயங்கள் தொடர்பாக ஏற்கனவே ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பினும், சில பாடசாலைகளில் இக்குறைபாடுகள் இன்னும் நிலவுவதாக கணக்குப் பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.

02. இக்காரணங்களால் பின்வரும் அறிவுறுத்தல்களை விடுக்க வேண்டியிருப்பதுடன் தொடர்புடைய எல்லா உத்தியோகத்தர்களும் அவை பின்பற்றப்படவும் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(I) லீவு

லீவில் செல்லுமுன் அதற்காக பொருத்தமான அதிகாரியின் முன் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவிர்க்கமுடியாத நிலைமைகளினால் லீவுக்கான முன்னனுமதியை பெற முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில், உடனடியாக ஒரு செய்திப் பரிமாற்றத்தின் மூலம் அது பற்றித் தெரியப்படுத்த வேண்டும். சாதாரணமான ஒரு கால அளவிற்குள் அவ்வாறான அறிவித்தல் கிடைக்கப்பெறாத பட்சத்தில், பிரதேச கல்விப் பணிப்பாளர் அவசியம் எனக் கருதும் பட்சத்தில், அவ்வாசிரியர் சேவையை விட்டுத் தாமாக நீங்கியவர் எனக் கருதி நடவடிக்கை எடுக்கக்கூடிய வகையில் குறிப்பிட்ட ஆசிரியர் தொடர்பான சகல விபரங்களையும் பிரதேச கல்விப் பணிப்பாளர் அல்லது பிரதான கல்வி அதிகாரிக்குத் [illegible] அறிவித்தல் வேண்டும். லீவுப் புத்தகத்தில் சகல குறிப்புகளும் பதியப்பட்ட பின் லீவு விண்ணப்பங்கள் பாடசாலை காரியாலயத்தில் கோவைப்படுத்தி வைக்கப்பட வேண்டும். [illegible] மேலதிகமாக பெற்றுக் கொள்ளப்பட்ட லீவு விபரங்கள் பிரதேச கல்விப் பணிப்பாளர்/ பிரதேச கல்வி அதிகாரி ஆகியோருக்கு அறிக்கையிடப்படல் வேண்டும். பிரதேச கல்விப் பணிப்பாளர்/ பிரதான கல்வி அதிகாரி ஆகியோரால் அவ்வாசிரியரின் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட பணத்தொகை கணக்காளரினால் அறவிடப்பட்டதை அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சமுகமளிக்காத ஆசிரியர்களுக்கு பதிலாக பதில் வேலை ஒழுங்கிணைப்பு பாடசாலைகளில் பேணுவது அதிபர்களின் பொறுப்பாகும்.

அனுமதி பெற்றுக்கொள்ளாமல் அல்லது நியாயமான காரணம் ஒன்றில்லாமல் சேவைக்கு சமுகமளிக்காத எந்தவொரு ஆசிரியரும் சேவையிலிருந்து தாமாக நீங்கியவராக கருதப்படுவார் என்பதை உங்கள் ஆசிரியர் குழாத்திற்கு தெரியப்படுத்துகின்றேன்.

(II) பிந்தி வருதல்

உங்கள் பாடசாலையில் சேவை புரியும் சகல ஆசிரியர்களும் கீழ்வரும் முறையில் தமது கடமைகளை செய்கின்றனர் என்பது குறித்து அதிபர்கள் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

(அ) உரிய வேளைக்கு பாடசாலைக்கு சமுகமளிக்கிறார்களா என்பது பற்றி.
(ஆ) பாடசாலை முடியும் வரை அவர்களது கடமைகளில் ஈடுபடுகின்றார்களா என்பது பற்றி.
(இ) வரவுப்பதிவு புத்தகத்தில் பாடசாலைக்கு வரும் நேரத்தையும் பாடசாலையை விட்டுச் செல்லும் நேரத்தையும் சரியாக குறித்து ஒப்பமிட்டுச் செல்கின்றார்களா என்பது பற்றி.

பாடசாலை தொடங்கும் நேரத்திலிருந்து 15 நிமிடங்கள் கழிந்ததும் உடனடியாக வரவுப்பதிவு புத்தகத்தைச் சிவப்புக் கோடிட்டு மூடவும். பாடசாலை தொடங்கியதன் பின் மூன்று வேலை நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ½ மணித்தியாலங்களுக்குள் பிந்தி வரும் ஆசிரியர்களுக்கு அவ்வாறு பிந்தி வரும் 3 நாட்களுக்கும் ½ நாள் லீவு கணித்தல் வேண்டும்.

பாடசாலை தொடங்கி ½ மணித்தியாலத்திற்கு பிந்தி சமுகமளிக்கும் ஆசிரியர்களுக்கு அவ்வாறு பிந்தி வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்நாள் ½ நாள் லீவாகக் கணிக்கப்படல் வேண்டும்.

½ நாள் லீவு பெறுவதாயின் குறைந்தது பாடசாலை நாளொன்றின் வேலை மணித்தியாலங்களில் அரைப்பகுதி, அல்லது 3½ மணித்தியாலங்கள் என்பவற்றில் எது கூடியதோ அந்தளவு மணித்தியாலங்கள் வேலை செய்ய வேண்டும்.

வழமையாக பிந்திவரும் ஆசிரியர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வதற்கு மேலதிகமாக தனியாள் கோவையில் குறிப்பு இடும் பொருட்டு அது சம்பந்தமாக நிறைவேற்று உத்தியோகத்தருடாக பிரதேச கல்விப் பணிப்பாளர்/ பிரதான கல்வி அதிகாரிகளுக்கு அறிக்கையிடப்படல் வேண்டும்.

(III) குறுகிய கால லீவு

7.30- 13.30 வரையான வேலை நேரத்தைக் கொண்ட பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு உச்சளவு ஒரு மணித்தியாலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட ஒரு மாதத்திற்கு, இரண்டு சந்தர்ப்பங்களுக்கு கடமை வேளையில் சமயோசித லீவுகளுக்கு, [illegible] சமயோசித தேவைகளுக்காக இந்த லீவு வழங்கப்படும். அவ்வாறான லீவு சம்பவத்திரட்டு புத்தகத்திலும் குறுகிய கால லீவு புத்தகத்திலும் பதியப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சுற்றறிக்கையில் உள்ள மேல்காட்டப்பட்ட முக்கிய பகுதிகளோடு பின்வரும் விளக்கத்தையும் தெரிந்துகொள்வது அவசியம்

"பாடசாலை தொடங்கும் நேரத்திலிருந்து 15 நிமிடங்கள் கழிந்ததும் உடனடியாக வரவுப் பதிவுப் புத்தகத்தைச் சிவப்புக் கோடிட்டு மூடவும். பாடசாலை தொடங்கியதன் பின் மூன்று வேலை நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ½ மணித்தியாலங்களுக்குள் பிந்தி வரும் ஆசிரியர்களுக்கு அவ்வாறு பிந்தி வரும் 3 நாட்களுக்கு ஒரு ½ நாள் வீதம் லீவு கணித்தல் வேண்டும். பாடசாலை தொடங்கி ½ மணித்தியாலத்திற்கு பிந்தி சமுகமளிக்கும் ஆசிரியர்களுக்கு அவ்வாறு பிந்தி வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்நாள் ½ நாள் லீவாகக் கணிக்கப்படல் வேண்டும்.

விளக்கம்:

மேலே குறிப்பிட்ட பாடசாலை தொடங்கி 15 நிமிடங்கள், ½ மணித்தியாலம் என்றெல்லாம் குறிப்பிட்டுக் காட்டப்படுவதனால் பாடசாலை தொடங்கும் நேரம் குறித்துக் காட்டப்படல் வேண்டும் என்பது தெளிவாகின்றதல்லவா? எனவேதான் பாடசாலை தொடங்கும் நேரமான காலை 7.30 மணிக்கு சிவப்புக் கோடிட்டு மூடப்பட வேண்டிய அவசியம் தெளிவாகின்றது.

அத்துடன் 7.30 மணிக்கு மூடப்படாதவிடத்து எவ்வளவு நேரம் பிந்தி வரக்கூடிய ஆசிரியரும் தினவரவுப் பதிவேட்டில் சரியான நேரத்தைக் குறிப்பிடாமல் 7.30 மணிக்கு முன்னதான குறைந்த நேரத்தையே குறித்து கையொப்பமிடுவதையே விரும்புவர். இதனால் 7.30 மணிக்குப் பின் பிந்தி வரும் ஆசிரியர்களை இனங்காண முடியாது போய் விடும். எனவேதான் 7.30 மணிக்கு சிவப்புக் கோடிட்டு மூடப்படுவது உணரப்படுகிறது.

"பாடசாலை தொடங்கியதன் பின் மூன்று வேலை நாட்களுக்கு ஒவ்வொரு நாளும் ½ மணித்தியாலங்களுக்குள் பிந்தி வரும் ஆசிரியர்களுக்கு அவ்வாறு பிந்தி வரும் 3 நாட்களுக்கு ஒரு ½ நாள் வீதம் லீவாகக் கணிக்கப்படல் வேண்டும்" என்று குறிப்பிடப்பட்ட வசனத்தில் எவ்வித கால வரையறையும் சுட்டிக் காட்டப்படவில்லை. எனவே அந்த ஆசிரியரின் நியமனத் திகதி முதல் அவர் ஓய்வு பெறும் தினம் வரை தொடராகவே இக்கடமை செய்யப்பட வேண்டும் என்பது தெளிவு. சில அதிபர்களும் ஆசிரியர்களும் இச்செயற்பாடு ஒரு மாத காலத்திற்குள் அல்லது ஒரு வருடத்துக்குள் கணிக்கப்படல் வேண்டும் என்று வாதிடுவது எவ்விதத்திலும் பொருத்தமற்றது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். பிந்தி வரும் ஆசிரியர்கள் தொடர்பான விபரம் தினமும் தாமதமான வரவுப் பதிவேட்டில் தவறாது பதியப்படுதல் அவசியம். அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட லீவுப் பதிவேட்டுக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

இந்தச் சுற்றறிக்கைகளையும் உள்ளக கணக்காய்வு அதிகாரிகளினதும் ஆய்வுக் குறிப்புக்களையும் வைத்து 20 பேர் கொண்ட பாடசாலையொன்றின் கையொப்ப புத்தகமொன்று எப்படி பேணப்பட வேண்டும் என்ற மாதிரியொன்றை தயாரித்துள்ளேன். அதுவும் இங்கு உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. வரவுக் கையொப்ப புத்தகம்

| பெயர் அல்லது கையொப்பம் | | வந்த நேரம் | சென்ற நேரம் | பெயர் அல்லது கையொப்பம் | | வந்த நேரம் | சென்ற நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2009.02.27 வரவு | | | ஆசி.இல | செல்லல் | | ஆ.இ | |
| 01. கே. யோகன் | | 6.50 | 1 | 01 என்.பீ சனத் ~அரை நாள் லீவு | | 2 | 10.35 |
| 02. எஸ். பிரியதர்ஷனி | | 6.54 | 3 | 02. பீ.எச் கீர்த்திகா ~ குறுகிய லீவு | | [illegible] | 12.30 |
| 03. என்.எம் காதர் | | 7.00 | 4 | 03. எஸ்.எம் ரியாஸ் | | 2 | 1.30 |
| 04. பீ. சரோஜா | | 7.05 | 7 | 04. என். கமலநாதன் | | 13 | 1.30 |
| 05. டி. துஷாரா | | 7.10 | 9 | 05. என்.எம் காதர் | | 4 | 1.30 |
| 06. எஸ்.எம் ரியாஸ் | | 7.11 | 2 | 06. பீ. சரோஜா | | 7 | 1.31 |
| 07. எஸ்.எப் சானாஸ் | | 7.20 | 10 | 07. எஸ்.எப் சானாஸ் | | 10 | 1.32 |
| 08. என். கமலநாதன் | | 7.21 | 13 | 08. ஜே.எம் அஹமட் முன்தஸிர் | | 14 | 1.32 |
| 09. ஜே.எம் அஹமட் முன்தஸிர் | | 7.22 | 14 | 09. எஸ். பிரியதர்ஷனி | | 3 | 1.32 |
| 10. என். சசிகலா | | 7.23 | 16 | 10. டி. துஷாரா | | 9 | 1.33 |
| 11. பீ.ச். கீர்த்திகா | | 7.24 | 5 | 11. ம. ராஜா | | 6 | 1.33 |
| 12. என்.பீ சனத் | | 7.25 | 15- 7.30 | 12. என். சசிகலா | | 16 | 1.33 |
| 13. ஏ. அப்பாஸ் | 7.31 முதல் 7.59 வரை வருகின்றவர்கள் தாமதமாக வரும் புத்தகத்தில் பதிய வேண்டும். | 7.31 | 12 | 13. ஏ. அப்பாஸ் | | 12 | 1.36 |
| 14. எஸ்.திலகா | | 7.35 | 11 | 14. எஸ். திலகா | | 11 | 1.37 |
| 15. ம.ராஜா | | 7.40 | 06 | 15. என்.பீ.மொஹமட் | சென்ற நேரத்தில் கையொப்பம் இடாமையால் லீவு போடல் வேண்டும் | 6 | - |
| 16.என்.பீ.மொஹமட் | | 7.44 | 08- 7.45 | 16. டி.ஹுஸைன் | | 19 | - |
| 17.எம்.எச்.மைமூனா | 7.45ற்கு பிறகு வருகின்றவர்களின் பெயர்களை சிவப்பு நிறத்தில் எழுத வேண்டும் | L | 20 | 17. கே. யோகன் | (அதிபர்) | 1 | 2.05 |
| 18.டி.ஹுஸைன் | | N.I | 19 | | | | |
| 19.எஸ்.அகிலன் | | D.L | 18 | | | | |
| 20.என்.ரமேஷ் | | N.I | 17- 8.00 | | | | |
| 17.டி.ஹுஸைன் ½ மணிநேரம் தாமதித்தமையால் ½ நாள் லீவு | | 8.02 | 19 | | | | |

- அதிபரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்டவர் 7.30,7.45,8.00 சிவப்புக் கோடிட்டு சுருக்கக் கையெழுத்திட வேண்டும்.
- 7.45ற்குப் பிறகு வராதவர்கள் அமைய அல்லது சுகவீன லீவு அனுமதிக்கப்பட்டிருந்தால் அவர்களின் பெயர்களை சிவப்பு நிறத்தில் எழுதி "L" என்ற எழுத்தையும், கடமை லீவாகவிருந்தால் "D.L" என்ற எழுத்துக்களையும், அறிவிக்காது வராதிருந்தால் "N.I" என்ற இலக்கத்தையும் இடல் வேண்டும்.
- சேவைக்கு சமுகமளிக்க முன்னர் ஆரம்பத்தில் குறுகிய லீவை பெற்றுக் கொள்ள முடியாதென 2007.07.24 திகதிய பத்திரிகையில் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் கல்விப்பமைச்சர் கூறியுள்ளார்.

இங்கு குறுகிய விளக்கமும் தரப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல நடைமுறை சாத்தியங்கள் எப்படி இருந்தாலும் பாடசாலையின் முதல் நிரல் முகாமையாளரான அதிபர் தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் தொடர்பான தெளிவான விளக்கங்கள் பெற்றவராக இருக்க வேண்டும். பாடசாலை ஆளணியினருக்கும் இது தெளிவாக சொல்லப்பட்டு அறிவுறுத்தப்பட்டு இருந்தால் தேவையற்ற முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ளலாம்.

சில நூறு பாடசாலைகளின் அமைவிடங்கள் காரணம் காட்டி சட்டபூர்வமான சுற்றறிக்கைகளின்படி காரியங்கள் ஆற்றுவதை தவிர்க்க முடியாது. மேற்பார்வை அதிகாரிகளும், கணக்காய்வு உத்தியோகத்தர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவைகளை அடிப்படையாக முன்வைத்தே தமது அறிக்கைகளைத் தயாரிப்பார்கள்.

இவை எல்லாம் சாத்தியமா, இவைகளுக்கு எல்லாம் பாடசாலையில் செய்ய எங்கு நேரம் இருக்கின்றது? என்ற கேள்விகள் வரலாம். பாடசாலை என்ற நிறுவனத்தில் நேர முகாமைத்துவத்தை பேண முடியாமல் போனா வேறு எங்கு இவர்களால் கற்றுக்கொள்ள முடியும்?

முகாமைத்துவ பயிற்சி நெறிகள், ஆயிரக்கணக்கில் நடக்கின்றன. குழு மேற்பார்வை போன்ற விடயங்கள் பல்லாயிரக் கணக்கில் இடம்பெறுகின்றன. இவை தொடர்பாக கணக்காய்வு அறிக்கைகளும் வருகின்றன. அதிபர்கள் முழுநேரமும், பிரதி, உதவி அதிபர்கள் 25க்கு மேற்பட்ட பாட வேளைகளிலும் நிர்வாக, மேற்பார்வை கடமைக்காக வருவிக்கப்பட்டுள்ளார்கள். பெரிய பாடசாலைகளில் ஆவண வேலைகளுக்காக பல்வேறு பதவி நாமம் கொண்ட ஆளணியினர் உள்ளனர். ஆகவே பெரும்பாலான பாடசாலைகளில் இக்காலத்தில் முகாமைத்துவ பணிகள் இலகுவாக்கப்பட்டு பரவலாக்கப்பட்டுள்ளமையால் மேல்சொல்லப்பட்ட பணிகளை செய்வது கஷ்டமானது என்ற காரணத்தை தொடர்ந்து காட்டிக்கொண்டு இருக்க முடியாது. பின்வரும் இரண்டு தகவலும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் ஆகும்.

பாடசாலைகளில் ஆசிரியர் தொகை

| ஆசிரியர் தொகை | பாடசாலை | வீதம் |
|---|---|---|
| இணைக்கப்பட்ட | 15 | 0.15% |
| 1 ஆசிரியர் | 47 | 0.46% |
| 2 ஆசிரியர்கள் | 122 | 1.20% |
| 3-9 ஆசிரியர்கள் | 2,923 | 28.82% |
| 10-25 ஆசிரியர்கள் | 4,327 | 42.66% |
| 26-50 ஆசிரியர்கள் | 1,777 | 17.52% |
| 51-100 ஆசிரியர்கள் | 677 | 6.67% |
| 101 ஆசிரியர்களுக்கு மேல் | 256 | 2.52% |
| மொத்தம் | 10,144 | 100% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் சொல்லப்பட்ட அட்டவணையில் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் எண்ணிக்கை வீதத்தோடு காட்டப்பட்டுள்ளது. கீழே மாணவர் தொகையோடு இப்பாடசாலை எண்ணிக்கை அட்டவணை உள்ளது.

| பாடசாலைகளில் மாணவர் தொகை | | |
|---|---|---|
| மாணவர் எண்ணிக்கை | பாடசாலை எண்ணிக்கை | வீதம் |
| 1-50 | 1515 | 14.9% |
| 51-100 | 1538 | 14.20% |
| 101-250 | 2788 | 27.5% |
| 251-750 | 2859 | 28.2% |
| 751-1000 | 485 | 4.8% |
| 1001-1500 | 424 | 4.2% |
| 1501-2000 | 218 | 2.1% |
| 2000க்கு மேல் | 317 | 3.1% |
| மொத்தம் | 10144 | 100% |

இந்த ஆக்கத்திற்கு முற்றாக பொருத்தமில்லாவிட்டாலும் இந்த இரண்டு அட்டவணைகளை பார்த்தால் ஆசிரியர் பரம்பல் சரியாக இல்லை என்பது விளங்கும். இங்கு சுற்றறிக்கைகள், சொந்த கஷ்டங்கள் எல்லாவற்றையும் விட மாணவர்களின் கல்வி முக்கியமானதாகையால் நேர முகாமைத்துவப்படி கருமங்கள் நடைபெற இவை தொடர்பாக விளக்கங்கள் தேவையானபடியால் முரண்பாடுகளை குறைக்கும் வகையில் தான் இவைகளை தெளிவுபடுத்தியுள்ளேன்.

ஆசிரியர் வருகை தொடர்பாக நீண்ட கதையாடல் உண்டு. ஆனால் சுற்றறிக்கைகள் மேல்சொல்லப்பட்ட வகையிலேயே அமைந்துள்ளன என்பதை கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடும் வாசிப்பும்

✷ வே.சேந்தன்

கட்டுரையாளர்
ஆசிரியர்
யாழ்ப்பாணம்
யூனியன் கல்லூரி

பண்பாடு என்னும் போது குறியீட்டு ரீதியாக சமூகம் தனதாக்கிக் கொண்ட பாரம்பரிய நடத்தைக் கோலம், சிந்தனை முறை, வழிபாடு, வாழ்க்கை முறை, பழக்க வழக்கங்கள் முதலியவைகளைக் குறித்து நிற்கும். அந்த வகையில் வாசிப்புப் பண்பாடு என்ற வகையில் வாசிப்புக்களின் பெறுமானம், சமூகத்தின் சிந்தனைச் செல்நெறி என்பன இங்கு முதன்மை பெறுகின்றன.

அருகி வருகின்ற பெறுமானங்கள், பொருட்களுக்கு ஒரு தினத்தையோ அல்லது மாதத்தினையோ வருடத்தில் வைத்து அப் பெறுமானங்களுக்காக மனம் வருந்துவதும் நினைவுகூறுவதும் இன்றைய உலகளாவிய நடப்பாகவுள்ளது. இத் தினங்களையோ அல்லது மாதங்களையோ நாம் கொண்டாடுவதன் மூலம் அருகிவரும் பெறுமானங்களுக்கு புத்துயிர் கொடுத்துவிடலாம் என நம்புகின்றோம். ஆனால் இது சாத்தியமா என்பது வேறு விடயம்? ஒக்டோபர் வாசிப்பு மாதம் என்ற ஒன்றுக்காக வாசிப்புப் பற்றி சிந்திக்க வேண்டிய தேவை நம் அனைவரிடத்திலும் உள்ளது. குறிப்பாக கல்விச் சமூகத்துக்கு இந்தப் பணி முதன்மையாகவே உள்ளது.

எமது சமூத்தின் பண்பாட்டு வரலாற்றிலே வாசிப்பு ஓர் பண்பாடாகவே பின்பற்றப்பட்டு வந்துள்ளது. இந்த சமூக மரபுத் தொடர்ச்சியின் அங்கத்துவர் என்ற ரீதியிலே நாம் பழம் பெருமை பேசுவதற்கு நிறையவே சந்தர்ப்பங்கள் உண்டு. காலனித்துவ கால இலங்கையிலே புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதப் பரப்புகையுடன் இணைந்ததாக எமது வாசிப்பு பழக்கம் உருவாகியது. விவிலியத்தினை வாசித்து சுபிசேசதத்தை அறியவும் அடையவும் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு ஊடாக எம்மிடையே வாசிப்பு பழக்கம் உருவாகியது. கிறிஸ்தவ மதப் பரம்பலுக்கு எதிர்வினையாக சுதேச மத மறுமலர்ச்சி வாசிப்பை மேலும் வளப்படுத்தியது. நமது சூழலில் அச்சும் பத்திரிகையும் வளர்ச்சி பெற்றன. பத்திரிகை ஒன்றுடன் காலை விடியலை எதிர்நோக்கும் சமூகங்களாகவே நாம் வளர்ந்தோம்.

குறிப்பாக 19ம் நூற்றாண்டில் அரசியல் அமைப்புச் சீர்திருத்தம் வெவ் ஆவறு தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட போதும் மத்தியதர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்க்கத்தின் ஆங்கில அறிவின் காரணமாக உருவாக்கிய மாதாந்தச் சம்பளம் என்ற பொருளாதாரப் பெறுமானம் கல்வியைக் கவர்ச்சிகரமாக்கியது.

ஆங்கிலக் கல்வியை பொருளாதார ஆதாரமாக எடுத்துக்கொண்ட நாம் கல்வி கற்ற சமூகம் என நம்மை நாம் விளம்பரப்படுத்திக் கொண்டோம். கல்வியின் வாழ்வியல் ஆதாரம் மட்டும் அபிவிருத்திக்கான உந்து விசையாக அமையும் என எதிர்பார்த்தோம்.

ஆனால் சுதந்திர இலங்கையில் எம்மால் உழைக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியிலும் பார்க்க இலங்கையின் நலன்புரி அரசாங்கங்கள் எம் மக்களுக்கு மேற்கொண்ட சமூக நலத்திட்டங்களின் பலன்கள் அதிகமாயின. ஒரு வகையில் கடன்பட்டு சொகுசு வாழ்க்கைக்கு அறிமுப்படுத்தப்பட்டோம். மூலதனப் பற்றாக்குறை காரணமாக கல்வி மூலம் பெறவேண்டிய தேர்ச்சிகள் பெறுமதி இழந்து போக, போட்டிப் பரீட்சைகளுக்கு வேண்டிய கல்விச் சான்றுகள் முதன்மையாக்கப்பட்டன. சான்றுதல்களை பெறுவது தான கல்வியின் நோக்கமாயிற்று. இது மனித வளத்தின் பயனுறுதித் தன்மையை கேள்விக்குட்படுத்தியது.

அதேவேளை சமகாலத் தகவல் யுகம், இலத்திரனியல் தகவல்களின் கிடைப்பன்வை அதிகரித்தது. வலயமைப்புகளுக்கூடாக இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் எங்கள் கைகளுக்கு அடக்கமாக கிடைக்கின்றன. தகவலை நுகர்ச்சிக்கான பண்டமாக நவதாராளவாத சந்தை இனங்கண்டு அதனை வெற்றி கொண்டும் உள்ளது. இதேவேளை ஊடகங்கள் மற்றும் தகவல்கள் மூலதனத்தின் பக்கமே நின்று செயற்படுகின்றன. தனி மனிதனாகிய நுகர்வோர் தன்னை அறியாமலே சுரண்டப்படுகின்றான்.

இத்தகைய பகைப்புலத்திலே பண்பாட்டை எவ்வாறு திசைமுகப்படுத்தலாம். அறிவானது பொருளாதாரப் பெறுமானம் கொண்ட வளமாக சமகால கோலமயப்படுத்தப்பட்ட உலக சமூகத்திலே எம் இனம் சார்ந்த மக்களை எவ்வாறு அறிவின் உடைமையாளர்களாக்கலாம் அல்லது குறைந்த பட்சம் விழிப்புணர்வு மிக்க நுகர்வோராக்கலாம் என்பவை இன்றைய கல்விசார் சமூகம் எதிர்நோக்கும் மிகப்பெரிய சவலாகும்.

இன்று தகவல் அறியும் முறைகளுக்கூடாகவே எமது மட்டுப்பாடுகள் வெளித்தெரிகின்றன. இலத்திரனியல் ஊடகங்கள் குறுகிய நேர வாசிப்புக்கள், மேலோட்டமான வாசிப்புக்கள் எம்மை தகவல் அறியும் வாசகர்களாக மட்டுப்படுத்தி வைத்துள்ளனரே தவிர, பயனுறுதி மிக்க வாசகர்களாக நாம் உருவாகுவதற்கு வேண்டிய சந்தர்ப்பங்களை அழித்துவருகின்றன. அதற்கான முயற்சிகளையும் நாம் பெரிதாக மேற்கொள்ளவில்லை. இதற்கு இசைந்தால் போல் எமது கல்விப்புலமானது பரீட்சையை மையப்படுத்தியது. பரீட்சை மைய கலைத்திட்டமே பாடசாலைகளில் பலம் பெற்றன. பரீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுபேறுகளுக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் மனித வளத் தேர்ச்சிகளுக்கு அளிக்கப்படவில்லை.

இச்சூழமைவு வாசிப்பு என்பதும் எமது பண்பாடு என்ற நிலையிலிருந்து மருவிச்சென்று நெட்டுருக் கற்றல் என்பது எமது பண்பாடாக மாறியுள்ளது. இந் நிலையிலேயே தகவலும் ஒரு நுகர்பண்டமாக மாறியுள்ளது. கல்விசார் சமூகம் வாசிப்புப் பண்பாட்டை எதிர்காலத் தலைமுறையிடம் எவ்வாறு திசைமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கு எம்மில் பெரும்பாலானோரிடம் இல்லை. 21ம் நூற்றாண்டிற்கான எமது சமூகத்தின் வாசிப்புப் பண்பாட்டை வளத்தெடுக்கவேண்டுமாயின் அதற்கான பெரும் அர்ப்பணிப்பு மிக்க பொருத்தமான சேவைகளை தேர்ச்சிகளை நாம் பெறவேண்டிய நிலையில் உள்ளோம்.

பொதுவாக வாசகர்களை நான்கு வகையாக வகைப்படுத்தலாம் :

01. தகவல் அறியும் வாசகன்

02. நுண்ணறிவு மிக்க வாசகன்

03. புத்தொளி மிகு வாசகன்

04. வலுவூட்டப்பட்ட வாசகன்

இந்த நான்கு வாசகர்கள் இடையேயும் எமது சமூகத்துக்கு வேண்டப்பட்டவர்கள் வலுவூட்டப்பட்ட வாசகர்களே ஆகும். சமகால தகவல் யுகத்திலே அறிவுசார் சமூகத்திலே வலயமைப்புக்கு உட்பட்ட அறிவை வழங்கக்கூடிய ஆற்றல் மற்றும் விழிப்புணர்வுடன் கூடிய பிரக்ஞை வலுவூட்டப்பட்ட வாசகர்களுக்கு மட்டுமே இருக்க முடியும். எதிர்காலத் தலைமுறையினரை வலுவூட்டப்பட்ட வாசகர்களாக மாற்றுவதற்கு பாடசாலைகள், குடும்பங்கள் மற்றும் ஏனைய சமூக நிறுவனங்கள் யாது செய்யவேண்டுமென நோக்கின், இளம் தலைமுறைகளை எவ்வகையான நெறிப்படுத்தப்பட்ட பயிற்சிகளுக்குள் உட்படுத்தப்படுவது என சிந்திப்பது சாலப் பொருந்தும்.

மாணவர் மத்தியிலே மீஅறிகை ஆற்றலை வளப்படுத்துவதன் மூலம் பண்படுத்தப்பட்ட விழிப்புணர்வு மிக்க நுகர்வோனாக நன்கு சமூக மயப்படுத்தப்பட்ட வளமாக உருவாக்க முடியும் என கல்வியலாளர்கள் நம்புகின்றார்கள். மாணவர்களது மீள் அறிகையாற்றலனாது அவர்களது சிந்தனைச் செயல்முறை சுய நெறிப்படுத்தப்படும் என கல்வியாளர்கள் நம்புகின்றனர். மாணவர்கள் தமது சிந்தனைத் திறனை விருத்தி செய்வதற்கு தமது சிந்திக்கும் செயன்முறையிலே அக்கறை எடுக்கக்கூடிய வகையிலே நெறிப்படுத்தப்பட்ட பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும். அந்தவகையிலே

01. *Meta Memory* — மீ ஞாபகம் - குறித்த நபர் ஒருவர் தமது ஞாபகம் பற்றி தான் அறிந்திப்பவற்றை இது குறிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. *Meta Knowing* ___ மீ அறிதல் - குறித்த நபர் ஒருவருக்கு தனது அறிகைச் செயல்முறை பற்றிய விழிப்புணர்வு

03. *Thery of Memory* ___ ஞாபகம் பற்றிய கோட்பாடு

04. *Self Regulation* ___ சுய நெறிப்படுத்தல்

இந் நான்கினையும் இணைத்து அறிகைச் செயன்முறையை வளப்படுத்த வேண்டும். இச் செயன்முறையானது பின்வருமாறு அமையப் பெறவேண்டும்.

பருபொருள் மட்டம் — அறிதல், சிந்தித்தல், நம்புதல், ஊகித்தல், ஞாபகப்படுத்துதல் மீஅறிகை மட்ட எண்ணக்கரு.

மேற்படி செயன்முறையை மாணவர்களுக்கான வாசிப்பு சந்தர்ப்பங்களிலே தமது சிந்தனைச் செயல்முறையை விரிவாக்கக் கூடிய வகையில் அண்மைவிருத்திவலயங்களை உருவாக்க வேண்டும். மாணவர்களது சிந்தனை ஆற்றலை மேம்படுத்துவதற்கு ஏற்ற சூழலை குடும்பங்கள் மற்றும் பாடசாலைகள் உருவாக்க வேண்டும். மாணவர்களால் எதிர்கொள்ளத்தக்க, வெற்றிபெறத்தக்க, கிரகித்தற் பயிற்சிகள் திட்டமிடப்பட்டு வழங்கப்பட வேண்டும்.

வாசிப்புக்கு பின்னர் மாணவர்கள் தமது வாசிப்பு, கிரகிப்பு, விளங்கி கொண்டமை தொடர்பில் சிந்தனையை மீள்நோக்கி சிந்திப்பதற்கு ஆற்றுப்படுத்த வேண்டும். நீண்ட வாசிப்புகளுக்கு இடைஇடையே தமது சிந்தனைச் செயல்முறையை கட்டுப்படுத்தவும், மேற்பார்வை செய்யவும் மீள்நோக்கு சிந்தனையை அதன் ஆரம்ப கட்டங்கள் வரை ஆசிரியர்கள் நெறிப்படுத்த வேண்டும். வளர்ச்சியுற்ற கட்டங்களில் மாணவர்கள் தமக்கு தாமே சுயவினாதொடுத்தலை மேற்கொண்டு இவ்வாறு வாசிப்புகளுக்கு இடையிடையே மீள்நோக்குச் சிந்தனையை மேற்கொள்ளுவதன் மூலம் மாணவர்கள் சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றோராக உருமாற்ற முடியும்.

மாணவர்கள் தமது ஞாபக ஆற்றலை, சிந்தனைச்செயல்முறையை, தீர்மானம் எடுத்தலை விமர்சன கண்ணோட்டத்துடன் நோக்கவேண்டும். மீளாய்வு செய்யவேண்டும். இதன்மூலம் சமகாலத்திலே சகபாடிக்குழுக்களில் சமூக முரண்பாடான நடத்தைகளிலிருந்தும் மாணவர்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளலாம் என கல்வியலாளர்கள் நம்புகின்றனர். சுய விமர்சனமுடைய மாணவர் சுய கட்டுப்பாடு உடைய மாணவராக உருவாக முடியும். எனவே சுய விமர்சனமுடைய மாணவர்களை உருவாக்குவதற்கு மீஅறிகை ஆற்றலை கற்றல் கற்பித்தல் செயன்முறையின் போது மாணவர்களது அண்மைவிருத்தி வலயங்களில் வைத்து மாணவர்களை ஆற்றுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு மேற்கொள்ளுவதன் மூலமே தகவல் அறியும் வாசகர் என்ற நிலையிலிருந்து வலுவூட்டப்பட்ட வாசகராக எதிர்காலத் தலைமுறையினரை உருவாக்க முடியும். சிந்தனைச் செயன்முறையின் பண்புத்தர மேம்பாடு எமது எதிர்காலச் சமூகத்தின் பண்பாட்டு விருத்திக்கான பிரதான நுழைவாயிலாக அமையும் என்பது எமது எண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

# வாசிப்பு ஊக்குவிப்பில் ஊடகங்கள்

* எஸ்.ரகுராம்

கட்டுரையாளர்
ஊடகவியல் கற்கையில் முனைவர் பட்டம் பெற்றவர். முதுநிலை விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்

இன்றைய ஊடக உலகில் உருவாகி வருகின்ற புதிய போக்குகள், வாசிப்புத் தளத்திலும் கனதியான மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றன.

மிகச் சமீபத்திய ஆய்வொன்றின்படி - இலங்கையில் மக்கள் தமக்கான தகவல்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தும் மூலங்களாக, ஊடகங்களை வரிசைப்படுத்தியதன் பேரில், முதலில் தொலைக்காட்சியும், தொடர்ந்து இணையமும், பின்னர் - பத்திரிகைகளும், வானொலியும் இடம்பெறுவதாகத் தெரியவந்துள்ளது.

இது தகவல் மூலங்களின் தெரிவாக அமைந்தாலும், மக்கள் பொதுவில் தற்காலத்தில் ஊடகங்களை நாடக்கூடிய போக்கை இது குறித்த வரிசைக்கிரமத்தின் வழியே நாம் அறிய முடியும்.

ஒரு காலத்தில், தகவல் மூலங்களாக அமையக்கூடிய நம்பகத் தன்மையையும் ஆவணப்படுத்தக்கூடிய வசதியையும் கவனத்திற்கொண்டு, பத்திரிகைகள் பெற்றுக்கொண்ட இடம் - இன்று, தொலைக்காட்சியினாலும், இணையத்தினாலும் நிரப்பப்படுகின்றது என்பது, ஊடகங்களை மக்கள் பயன்படுத்தக்கூடிய போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்து வருவதை எடுத்துக்காட்டுகின்றது.

அதேவேளை, ஊடகங்களின் புதிய தொழிநுட்ப வளர்ச்சியின்பாலான கவனஈர்ப்பையும் மேவி, ஊடகங்கள் முன்வைக்கக்கூடிய புலன்சார் வாய்ப்புக்களின் பரிமாணங்கள் ஊடாகவும் இந்த மாற்றத்தை நோக்க முடியும்.

இது "வாசிப்பு" என்ற பரப்பினுள் புதிய அறிமுகங்களைத் தந்திருப்பதோடு, அதற்கான அனுசரணைகளையும் உருவாக்கியிருப்பதை இங்கு சில குறிப்பிடல்கள் மூலம் அவதானிக்க விழையலாம். இதற்கு வாசிப்பின் அடிப்படைகளில் ஒன்றான "பனுவல்" *(Text)* என்ற கருத்துருவாக்கத்திலிருந்து இந்த நோக்கினை ஆரம்பிக்க முடியும்.

ஒரு அச்சு ஊடகத்தின் "பனுவல்" என்பது, அதன் உள்ளடக்கத்தை, அமைப்பைப் பேசும் அல்லது எடுத்துக்காட்டும் ஒரு ஒற்றைப்பரிமாண அர்த்தத்தைத் தருவதிலிருந்து இன்று மாறுபட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில், "பனுவல்" என்பது அச்சாக்கப்பட்ட அல்லது கறுப்பு - வெள்ளை ஆவணங்களையும் கடந்து, தொலைக்காட்சி உள்ளடக்கங்கள், திரைப்படங்கள் என்பவற்றையும் குறித்து நிற்பதை - இன்று அவற்றின் உள்ளடக்கங்களை ஆராயத்தலைப்படும் எவருமே கவனத்திற் கொள்கின்றனர்.

அது, தொலைக்காட்சியினதும் திரைப்படங்களினதும் கதையமைப்பு, வசனங்கள் போன்ற கதையாடல் கட்டமைப்புக் கூறுகளை *(Elements of narrative structure)* கடந்து, தொழிநுட்ப விடயங்கள், அவை பயன்படுத்தப்பட்டிருக்கும் விதம், அவை தோற்றுவிக்கக்கூடிய அர்த்தங்கள் ஆகியவற்றையும் ஆராயக்கூடிய ஆழமான உள்ளடக்க ஆய்வுக்கு *(Content analysis)* இட்டுச்செல்கிறது.

அதன்வழியே, ஒரு பனுவலின் மீதான வாசிப்பு என்பதும் அதன் கறுப்பு - வெள்ளைப் பரிமாணங்களைக் கடந்து, ஒலி வடிவிலானதும் ஒளி - ஒலி வடிவிலானதுமான ஊடகப்படைப்புகளை உள்வாங்குதல் அல்லது அவற்றை வாசித்தறிதல் என்ற பரிமாணத்திற்குள் எம்மை எடுத்துச்செல்கிறது.

மிக எளிமையாகச் சொல்வதானால், ஒரு கவிதையையும் அதன் அளிக்கையையும் கருதும்போது கவிதை வாசித்தல் என்ற நிலைகடந்து - கவிதை கேளுங்கள், கவிதை பாருங்கள் என்றவாறு அது ஒலி மற்றும் காட்சிப்புலம் வழியாகவும் முன்வைக்கப்படும் காலம் இது என்பதை நாம் கவனத்திற்கொள்ளலாம்.

இதன்வழியே, ஊடகங்களின் வளர்ச்சியின் பேறாக "புதிய ஊடகங்கள்" *(New Media)* என்ற கருத்துருவாக்கத்திற்குள் கொண்டுவரப்படும் இணைய ஊடகப்பரப்பின் காலத்தில் பிந்தைய படைப்புக்களும் புதிய போக்குகளுக்கு களம் சமைப்பனவுமான "சமூக ஊடக வலைப்பின்னல்கள்" *(Social Media Network)* தரக்கூடிய வாசிப்புப் பரிமாணங்களை தொட்டுச் செல்வதாக இந்தக் குறிப்பு ஆரம்பமாகிறது.

**சமூக ஊடகங்களும் வாசிப்பும்**

ஒருபுறம், விரைந்துசெல்லும் உலகின் ஒரு தெறிவினையாக இணையமும் அதன் படைப்புக்களும் கருதப்படும் இடத்தில் பாரம்பரியமான "வாசிப்பு" என்ற கருத்துருவாக்கத்தின் அடிப்படையான "ஆழமான வாசிப்பும் தேடலும்" மிக இலகுவாகக் கடந்துபோகும் வண்ணம், அதற்கு மாற்றாக "தகவற் சிதறல்களை" *(Information titbits)* முன்வைப்பதாக அமையும் சமூக ஊடகங்களின்பால் "வாசிப்பு" தரக்கூடிய புதிய வாய்ப்புக்களை ஆராய்வது இன்றைய காலத்தின் தேவையாகிறது.

குறிப்பாக, ஊடகப்பயன்பாட்டின் பிந்தைய வடிவமாக இணையமும், குறிப்பாக சமூக ஊடகங்களும் பெற்றுவரும் முக்கியத்துவம், அவற்றைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் வேகம், ஊடகங்களின் வெவ்வேறு வடிவங்களையும் தனக்கான பரப்பினுள் குவிக்கும் "ஊடகமையமாக" *(Convergent Media)* அது மாறுதல் அல்லது அதற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்கள் என்பவற்றின் அடிப்படையில் - வாசிப்பினையும் நாம் அதற்கான புதிய போக்குகளையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது.

அந்த வகையில் - வாசிப்பு, அதன் தொடர்ச்சியான பின்னூட்டல்கள், அதிர்வுகள் ஆகியவற்றைக் கலந்துரையாடல் தளமொன்றுக்கு கொண்டுவரும் ஆகக்கூடிய தரவேற்றல் வேகங்கொண்ட *(Possivilities for updates)* கருத்துக்களமாக இணையவழிச் சமூக ஊடகங்கள் இன்று திகழ்கின்றன.

தகவல்களின் பரிமாற்றம், அவற்றை கருத்துப் பகிர்வுகளுக்கு ஆளாக்குதல், அபிப்பிராயங்களை முன்வைத்தல் என்பன பாரம்பரிய ஊடகங்களிலும் பார்க்க சமூக ஊடக வலைப்பின்னல்களில் அதிகம் கொண்டாடப்படுகின்றன.

இங்கு "கொண்டாட்டம்" என்ற பதம் எடுத்தாளப்படுவது, வாசிப்பையும் பகிர்வையும் அடுத்தவரின் கவனஈர்ப்புக்கு எடுத்துச் செல்லும் அல்லது அடுத்தவரையும் வாசிப்பிற்கோ, பகிர்விற்கோ தூண்டக்கூடிய ஒரு "கிளர்வாக" அந்தச் செயற்பாடு அமைவதைக் குறிப்பதாகிறது.

இங்கு, வாசிப்பின் உடனடியான தெறிவினைகள் மிக வீச்சுடன், மிகத் துரிதமாக தமக்கான வட்டங்களில் வாசகர்களால் முன்வைக்கப்படுவதுடன், பதில் வினைகளும் அதே வீச்சும் துரிதமும் கொண்டிணைவது குறிப்பிடத்தக்கது.

ஒப்பீட்டு ரீதியிலான இந்தச் சமகாலத் தொடர்பாடல் *(Simultaneous Communication)* ஏனைய எந்த ஊடகங்களிலும் காணக்கிடைக்காதது மாத்திரமல்ல, எழுத்துவடிவில் என்றில்லாது - எதிர்வினைகள் ஒலி வடிவிலும் ஒளி - ஒலி வடிவிலும் இணைக்கப்படும் வாய்ப்பு, எதிர்வினைகளுக்கான இன்னுமொரு படைப்பாக்க வழிமுறையாகிறது. இது, பகிர்வு வட்டங்களில் அதிகம் பேரை கலந்துரையாடலில் கவனம் செலுத்தவும் உள்வாங்கவும் வாய்ப்பாகின்றது. பொதுவில் - நேரடிக் கலந்துரையாடல்களில் பங்கேற்க ஆர்வம் காட்டாதோர், வெவ்வேறு புவியியற் பிரதேசங்களில் வசிக்கக் கூடியோர், வேலைப்பழுக்களில் மூழ்கியிருப்போர் வாசிப்பின் பகிர்வை இந்த மாற்றுவழியில் முன்வைக்க அதிகம் கரிசனை காட்டி வருகின்றனர்.

தாம் வாசிப்பதைப் பகிர்வது *(Sharing)* அதற்கான மூலத்தின் தொடர்பினைத் தொடுக்குவது *(Access the source through hyperlink)* என ஆரம்பிக்கும் இந்தக் கருத்துப்பகிர்வுகள் - பார்வைகள், அபிப்பிராயங்கள், இசைவான அல்லது முரண்படும் போக்குகளின் அறிமுகம் ஒத்த பனுவல்களை இனங்காண்பது, அவற்றை விவாதிப்பது என விரிந்துசெல்வதை சமூக ஊடகங்களில் பரவலாக இன்று அவதானிக்க முடிகிறது.

ஒருபுறம், சமூக மற்றும் குடும்பத் தொடர்புகளிலிருந்து - சமூக ஊடக வலைப்பின்னல்கள் மனிதர்களைத் தனியாட்களாக்குவதாக குற்றஞ்சாட்டப்படும் வேளையில் - அந்தத் தனிமையை வாசிப்பிற்கான அனுசரணையான சூழலாக மாற்றியமைப்பதும், அந்தத் தனிமை என்பது ஆள்சார்ந்த உடற்பிரிவை மாத்திரம் முன்வைக்கும் அதேவேளை, சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்கள் உலாவும் இணைய வெளியில் அது கனத்த தொடரான தொடர்புகளை பேணுவதாக அமையக்கூடியதாக உருவாவதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஒரு அமைதியான நூலகத்தின் தனிமைக்கோ அல்லது நிசப்தமான வீட்டுச் சூழலிற்கோ சைபர்வெளியில் நாடும் தனிமை எவ்விதக் குறைவும் தரக்கூடியதல்லவே என்பதை இங்கு நேர்முகமாக நாம் நோக்க முடியும்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல, வாசிப்பு என்பது கறுப்பு - வெள்ளை ஆவணங்களுக்கும் அப்பால் பல்லூடகம்சார் அனுபவமாக *(Multimedia Experience)* கொள்ளப்படும் வேளையில், வாசிப்பு என்பதன் புதிய பரிமாணமும் வெவ்வேறு தளங்களில் மாற்றமடைவதைத் தடுக்கமுடியாதே போகும்.

ஊடகக்குவிமையமாக, பல்லூடகம்சார் படைப்புக்களும் சங்கமிக்கும் தளமாக இணையவெளி பெருமளவில் திகழ்வதை இதன்பேரில் கூர்ந்து கவனிக்கலாம்.

இணையப் பத்திரிகைகள், இணையச் சஞ்சிகைகள், இணையவழி இலத்திரனியல் அச்சாக்கங்கள், இணைய வானொலிகள், ஒலி வடிவிலான குறிப்புக்கள், இணையத் தொலைக்காட்சிகள், வீடியோப் பதிவுகள், நேரடிக் காட்சிகள் என எவற்றையும் உள்வாங்கும் இந்த வெளி - பரவலான பல்லூடகம்சார் "வாசிப்பு" அனுபவத்தினை இன்னமும் விரிவாக்கும் என்பது உணரப்பட வேண்டும்.

சமூக ஊடக வலையங்களில் பகிரப்படும் தகவல்கள் - பெருமளவில் குறுந்தகவல்கள் அல்லது தொடர்ச்சித்தன்மையற்ற வடிவங்களில் காணப்படும் பனுவல்கள் எனக் கூறப்படுமிடத்து "வாசிப்பு" என்பது நீண்ட பனுவல்களின் வழியான ஆழமான பயணம் என்ற கருத்துருவாக்கமும் மீள்வாசிப்பிற்குட்படுத்தப்பட வேண்டிய தேவையிருப்பதை சிந்தனையில் கொள்ள வேண்டியிருக்கிறது.

"வாசிப்பு" என்பதன் நிச்சயிக்கப்பட்ட இலக்காக வாசிப்பின் வழியான உள்வாங்குதல் கருதப்படுமாக இருந்தால், அந்த உள்வாங்கலின் சாத்தியப்பாட்டை எவ்வழியிலும் நிறைவேற்றுதல் என்பது தகவல்களின் பெறுமதியில் அல்லது அவற்றின் பரிமாணத்தில் மாற்றத்தைக் கொண்டிராதபோது, உள்வாங்குதலின் அளவின் வழியான அளவீட்டில் மாத்திரம் கவனம்கொள்வது மீள்பரிசீலிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, குறித்த கருப்பொருட்களைத் தேடுவதற்காக, அவை இயங்கக்கூடிய நீண்ட பனுவல்களை வாசித்தறிவதற்கான தேவையை இன்றைய திறவுச்சொல் தேடல்களும், தேடற்பொறிகளும் *(Searching keywords and search engines)* இணையத்தில் இழிவளவாக்கியிருப்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டியிருக்கிறது. தேடல் என்பதன் வெளிப்படையான அர்த்தமாக அமையக்கூடிய, குறித்த கருப்பொருட்களை அறிவதற்கான நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பு என்பதன் தேவையும் அவசியமும் இங்கு மிகக் கணிசமானளவில் பொறிமுறைசார்ந்த இணையவழி வாசிப்பில் சுருக்கமாக்கப்பட்டிருக்கிறது.

தேவையான தகவல்களை, அச்சொட்டாக மிகக் குறிப்பாகப் பெற்றுக்கொள்வதற்கான காலச்செலவீனம் குறைந்திருப்பது, வாசிப்புப் பழக்கத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய மாற்றமென்பதில் மறுகருத்திருக்க முடியாது. ஆழமான வாசிப்பு என்பது ஒருவரது ஆளுமை வளர்ச்சியிலும் மன எழுச்சியிலும் காத்திரமான பங்கைச் செலுத்தும் என்பது உறுதியாயினும், அந்த ஆழமான வாசிப்பினை புத்திசாதுரியமாக அணுகும் போக்காவும் இதனைக் கொள்ள முடியும்.

ஆனால், சமூக ஊடக வலைப்பின்னல்களிலும் இணையத்தளங்களிலும் வாசிப்பு பெருமளவில் "தட்டிச்செல்லும் பந்திகள்" எனும் போக்கில் இருப்பது, பாரம்பரியமான வாசிப்பில் கணிசமான தாக்கத்தைச் செலுத்துவதுடன், குறிப்பாக இளம்பராயத்தினரின் கல்விச் செயற்பாடுகளில் "பறவைப் பார்வை"யிலான வாசிப்பையும், தீவிரமான ஆழமான வாசிப்புத் தேவைப்படும் சமயங்களில் மேலோட்டமான நோக்கிற்கும் இட்டுச்செல்வதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

இணைய வாசிப்பில் பனுவல்களின் வழியே பயணிக்கும்போது தொடுகை, தள்ளுகை, நகர்ந்து செல்லுதல், தள்ளிச்செல்லுதல் போன்ற *(Touching, Pushing, Linking, Scrolling and Jumping through text)* செயற்பாடுகளில் ஈடுபட்டு, அதற்குப் பழக்கப்படும் நாம், கறுப்பு - வெள்ளை ஆவணங்களிலும் அதனைச் செய்யத் தலைப்படுகிறோம் என ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

இந்த தகவல் நடத்தையின் *(Information behaviour)* புதிய கோலம் - இணையத்தள வடிவமைப்புக்களில் காணக்கூடிய அதிகரிக்கும் போக்கிலுள்ள அசைவூட்டம், வர்ணம் *(Increased use of animation and colour)* ஆகியன வழியே புதிய வாசிப்பு முறையியல்களுக்கு இன்னமும் புதிய தன்மைகளைத் தரக்கூடும்.

எது எவ்வாறியிருந்தாலும், ஊடகத் தொழினுட்ப வளர்ச்சியின் பேறாக "வாசிப்பு" என்பதன் பரிமாணம் மாற்றங்களுக்கு ஆளாகுவதை நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டியிருக்கிறது.

அந்த மாற்றங்களை எவ்வாறு நேர்முகத்தன்மையுடன் உச்சபட்சமாக சாதகமாக்கிக் கொள்ளலாம் என்பதில் நாம் அதிகம் கவனமும் செலுத்த வேண்டியிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துத் தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் யாழ்ப்பாணத்து சைவாசிரிய கலாசாலை

✸ தி.செல்வமனோகரன்

கட்டுரையாளர்

வருகைத்தரு விரிவுரையாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

தமிழகத்தைப்போல ஈழத்துச் சைவக்கல்வி மரபும் தொன்மையும் தனித்துவமும் வாய்ந்ததாகும். காலனித்துவ ஆட்சியில் குறிப்பாக போர்த்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் சைவப்பாரம்பரியம் சற்று ஈடாட்டம் கண்டது. அதிகாரவர்க்கம் தன்மேலாண்மையால் தன் மதப்பரம்பலுக்காக சுதேச சமயங்களை - பண்பாடுகளை இல்லாதொழிக்க முனைப்புடன் தொழிற்பட்டது. ஆங்கிலேய ஆட்சியிலும் அந்நிலை நீங்கியபாடில்லை.

ஆயினும் 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஈழத்துச் சைவர்களின் கற்றறிச் சூழல் புதுயுகம் ஒன்றிற்கான அறைகூவலை விட உதவிற்று. எமது தேசம், தன் சுதேச மொழி, சமய, பண்பாட்டம்சங்களை தொலைத்துவிடாது, மீட்டுருவாக்கம் செய்யவும் நல்லைநகர் ஆறுமுகநாவலர் பற்பல பணிகளைச் செய்தார்.[1] தேசிய சிந்தனாவாதியாய் கருத்தியல் விடுதலைக்கு எதிராக முள்ளை முள்ளால் எடுப்பது போலக் கிறிஸ்தவர்கள் தம் சமயப் பண்பாட்டுப் பரவலாக்கத்திற்கு எவையெவற்றைப் பயன்படுத்தினார்களோ அவையவற்றை நாவலரும் பயன்படுத்தினார். சைவ மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

இம்மறுமலர்ச்சியை நிலைப்படுத்த உதவும் முக்கிய செயற்பாடாக அவர் கருதியது சைவர்களுக்கு சுதேச சமயக் கல்வியூட்டலாகும். சைவத்தமிழ்க் கல்வியோடு ஆங்கிலமும் தேவை எனக் கருதினார். அதற்காகப் பல சைவப்பாடசாலைகளை உருவாக்கினார். சைவ ஆங்கிலப் பாடசாலை செயற்றிட்டத்தில் அவர் தோல்வியுற்றது துரதிஷ்டவசமானது. ஆயினும் அவர் வழிவந்த சேர்.பொன். இராமநாதன், சேர்.பொன்.அருணாசலம், த. கைலாசப்பிள்ளை, காசிவாசி செந்திநாதஐயர் உள்ளிட்ட பெரியவர்கள் பலர் நிறுவன ரீதியிலும் தனிப்பட்ட நன்கொடைகள் மூலமும் சைவத் தமிழ்ப் பாடசாலைகளையும் சைவாங்கிலப் பாடசாலைகளையும் உருவாக்கினர்.

நாவலரின் மரணத்தின் பின் தோன்றிய சைவ பரிபாலன சபையும் பல பாடசாலைகள் உருவாக முன்னின்றுழைத்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உருவாக்கமும் அதனை நிர்வகித்த சபையும் சைவக்கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்புச் செய்தன. பல அறிஞர்களின் முயற்சியினால் அரசு, சைவப் பாடசாலைகளுக்கும் உதவி நன்கொடை வழங்க முன்வந்தது.[2] இதன்வழி மேலும் பல பாடசாலைகள் உருவாயின. ஆயினும் அங்கு கற்பிக்க சைவம், தமிழ், ஆங்கிலம் தெரிந்த - பன்முக அறிவுள்ள சுதேசிகள் ஆசிரியர்களாக இல்லை என்பது பெருங்குறையாயிற்று. இச்சிந்தனை வழி ஆசிரிய கலாசாலைகள் உருவாகின.

**கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலைகள்**

இலங்கையில் 1834ஆம் ஆண்டில் வடமாகாணத்தில் 249 சைவத் தமிழ்ப் பாடசாலைகளும் 160 கிறிஸ்தவப் பாடசாலைகளும் 24 றோமன் கத்தோலிக்கப் பாடசாலைகளும் இருந்தன.[3] வெளிநாட்டவர்களும், வெளிநாட்டில் கல்வி கற்றவர்களும், மதபோதகர்களுமே கிறிஸ்தவப் பாடசாலைகளின் ஆசிரியர்களாக விளங்கினர். மதமாற்ற நடவடிக்கைகள் பெருகப் பெருகப் பாடசாலைகளும் அதிகரித்தன. மாணவர்களும் அதிகரித்தனர். இதனால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படத் தொடங்கியது.

இதனை நீக்க வட்டுக்கோட்டை அமெரிக்க மிஷன் தன் சர்வசாஸ்திரக் கலாசாலையில் 1845ஆம் ஆண்டு *THE NORMAL SCHOOL* எனும் நியமப் பாடசாலையை ஆரம்பித்தது.[4] 1855இல் சர்வசாஸ்திரக் கலாசாலை "தோம்சன் ஆண்டர்சன்" ஆணைக்குழுவின் முன்மொழிவினால் இடைநிறுத்தப்பட்டது. 1859இல் மீளவும் ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் சர்வசாஸ்திர கலாசாலை இருந்த இடத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி உருவானபோது 1871இல் இவ்வாசிரிய கலாசாலை கிறிஸ்தவப் பகைப்புலத்தை அடிப்படையாகக் கொண்ட தெல்லிப்பழைக்கு இடம்மாற்றப்பட்டது. இது ஆண்களுக்கான கலாசாலை. சமகாலத்தில் இச்சபையால் உடுவிலில் மகளிர் ஆசிரிய கலாசால்லயும் உருவாக்கப்பட்டது.

சேர்ச் மிஷனரி சபையினர் கோப்பாயில் ஆண்களும் பெண்களும் இணைந்து கற்கக்கூடிய ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையையும், வெஸ்லியன் திருச்சபையினர் 1837ஆம் ஆண்டு கொட்டடியில் ஆண்களுக்கான கலாசாலையையும் வேம்படியில் பெண்களுக்கான கலாசாலையையும் தோற்றுவித்தனர். கத்தோலிக்கத் திருச்சபை 1881இல் கொழும்புத்துறையில் ஆண்களுக்கான கலாசாலையையும் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் பெண்களுக்கான கலாசாலையையும் உருவாக்கியது.

அமெரிக்க மிஷன் தன் தெல்லிப்பழைக் கலாசாலையில் கைத்தொழிற் கல்விப் பிரிவையும் 1878இல் ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது. 1884இல் இங்கு வருகை தந்த மகாதேசாதிபதி ஆதர் கோடன் இக்கைத்தொழிற் கல்வியைப் பாராட்டியதோடு இங்கு கற்ற சி.கே.யேசுதாசன் என்பவரை அமெரிக்க கைத்தொழிற்பாடசாலை ஒன்றில் கல்வி கற்கப் புலமைப்பரிசிலும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.[5]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சைவர்களின் கல்வி நிலை

கிறிஸ்தவ மத, பொருளாதார, கல்வி நடவடிக்கைகளால் கிறிஸ்தவப் பாடசாலைகள் வளரவளர சைவப் பாடசாலைகளும் சைவக்கல்வியும் தேய்நிலை உற்றன. பல பாடசாலைகள் மூடப்பட்டன. திண்ணைப் பள்ளிகளே ஓரளவு காணப்பட்டன. மரபு வழிக்கல்வியே போதிக்கப்பட்டது. இச்சூழலில் கிறிஸ்தவ கல்லூரியில் நவீன கல்வியை கற்ற நல்லூர் ஆறுமுகம் சைவத்தின் நிலைகண்டு ஏங்கித் தன் வாழ்வை சைவத்துக்காய் அர்ப்பணித்தார். நவீன சைவக்கல்வி மரபை தோற்றிவிக்க அரும்பாடுபட்டார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றார். அவர் பணி வழி ஈழத்துச் சைவ சமூகம் விழிப்புணர்வு பெற்றது. ஆங்கிலமும் சைவமும் இணைந்த கல்வியை உருவாக்க முயற்சித்தது. நாவலரின் சைவாங்கிலப் பாடசாலைக்கான கனவை அவரின் மறைவின் பின் உருவான சைவபரிபாலனசபை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை சைவாங்கிலப் பாடசாலையாக உருவாக்கி நிறைவு செய்தது.

ஈழத்தில் மிகச்சிறந்த முறையில் நவீன சைவாங்கிலக் கல்வியைத் திட்டமிட்டு உருவாக்கவும், நவீன நிர்வாக முறைக்குட்பட்ட ஆண், பெண் பாடசாலைகளையும் சைவாசிரிய கலாசாலைகளையும் உருவாக்கிய பெருமகனாக சேர்.பொன். இராமநாதனையே சுட்டஇயலும்.[6] நாவலர் வழி நின்று கிறிஸ்தவ ஊடுருவலை தடுக்கவும் சைவவாங்கிலக் கல்வியை மேம்படுத்தவும் சைவ சமூக மேம்பாடு நிகழ பெண் கல்வியின் அவசியத்தினை உணர்ந்து அதனைச் செயற்படுத்தவும் முற்பட்டவர் அவரே.

### சைவாசிரிய கலாசாலைகள்

நாவலர் காலத்தும் அவரின் மறைவின் பின்னரும் பல சைவப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. சைவபரிபாலன சபை, விவேகானந்த சபை உள்ளிட்ட சைவ நிறுவனங்களும் தனிப்பட்ட சைவர்களும் சைவப் பாடசாலைகளை நிறுவினர். கிறிஸ்தவ மதப்பரம்பலை தடுப்பது இதன் அடிப்படை நோக்கம். எனினும் சைவக்கல்வி வளர்ச்சியில் அவர்கள் கொண்டிருந்த அக்கறையையும் இது புலப்படுத்துகின்றது. சைவப் பாடசாலைகள் பெருகியபோதும் அதனை நிர்வகிக்கவும் அங்கு கற்பிக்கவும் கிறிஸ்தவப் பாடசாலைகளையும் கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலைகளையுமே நம்பி இருக்க வேண்டிய நிலை இருந்தது. குறிப்பாக அரச நன்கொடையைப் பெற, பயிற்றப்பட்ட தராதராப் பத்திரமுள்ளவர்களே தலைமையாசிரியராக, ஆசிரியராக இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.[7] இதனால் சைவப்பாடசாலைகள் பெரும் இடர்பாடுகளுக்கு முகம்கொடுத்தன.

அதேவேளை கிறிஸ்தவ ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சி பெற வேண்டுமாயின் சைவர்கள் கிறிஸ்தவர்களாக மதம்மாற வேண்டி இருந்தது. சிலர் மதம்மாறினர். அவருட் சிலர் தராதரப்பத்திரம் எடுத்ததன் பின் சைவராயினர். இது சைவர்களுக்கு தர்மசங்கடமான சூழலாகவே அமைந்தது. இந்நிலையில் கிறிஸ்தவத்துக்கு மதம் மாறாததால் பரீட்சை எழுதியும் தராதரப்பத்திரத்தைப் பெற முடியாத காரைநகர் அருணாசலம் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவாசிரிய கலாசாலை ஒன்றை நிறுவ வேண்டும் எனக் கங்கணங்கட்டி நின்றார்.[8] இச்சிந்தனை வழி தாமே தம்மூரான காரைநகரில் ஓர் ஆசிரிய கலாசாலையை நிறுவ முயன்று தோல்வி கண்டார். ஆயினும் அவரின் முயற்சி தொடர்ந்தது.

அதன் பயனாக கீரிமலைச் சிவன் கோவிலுக்கு அண்மித்த கிருஷ்ணபிள்ளை மடத்திற்கு வடதிசையில் மாதகல் பிரம்மஸ்ரீ ஏரம்பையர் வாழ்ந்து கொண்டிருந்த வீட்டில் கலாசாலை தொடங்கப் பெற்றது. மக்களிடம் 1913.07.09 திகதியிடப்பட்ட செய்தியூடாக நிதியும் கோரப்பட்டது. சட்டசபை உறுப்பினர் அ. கனகசபை தலைவர், பிரசித்த நொத்தாரிசு திரு.T.S துரையப்பா செயலாளர், திரு.S விஸ்வப்பா பொருளாளர் ஆகவும் நியமிக்கப்பட்டனர். பிற்காலத்தில் இந்துபோட் சு. இராசரத்தினம் என அழைக்கப்பட்ட திரு. சு இராசரத்தினமவர்களே அக்கலாசாலையின் முகாமையாளர். திரு.கே. இளையதம்பி அதிபர்.[9] இவ்வாளுமை மிக்க ஆளணியிருந்தும் இரு வருடத்துக்குள் இக்கலாசாலை மூடப்பட்டது. ஆயினும் அருணாசலம் அவர்கள் வண்ணார்பண்ணை நாவலர் பாடசாலையில் இக்கலாசாலையை மீள நடாத்த முற்பட்டார். அரசு வசதியீனங்களைக் காட்டித் தடுத்தது.

ஆயினும் அருணாசலம் அவர்களின் இடைவிடா முயற்சியும் சேர். பொன் இராமநாதன் , சேர். அ. கனகசபை ஆகியோரின் பரிந்துரைகளாலும் கோப்பாய் சேர்ச் மிஷனால் நடத்தப்பட்ட ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் 1916ஆம் ஆண்டு "ஐக்கிய பயிற்சிக் கலாசாலை" *(united training school)* ஆரம்பிக்கப்பட்டது. தெல்லிப்பழை அமெரிக்க மிஷன் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் இதனுடன் இணைக்கப்பட்டது. கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்களும் சைவர்களும் இணைந்த சபை ஒன்று நிறுவப்பட்டு இக்கலாசாலை நிர்வகிக்கப்பட்டது. கத்தோலிக்கர் இதனை நிராகரித்து கொழும்புத் துறையில் ஓர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையை ஆரம்பித்தனர். கோப்பாய் ஐக்கிய பயிற்சிக் கலாசாலையில் பயின்ற சைவ ஆசிரிய மாணவர்க்கு காரைநகர் திரு. வை. ஆறுமுகம்பிள்ளை உணவும் உறையுளும் கொடுத்தார். ஆயினும் இக்கலாசாலையின் ஆயுள் ஏழு ஆண்டுகளுடன் முடிவுற்றது. இக்காலத்தில் 64 சைவாசிரியார்களே உருவாயினர்.

சேர்.பொன். இராமநாதன் வழங்கிய ஐந்து ஏக்கர் காணியில் கோப்பாய் அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1946இல் கோப்பாய் மகளிர் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் திருநெல்வேலியிலும், 1947இல் கோப்பாய் அரசினர் ஆசிரியர் கலாசாலையிலும் இயங்கத் தொடங்கியது. அங்கு கற்ற ஆண்கள் பலாலி ஆசிரியர் கலாசாலைக்கு இடமாற்றப்பட்டனர். 1977இல் அப்போதைய அரசால் இவை சிறப்புப் பயிற்சிக் கலாசாலைகளாக மாற்றப்பட்டன. அதன் வழி பலாலி கலாசாலையில் இருந்த நுண்கலை, மனைப்பொருளியற் பிரிவுகள் கோப்பாய் மகளிர் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றப்பட்டன. அன்று தொட்டு கோப்பாய் மகளிர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை கோப்பாய் அரசினர் பயிற்சிக் கலாசாலையாக மாறியதோடு ஆண் பெண் சரிநிகர் சமமாய்க் கற்கும் கலாசாலையுமாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1924இல் சட்டசபை உறுப்பினராகிய திரு.சு. இராசரத்தினம் அவர்கள் 1926இல் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவாகும் சைவாசிரியர்களின் எண்ணிக்கையை "40" இருந்து "75" ஆக உயர்த்தும் படி கல்விப் பணிப்பாளரிடம் கோரினார். அக்கோரிக்கை அக்கலாசாலையின் வசதியீனத்தைக் காட்டி நிராகரிக்கப்பட்டது. அதன் வழி உந்தப்பட்ட இராசரத்தினம் அவர்களின் முயற்சியும் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பணிப்பாளர்களின் பங்களிப்பும் இணைய திருநெல்வேலியில் சைவாசிரியர் கலாசாலை 1928 ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் அதிபர் - மயிலிட்டி சி. சுவாமிநாதன், உபஅதிபர் - பொ.கைலாசபதி, தமிழ் விரிவுரையாளர் - பண்டிதமணி.சி.கணபதிப்பிள்ளை. இன்றளவும் இவர்களின் புகழ் நின்று நிலவுதல் கண் ஊடு.[10]

இவற்றிற்கு இடையில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் மகளிர்க்கான கலாசாலை ஒன்றை 1926இல் மருதனார் மடத்தில் நிறுவினார். இதன் முதலதிபராக திரு.கே.எம் விஸ்வலிங்கம் எனும் ஆண் மகனாரே விளங்கியமை குறிப்பிடத்தக்கது. தெய்வத் திருமகள் கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி உள்ளிட்ட பல பெண்மணிகள் இக்கலாசாலையிலே பயின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சேர்.பொன் இராமநாதன் அவர்களின் மருகரும் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான திரு.சு.நடேசபிள்ளை அவர்கள் திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்றை 1935இல் ஆரம்பித்தார். இங்கு பண்டித, ஆசிரியர் பயிற்சியைக் கொண்ட 3 ஆண்டுப் பயிற்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இங்கும் புகழ் நிறைந்த பெரியோர்களான கலாநிதி.கு.சிவப்பிரகாசம், நவநீத கிருஷ்ணபாரதியார் உள்ளிட்ட பலர் பணிபுரிந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையரசு அறுபதுகளில் நாட்டிலுள்ள பாடசாலைகள், ஆசிரிய கலாசாலைகள் என்பவற்றைப் பொறுப்பெடுத்தது. அதன் வழி ஆசிரிய கலாசாலைகள் சமயம்சாரா கலாசாலைகளாக மாற்றப்பட்டன. திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை உள்ளிட்ட சில கலாசாலைகள் மூடப்படத் தமிழ்ப் பிரதேசத்தில் மட்டக்களப்பு, பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலைகளே இன்று மிஞ்சியுள்ளன. இவையும் மூடப்படும் அபாய நிலையே காணப்படுகின்றது. அவற்றுக்கு மாற்றீடாகத் தேசிய கல்வியற் கல்லூரிகள் தோற்றம் பெற்றுள்ளன என்பதும் சுட்டத்தக்கது.

**சைவாசிரிய கலாசாலையின் பணிகள்**

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் வழி யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்திற்கு அளப்பெரிய பங்களிப்புச் செய்த இந்து போர்ட்.சு. இராசரத்தினம் அவர்களின்"யாழ்ப்பாணத்தின் இந்துக் கல்வி இயக்கம், கிறிஸ்தவர்களுக்கோ அல்லது வேறு யாருக்குமோ எதிரான இயக்கமன்று"[11] எனும் கூற்று முக்கியமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த ஒரு நாட்டு மக்கள், ஓர் இன மக்கள் தம் தாய்மொழி, சமயம், பண்பாடு, கலை கலாசாரத் தொன்மங்களையும் தத்தம் தனித்துவங்களையும் பேணுதல் வேண்டும். அதன் வழி ஆங்கிலக் கிறிஸ்தவக் கல்வி சமூக அசைவியக்கத்தில் ஏற்படுத்திய எதிர்மறைத் தாக்கத்தையே ஈழத்துத் தமிழ்ச் சைவ சமூகமும் எதிர்கொண்டது. இதன் வழியில் தான் யாழ்ப்பாணப் பாடசாலைகள் - சைவாசிரிய கலாசாலைகள் என்பவற்றின் உருவாக்கச் சூழலையும் அவற்றின் பணிகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஈழத்துச் சைவக்கல்விப் பாரம்பரியத்திற்குப் பங்களிப்புச் செய்த நிறுவனங்களில் ஒன்று. "மிகப் பெரிய இந்துக் கல்வி நிறுவனமாகவும், இயக்கமாகவும் விளங்கியது சைவ வித்தியா விருத்திச் சங்கம். இச்சங்கத்தின் வளர்ச்சியும் தோற்றமும் ஈழத்து இந்துக் கல்வி இயக்கங்களுக்கு மேலும் புத்துணர்ச்சியை அதிகரித்தன."[12] எனும் கூற்று இதன் மெய்மையைப் புலப்படுத்துகின்றது.

இச்சங்கத்தால் உருவாக்கப்பட்ட சைவாசிரிய கலாசாலையை முன்னிறுத்தியே சைவாசிரிய கலாசாலைப் பணிகளை நாம் இங்கு ஆராய முற்படுகின்றோம். காரணம் இந்நிறுவனம் ஏனைய கலாசாலைகளுடன் ஒப்பிடும் போது நிறைந்த ஆசிரியர்களையும் நிறைந்த பாடசாலைகளையும் நிறைந்த மாணவர்களையும் சைவ உலகில் உற்பவித்தது. நீண்ட ஆயுளைக் கொண்டது. பல கிளைச் செயற்பாடுகளையும் முன்னெடுத்தது.

இச்சைவாசிரிய கலாசாலைகளின் பணிகளை ஆய்வின் வசதி கருதி பின்வருமாறு பகுத்துரைக்கலாம்.

1. சைவாசிரியர்களை உருவாக்கியமை.
2. காவியப் பாடசாலைகளை நடாத்தியமை.
3. சாதனா மற்றும் சைவப் பாடசாலைகளை நடாத்தியமை.
4. அநாதைச் சாலைகளை அமைத்தமை.
5. சுயபாஷா மற்றும் பெண்கல்வி என்பன விருத்தியுற உதவியமை.
6. கிளை நிறுவனங்கள் அல்லது இதர செயற்பாடுகள்

**சைவாசிரியர்களின் உருவாக்கம்**

இருபதாம் நூற்றாண்டின் முதற்காற் பகுதியிற் காணப்பட்ட சைவாசிரியர்களின் பற்றாக்குறை அதனைத் தொடர்ந்து வந்த அரை நூற்றாண்டுச் செயற்பாட்டினால் புதிய அத்தியாயங்களை அகலத் திறந்தது. திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலை முப்பது ஆண்டுகளில் ஏறத்தாழ மூவாயிரம் ஆசிரியர்களை உற்பவித்தது. இராமநாதன் பெண்கள் ஆசிரியர் கலாசாலை சைவப் பெண்களின் வரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியது. 1948இல் திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில் ஆணும் பெண்ணும்[13] சரிநிகர் சமமாய் கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.

உசாத்துணைப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கலாசாலை மூடப்படும் காலத்தில் பெண்களே அதிகம் கற்றமை குறிப்பிடத்தக்கது.[14]

இக்கலாசாலைகளில் கற்ற சைவாசிரியர்கள் யாவரும் சைவாசார சீலர்களாகவும், பெரும்பாலும் சைவசமய தீட்சை பெற்றவர்களாகவும் விளங்கினர். இவர்களின் ஆடை, வேட்டியும் நஷனலுமாகக் காணப்பட்டது. இவர்களின் சிந்தனை செயல்களில் மரபின் நீட்சியும் புதுமையின் ஓட்டமும் காணப்பட்டது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிவரை இவர்கள் செல்வாக்குமிக்க ஆசிரியர்களாகவே காணப்பட்டனர். இன்றைய உழைக்கும் அல்லது வேலை செய்யும் தலைமுறை அந்தக் கலாசாலை உற்பத்திகளின் உற்பத்திகளே.

இவ்வாசிரியர்கள் சைவம், தமிழ், கணிதம், அறிவியல், பூமிசாஸ்திரம் மட்டுமல்லாது விவசாயம் சிறுகைத்தொழில், உடற்கல்வி முதலான பாடங்களையும் கற்றனர். இவர்களுள் பலர் ஆசிரியர்களாகவும் விவசாயிகளாகவும் இருந்ததை நாமே கண்கூடாகக் கண்டுள்ளோம்.

**காவியப் பாடசாலை**

இவ்வாசிரியர்கள் சுயபாஷாவில் கற்றவர்கள். உலக நடத்தையியலுக்கேற்ப தம்மை இவர்கள் கட்டமைத்துக் கொள்ளும் பொருட்டு ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம் என்பன காவியப் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டன. ஆசிரிய கலாசாலையில் காவியப் பாடசாலைகளை உருவாக்கியமைக்கு மேற்சொன்னதும் நாவலர் வழிவந்த காவியப் பாடசாலை மரபை அழியவிடாது காப்பதுமே முக்கிய காரணங்களாகின்றன. பால பண்டித, பண்டித வகுப்புக்களும் நடாத்தப்பட்டன. பரமேஸ்வரா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மூன்று வருடப் பயிற்சிநெறியை நடாத்தித் தம் ஆசிரியரைப் பயிற்றப்பட்ட தராதரப்பத்திரமுள்ளவராகவும் பண்டிதர் சான்றிதழ் பெற்றவருமாகவே வெளியேற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாசிரிய கலாசாலைகள் யாவும் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்துடனும் மதுரைத் தமிழ்ச் சங்கத்துடனும் நெருக்கமாக தொடர்பு பேணியமை குறிப்பிடத்தக்கது.

**சாதனா மற்றும் சைவப் பாடசாலைகளின் உருவாக்கமும் வளர்ச்சியும்**

ஒவ்வொரு சைவாசிரிய கலாசாலையும் தத்தமக்கென ஒவ்வொரு பயிற்சி அல்லது சாதனா பாடசாலையை உருவாக்கியது. அத்தோடு முன்னரே இருந்த பாடசாலைகளுக்கும் புதிய பாடசாலைகளுக்கும் இக்கலாசாலைகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். ஒரு பாடசாலை அரச உதவி நன்கொடை பெறவேண்டுமெனில் இப்பாடசாலைகளில் குறித்த சதவீதத்தில் பயிற்றப்பட்ட தராதரப்பத்திரம் உள்ள ஆசிரியர்கள் இருக்க வேண்டும் என்ற தேவை இதன்வழி பூர்த்தி செய்யப்பட்டது. சைவ வித்தியா விருத்திச் சங்கம் இக்கலாசாலையை முன்னிறுத்திப் பல பாடசாலைகளை உருவாக்கியது. அறுபதுகளில் அரசிடம் இச்சங்கம் "187" பாடசாலைகளை ஒப்படைத்தமை ஈழத்தின் மிகவும் மதிப்பும் முக்கியத்துவமும் வாய்ந்த வரலாற்றுச் சாதனைப் பதிவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநாதை சாலைகள் (தற்போது இச்சொல் பயன்படுத்தப்படுவதில்லை சிறுவர் இல்லங்கள் என்றே கூறப்படுகின்றது.)

இக்கலாசாலைகளோடு சமாந்தரமாக அநாதைசாலைகளும் தோற்றுவிக்கப்பட்டன. ஆதரவற்ற குழந்தைகள் இங்கு தங்கவைக்கப்பட்டு சாதனா பாடசாலைகளுக்கு கற்க அனுப்பப்பட்டனர். இக்குழந்தைகளுக்கு உணவு, உடை, உறையுள் என்பன உள்ளிட்ட அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டன. ஆசிரிய மாணவர்களும் இங்கு தங்கி மேற்படி வசதிகளைப் பெற்று ஆசிரிய பயிற்சியைப் பெற்றனர். இதனூடாக மதமாற்றம் தடுக்கப்பட்டதோடு ஈழத்துத் தமிழ்ச் சைவ சமூக அசைவியக்கத்தில் வறுமைக்குட்பட்ட சமூகம் மேனிலை பெற வழியேற்படுத்தப்பட்டது.

### சுயபாஷா மற்றும் பெண்கல்வி

தமது சுயபாஷையான தமிழில் தம்மின கலை, கலாசார, சமய, மொழி மற்றும் அறிவியலை அறிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது. ஆணொடு சமமாய் வாழ்வினில் அனைத்து உயர்ச்சிகளையும் சைவப் பெண்கள் பெற இராமநாதன் பெண்கள் ஆசிரிய கலாசாலை, திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலை, கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரிய கலாசாலை என்பன உதவின. குறித்த காலத்தின் பின் ஆணாசிரியர்களைவிட பெண்ணாசிரியர்கள் அதிகமாகக் காணப்பட்டனர். இச்செயற்பாடுகளினூடாகக் கற்றறிந்த சைவ சமூகம் உருவாக உறுதிமிகு அத்திபாரம் இடப்பட்டது.

### இதர செயற்பாடுகள்

இக்கலாசாலைகளின் எழுச்சியோடு ஒட்டி வெறும் ஏட்டுக் கல்வியை மட்டும் வழங்காது கைத்தொழில்சார் கல்வியும் வழங்கப்பட்டது. குறிப்பாக சைவ வித்தியா விருத்திச் சங்கம் 1952ஆம் ஆண்டு அறிக்கையின் படி "13" நெசவுச்சாலைககளும் "16" பன்னவேலை நிலையங்களும் உருவாக்கப்பட்டு கற்றவர், கல்லாதவர் - இளையவர், முதியவர் எனும் பாகுபாடு இன்றி யாவர்க்கும் தொழிற்கல்வி வழங்கப்பட்டது. இதன்வழி சிறுகைத்தொழில் வளர்ச்சியும் சுயபொருளாதார மேம்பாடும் ஏற்பட இந்நிறுவனங்கள் உதவியுள்ளமை கவனத்திற்குரியது.

### ஈழத்துச் சைவத்தமிழுலகில் ஏற்படுத்திய தாக்கங்கள்

இக்கலாசாலைகளின் உருவாக்கம் - செல்நெறி ஆற்றிய பணிகள் என்பன ஈழத்துத் தமிழ்ச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. சைவப்பாரம்பரியச் சூழலில் நாவலர் வழிவந்த சமயபாடமும் நவீன கல்விக் கொள்ளைக்கியைபான பாடங்களும் இவ்வாசிரியர்களுக்குப் போதிக்கப்பட்டன.[15]

சுதந்திர இலங்கையின் மும்மொழிப் புலமையாளர்களின் உருவாக்கத்திற்கும் பண்டிதர்களின் பெருக்கத்திற்கும் இக்கலாசாலைகளும் இங்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் முக்கிய காரணமாயினர். இதன் வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழோடு ஆங்கில, சமஸ்கிருத, சிங்கள மொழிப் புலமையாளர்கள் உருவாயினர். சைவாசிரிய கலாசாலைகளில் கலைகளுக்கும் முதன்மை கொடுக்கப்பட்டது. வடஇலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் முதன்மையளிக்கப்பட்டது. இவற்றை,"திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை அக்காலத்தில் ஒரு கலாஷேத்திரமாகவே காட்சியளித்தது"[16] எனும் கூற்று உறுதிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான ஆளுமைமிகு ஆசிரியர்களின் உருவாக்கம், அவர்களின் பணி என்பன சைவப் பாடசாலைகள் தமிழ்ச் சமூகத்தில் முக்கியத்துவம் பெற வழிசமைத்தது. இவ்வாசிரியர்கள் சைவப் பாடசாலைகளில் மட்டுமல்லாது இஸ்லாமியப் பாடசாலைகளிலும் நியமிக்கப்பட்டனர். எத்தகைய சூழலிலும் தம் சமய நம்பிக்கை தளராத அதேவேளை ஏனையவர் மனம் புண்படத்தக்க வரட்டு மதவாதிகளாக அவர்கள் இருக்கவில்லை. ஆதலால் அனைத்துச் சமயச்சார்புடைய பாடசாலைகளும் இவ்வாசிரியர்களின் ஒழுக்கத்தையும் பண்பையும் ஆளுமையையும் உணர்ந்து தத்தம் பாடசாலைகளில் நியமனம் செய்ய முற்பட்டனர்.[17]

இவை தம்முள்ளும் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையின் புகழே ஓங்கியது. இக்கலாசாலையில் நிறுவன ரீதியாக இருந்த சைவத் தமிழ்ச் செழிப்பு கவனத்திற்குரியதாகும். இங்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பெரும் புகழ்ப் பெற்றார்கள். தாம் இங்கு கற்றதைப் பெருமையுடன் நினைவு கூருகின்றார்கள். இக்கலாசாலை அதிபருக்கு பிற சமயப் பாடசாலை அதிபர்கள் தமிழ் ஆசிரியர்களை நியமனம் செய்ய சிபாரிசு செய்யுமாறு கோரி, கடிதங்களும் எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.[18]

கிறிஸ்தவக் கல்வி மரபின் வழி உருவான படித்த மத்தியதர வர்க்கத்தைப் போல இக்கலாசாலைகளின் வழி படித்த சைவ மத்தியதர வர்க்கம் உருவாயிற்று. தனித்த, மரபு மாறாத நவீன கலாசாரம் பயில்நிலை பெறத் தொடங்கியது. சைவப் பாடசாலைகள் பெருகின. அதற்கேற்ப சீர்மைப்படுத்தப்பட்ட கல்வி மரபைப் பெற்றுக்கொண்ட கல்வியாளர்களும் உருவாகினர். இவர்களின் வழி சுயபாஷா மூலமான கல்வியும் சமயக் கல்வியும் அழுத்தம் பெற்றன. வீட்டுக்குள்ளே பூட்டப்பட்டிருந்த பெண்கள் சுதந்திரமும் கல்வியும் பெறவும், பெற்ற கல்வியைப் போதிக்கும் தரத்தைப் பெறவும் வெளியூர் சென்று பணிபுரிதலுமாகிய முற்போக்குச் சிந்தனைகள் வளர இக்கலாசாலைகளின் மூலம் வழி ஏற்படுத்தப்பட்டது.

படித்த ஆண், பெண் இணைவு அறிவியல் உலகிற்கேற்ற பிள்ளைகளை உருவாக்கியது. இதன் மூலம் மதம் மாற்றலுக்கான கல்வி காணாமல் போயிற்று. உயர்சாதி, தாழ்சாதி பேதங்கள் நீங்கவும் கலாசாலைகள் உதவின. ஒன்றாக உறைந்து ஒன்றாக உண்டு ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாய் வாழும் சமூக மாற்றம் கலாசாலைகளின் விடுதிகளில் அரங்கேறிற்று. இங்கு பெற்ற சமஆசனம், சமபோசனம் எனும் வாழ்வியலை பாடசாலைகளில் மாணவரிடத்தே பிரயோகித்தனர். சாதியக் கட்டமைப்பு மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் சைவ சமயச் சார்புடைய இந்நிறுவனங்கள் செய்த இரத்தம் சிந்தாப் பெரும் சமூகப் புரட்சியாக இதனைச் சுட்டலாம். இது, பேதங்கடந்த சமூக உருவாக்கம் பற்றிய பிரக்ஞையை ஓரளவேனும் ஏற்படுத்திற்று.

## முடிவுரை

சைவாசிரிய கலாசாலைகள் சார்ந்த முயற்சி 1913இல் ஆரம்பமாயினும் அம்முயற்சி இராமநாதன் மகளிர் ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை, பரமேஸ்வரா ஆசிரிய கலாசாலை என்பவற்றின் ஊடாக வெற்றி பெறுகிறது. இவை தம்முள்ளும் திருநெல்வேலி சைவாசிரியப் பயிற்சிக் கலாசாலை முதன்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும்.

இக்கலாசாலைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மரபும் நவீனமும் அறிந்த பன்மொழிப் புலமையாளர்களாக, பண்டிதர்களாக உருவாக்கம் பெற்றனர். சைவா ஈரமும் ஒழுக்கமும் சைவத் தமிழ்ப் பாரம்பரிய ஆடைகள் அணிபவர்களாயுப நிகழ்ந்தனர். சுதந்திர இலங்கையில் சைவத் தமிழ்ப் பாரம்பரியம் நிலைகொள்வதற்கு இவர்கள் ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இக்கலாசாலைகளின் எழுச்சி பிற்போக்குத்தனமான பல சிந்தனைகளைக் கொண்டிருந்த சமூகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. பெண்கல்வி, சமஆசனம், சமபோசனம், அநாதை விடுதிகளின் உருவாக்கம், யாவர்க்கும் கல்வி எனும் சிந்தனையும் செயலும் இதற்குச் சில உதாரணங்கள் ஆகும்.

படித்த சைவ மத்தியதர வர்க்க உருவாக்கம் அதன் பின் பல அறிவியலாளர்களை, பல்தொழில் விற்பன்னர்களை உருவாக்கிற்று. சைவ இலக்கியங்களும், தமிழ்க் கலாரசனையும் பரவலாக்கம் பெற இங்கு பயின்ற ஆசிரியர்கள் காரணமாயினர். அத்தோடு இலங்கையில் கம்யூனிச - மார்க்ஸிய சித்தாந்தவாதிகள், நாத்திகவாதிகள் பெருக்கம் அறுபதுகளில் ஏற்படத் தொடங்கியபோதும் அவற்றினின்றும் சைவத்தைக் காத்த - நிலை நிறுத்திய பெருமை இக்கலாசாலைகளின் வாரிசுகளையே சாரும். அந்த வகையில் ஈழத்துச் சைவ தமிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் சைவாசிரிய கலாசாலைகளின் பங்களிப்பு பெருத்த சமூக மாற்றத்தை ஏற்படுத்திற்று என்பது மிகையல்ல.

## அடிக்குறிப்புகள்

1 சந்திரசேகரம்.ப.பேராசிரியர்.,1987 "யாழ்ப்பாணக் குடா நாட்டில் 20ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த இந்து சமயக் கல்வி மறுமலர்ச்சி" லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை, யாழ்ப்பாணம், ப.4.

2 மேற்படி., பக். 10 — 12

3 *Ceylon Almanac, 31.12.1925*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 *Chelliah. J.V., 1948, A Century of English education, The Story of Batticotta Seminary and Jaffna College, reprint: star line Printers, Colombo. p.35*

5 சிவராசா.மு., 1985, "தமிழாசிரியர் பயிற்சிப் பின்னணியில் காங்கேசன்துறைக் கல்வி வட்டாரம்" இ காங்கேசன் கல்வி மலர். அதிபர் சங்கம். காங்கேசன்துறை. ப.169.

6 *Vythilingam.m., 1977, The Life of Sir Ponnampalam Ramanathan, pp.549 – 558.*

7 கணபதிப்பிள்ளை,பண்டிதமணி.சி., 1971 திரு.ச.அருணசலம், "அணிந்துரை", சைவமகாசபை, காரைநகர், ப .ஔஎ.

8 சிவராசா.மு., 1985, மேற்படி, பக்.170 - 171.

9 *The Hindu board – Annual Report, 1930. P-29.*

10 சுசீந்திரராஜா.பேராசிரியர்.சு., 2002, ஈழத்துப்பண்டிதமணி, குமரன் புத்தக இல்லம், இலங்கை,ப.29.

11 *Rajaranam.s.,1930, Hindu Education in jaffna" reporls of the Hindu Board Education,p.26*

12 சந்திரசேகரம்.ப.பேராசிரியர்.,1987 மேற்படி., ப.17

13 நாவலன், வருடாந்த இதழ், 1947. சைவாசிரிய கலாசாலை, திருநெல்வேலி, ப.89

14 திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலை நாவலன் மலரில் (1957) உள்ள படங்கள் இதற்கு ஆதராமாகும்

15 *Swaminathan.s.,1930, The Hindu education Movement and Jaffna Saiva training Institute the Hindu Board pp.28- 32*

16 செந்திநாதன்.கனக. மூன்றாவது கண் ப.23.

17 சுசீந்திரராஜா.பேராசிரியர்,சு.,மேற்படி., ப.29

18 மேற்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளகப்பயிற்சி
# மாணவ ஆசிரியர்களிடம் விருத்தியாக்கப்பட வேண்டிய மிருதுவான திறன்கள்

* க.சுவர்ணராஜா


**கட்டுரையாளர்**

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.


## அறிமுகம்

உலகமயமாக்கல் மாற்றங்களுடன் போட்டியிட்டு முன்னேறுவதற்கும், தகவல் மையப் பொருளாதாரத்தினை கட்டியெழுப்பவும், அதன் ஊடாக வலுவான நாட்டினைக் கட்டியெழுப்பதல், உயர் ஆற்றல்களைக் கொண்ட, அறிவுமிக்க பிரஜைகளை உருவாக்க வேண்டியது கல்வியின் கடமையாக மாறியுள்ளது.

மனித மூலதனத்தினை நாட்டின் தொலைநோக்கிற்கு ஏற்ப கட்டியெழுப்பவும், மனித சமூகத்தினை உயர் நிலைக்கு இட்டுச் செல்லவும், ஆற்றல் மிகு கற்றல்-கற்பித்தல் அவசியமாகும். தரமற்ற மனித மூதனத்தின் ஊடாக புதுமைகளையும், முன்னேற்ற நோக்கிலான சிந்தனைகளையும் உருவாக்கிவிட முடியாது. தரமான மனித மூலதனம் உருவாக்கப்படுவது தரமான கல்விச்செயன்முறை மூலமே ஆகும்.

நன்கு கவனமாக திட்டமிடப்பட்ட வடிவமைக்கப்பட்ட கல்வி முறைமையானது மனித மூலதனத்தை சிறப்பாக விருத்தி செய்வதற்கான அடிப்படையாக அமையும். ஆசிரியர் கல்வியை வழங்கும் நிறுவனங்கள், சிறப்பான மூலதனத்தினை கட்டியெழுப்புவதில் பெரும் பங்களிப்பினை நல்க வேண்டியுள்ளது. அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் தேவைப்படும் அத்தியாவசிய ஆற்றல்களை ஆசிரியர்களுக்கு வழங்குவதன் ஊடாக நாடெங்கிலும் சிறப்பான கற்றல்-கற்பித்தல் செயன்முறையை உருவாக்கி அதன் ஊடாக புதிய நூற்றாண்டிற்குத் தேவைப்படும் மனித மூலதனத்தினை உருவாக்க முடியும்.

சமூகத்தின் எதிர்பார்ப்பிற்கும் ஏற்ற ஆற்றல்மிகு மனிதர்களை கல்விச் செயன்முறை உருவாக்குவதற்கு ஆற்றல் மிகு ஆசிரியர்களின் தேவைப்பாடு ஒரு மறுக்கமுடியாத நிபந்தனையாகும்.

ஆசிரியருக்கு கல்வியை வழங்கும் நிறுவனங்கள் காலத்திற்கு காலம் சமூகம் எதிர்பார்க்கும் திறன்களை ஆற்றல்களை, அறிவை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டுமானால் ஆசிரியர் கல்வி நிறுவனங்கள் தமது கலைத்திட்டத்தில் சமூகம் எதிர்பார்க்கும் விடயங்களை பயிற்றுவித்தல் வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் கலைத்திட்டச் சென்முறையானது அவ்வப்போது எழுகின்ற மாற்றங்களை உள்வாங்கி அதற்கேற்ப புதுப்புது ஆசிரியர்களுக்கு நிலைமாற்றம் செய்யும் போதே சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கான கற்றல்-கற்பித்தல் சாத்தியமாகும்.

சுய ஆற்றல், சுயஊக்குவிப்பு, சுயமதிப்பு, சுய வெளிப்பாடு, சுயமதிப்பீடு என்ற வகையில் தற்போது சமூகமாற்றத்திற்கான ஒரு திறனாக மிருதுவான திறன்கள் பற்றி பேசப்படுகின்றது. இந்த மிருதுவான திறன்களை தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்ற உள்ளகப்பயில்வு மாணவ ஆசிரியர்களிடையே கட்டியெழுப்புதல் தொடர்பாகவே இக்கட்டுரை ஆராய்கின்றது.

கட்டுறுவுப்பயில்வு மாணவ ஆசிரியர்கள் என்போர் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரண்டு வருட கல்விசார் கோட்பாடுகளைக் கற்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றி ஒரு வருடம் பாடசாலைகளில் உள்ளகப் பயில்வை மேற்கொள்பவர்கள்.

**கட்டுறுப்பயில்வுக்கான குறிக்கோள்களும் நோக்கங்களும்**

கட்டுறுப்பயில்வுக்கான குறிக்கோள்களும் நோக்கங்களும் பின்வருமாறு அமைகின்றது.

- பயிற்சிபெறும் ஆசிரியரின் கற்பித்தற் திறன்களை விருத்திசெய்தல்.
- மாணாக்கர்களின் உடல் சார்ந்த, உளம் சார்ந்த, மனவெழுச்சி சார்ந்த இயல்புகளை அறிந்துகொள்ளல்.
- மாணாக்கர்களின் உளமட்டங்களுக்கமையக் கற்பித்தலை ஒழுங்குபடுத்தும் ஆற்றலைப் பெறுதல்.
- மாணாக்கர்களின் வேறுபட்ட குணநலன்கள், தேவைகள், விருப்புக்கள், இரசனைகள் பற்றிய விளக்கத்தை மேலும் விருத்திசெய்துகொள்ளல்.
- பாடஉள்ளடக்கம் தொடர்பான தேர்ச்சியை எய்துதல்.
- கற்பித்தல் திறைமைகளுக்குப் பொருந்தும் வண்ணம் பல்வேறு கற்பித்தல் நுட்பமுறைகளைப் பிரயோகிக்கும் ஆற்றலையும் கற்பித்தலுக்குகந்த பௌதிகச் சூழலை அமைத்துக் கொள்ளும் ஆற்றலையும் பெறுதல்.
- தேவைகளுக்கேற்பப் பொருத்தமான கற்பித்தல் உபகரணங்களைத் தெரிவுசெய்தல், தயாரித்தல் என்பன தொடர்பான ஆற்றலையும் அவற்றை பயன்படுத்தும் வல்லமையையும் பெறுதல்.
- கற்பித்தல் நோக்கங்களைத் தீர்மானித்த பின்னர் பாடங்களை திட்டமிடும் ஆற்றலையும், செயற்படுத்தக் கூடிய பாடக்குறிப்புக்களைத் தயாரிக்கும் வல்லமையையும் விருத்தி செய்துகொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்பித்தலின் போது ஆக்கத்திறனிலும் புதியன பிறப்பித்தலிலும் ஆர்வம் காட்டல்.
- கற்பித்தலிலும் இடைவிடாது தொடர்ந்து கற்றிலிலும் ஆர்வம் காட்டுதல்.
- மாணாக்கர்களை மதிப்பீடு செய்யும் பொழுது பயன்படுத்தப்படும் அளவுகோள்களை விருத்தி செய்துகொள்ளல்.
- குறிக்கப்பட்ட நேரத்திலேயே கற்பித்தலில் ஈடுபட்டு அப் பணி தொடர்பான வேலை நெறிமுறைகளை பழகிக்கொள்ளல்.
- பாடசாலையில் வெவ்வேறு வகுப்புக்களில் கற்பித்தல் தவிர ,காலைப் பாடசாலைக் கூட்டம், அன்றாட சமயவழிபாடுகள், பாடசாலை இறுதித் தினங்களில் இடம்பெறும் வகுப்புச் செயற்பாடுகள் போன்றவற்றில் விருப்பத்துடன் பங்குபற்றும் பண்பை வளர்த்துக்கொள்ளல்.
- பாடசாலையில் மாணாக்கரிடையே ஒழுக்காறும் குணப்பண்புகளும் இடம்பெறுவதற்கு உகந்த சமூகச் சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு உதவுதல்.
- பாடசாலை முகாமை தொடர்பான வேலைகளில் பங்குபற்றல்
- பெற்றோர், ஆசிரியர் தொடர்புகள், மக்கள் சேவைகள் போன்றவற்றில் பங்குபற்றுதல்.
- வெளித்தோற்றம், சுய நடத்தைப்பாங்கு என்பவற்றை ஆசிரிய தர்மத்திற்கு உகந்தவிதத்தில் அமைத்துக் கொள்ளல்.
- முதிர்ச்சி பெற்ற ஆளுமையை விருத்திசெய்து கொள்வதற்கு முயலுதல்.
- சகல சமூக வகுப்புக்களைச் சேர்ந்தவர்களையும் பல்வேறு அறிவு மட்டங்களைக் கொண்ட மாணாக்கர்களையும் சமமாகக் கருதி மனிதத் தன்மையுடனும் கருணையுடனும் நடத்துவதுடன் அவர்களுடைய அடைவை உச்சமட்டத்திற்கு உயர்த்துவதற்கு முயலுதல்.
- கல்விமுகாமையில் தனக்கென ஒதுக்கப்பட்ட கடமைக் கூறை விளங்கிக் கொண்டு அதில் ஈடுபடுதல். (தேசிய கல்வியியற் கல்லூரிகளின் கட்டுறுப்பயில்வுக்கான வழிகாட்டற் குறிப்புக்கள் GTZ)

**மிருதுவான திறன்கள்**

மிருதுவான திறன்கள் என்பது வாழ்நாள் கற்றல் தொடர்பான அக்கறை, ஆர்வம் என்பவற்றை அதிகரித்தல் என்பதிலிருந்து உருவான ஒரு விடயமாகும். மிருதுவான திறன்கள் விருத்தியானது, சுய வாண்மைவிருத்தியுடன் தொடர்புடைய ஒரு விடயமாகும்.

கற்றல் ஊடாகவும் தொழில் பயிற்சி ஊடாகவும் மிருதுவான திறன்களை கட்டியெழுப்பி தனது வாழ் தொழிலில் இலகுவாக வெற்றி பெற முடியும்.

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரின் அறிகை, சமூக வாழ்க்கை, மனவெழுச்சி, அறிவாற்றல் என்பவற்றுடன் மிருதுவான திறன்சார் கோட்பாடு கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

தலைமைத்துவக் கோட்பாடுகளான கட்டுப்பாட்டுக் கோட்பாடு, சார்புக் கோட்பாடு, இலக்குக் கோட்பாடு என்பனவற்றின் செல்வாக்கினைப் பெற்றதாக மிருதுவான திறன்சார் கோட்பாடு அமைகின்றது. இருந்த போதிலும் மிருதுவான திறன்கள் தொடர்பான ஆய்வுகள் மேலும் வளர்ச்சியடைய வேண்டியுள்ளது. இவற்றையும் உள்வாங்கி திறன்சார் கோட்பாடுகள் விரிவாக்கம் பெறும்.

ஒருவர் ஒரு சமூகச் சூழலில் மற்றொருவருடன் அல்லது மற்றவர்களுடன் கட்டியெழுப்பும் தொடர்புகள் மற்றும் நடத்தைகள் எவ்வாறு அமைந்தால், அத் தொடர்பு அல்லது அந்நடத்தை வெற்றிகரமாக அமையும் என்பதை கூறுவதாக மிருதுவான திறன்கள் அமைகின்றன. *(Gibb, Stephen International Journal of Lifelong Education, v33 n4 p455-471 2014)*

**வரைவிலக்கணம்**

மிருதுவான திறன்கள் என்பது ஒருவரின் மனவெழுச்சி அறிவாற்றலுடன் இணைந்ததாகும். ஒருவரின் அளுமைப் பண்புகள், சமூக ஆர்வங்கள், தொடர்பாடல், மொழி, சொந்த பழக்கவழக்கங்கள், நட்புரிமையுடன் குறிக்கோளை அடைய துணை நிற்றல், மற்றவர்களுடான தொடர்புகளின் தளறாதிருக்கும் குணவியல்புகள் என்பவற்றை உள்ளடக்கியதாகும். *(Wikipedia defines soft skills)*

ஒருவரின் தொழில் அறநெறிகள், அவரின் மனப்பாங்கு, அவரின் தொடர்பாடல் திறன்கள், மனவெழுச்சி அறிவாற்றல் மற்றும் அவரது தனித்த பண்புகளைச் சுட்டிக்காட்டுவதாகும். *(MindTools defines soft skills )*

**வாழ் தொழில் வெற்றிக்கான கட்டங்கள்**

| | |
|---|---|
| கடின திறன்கள் *(Hard Skills)* கணிதம், கணக்கீடு, பௌதிகம் உயிரியல், இராசயனவியல், புள்ளி விபரவியல்,நிதியியல், நிகழ்ச்சியமைப்பு | மக்கள் திறன்கள் *(People skills)*தொடர்பாடல் திறன்கள், தலைமைத்துவத் திறன்கள், அணியாக இயங்கும் திறன்கள், |
| சுய முகாமைத்துவத் திறன்கள் *( Self Management skills)*, விழிப்புணர்வு, மனவெழுச்சிக்கட்டுப்பாடு, தன்னம்பிக்கை, பொறுமை, தாக்குப்பிடித்தல். | |
| வேலை அறநெறிகள் *(work Attitude)* நேர்மை, வகைக்கூறல், கற்றலுக்கான விருப்பம், சந்தர்ப்பங்களை பயன்படுத்தல் | |
| வாண்மைத்துவம் *(Professionalism)* பொருத்தமான தோற்றம், உரிய நேரத்திற்கு கருமமாற்றல், மது போதைத் தவிர்ப்பு, பணிவு | |

(நிறந் தீட்டப்பட்டவை மிருதுவான திறன்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறன்களுக்குமிடையிலான வேறுபாடுகள்

கடினமான திறன்களுக்கும் மிருதுவான திறன்களுக்குமிடையே மூன்று பிரதான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை:

1. கடினமான திறன்கள் ஒருவரின் நுண்ணறிவோடு தொடர்புடையது. (இடது மூலையின் செயற்பாடுடன் தொடர்புடையது) மிருதுவான திறன்கள் மனவெழுச்சி அறிவாற்றலுடன் தொடர்புடையது. (வலது மூலையின் செயற்பாடுகளுடன் தொடர்புடையது.)
2. கடினமான திறன்கள் நிலையான விதிகளுடன் தொடர்புடையது. அதாவது எழுத்தில் எழுதப்பட்டு பின்பற்ற வேண்டிய விதிகளை குறித்து நிற்பது. மிருதுவான திறன்கள் ஒரு நிறுவனத்தின கலாசாரம். அங்கு பணியாற்றும் பணியாளர்கள் போன்ற தன்மைகளுக்கு ஏற்ப மாற்றக்கூடிய விதிகளாகும்.
3. கடினமான திறன்கள் பாடசாலையில் கற்கப்படுகின்ற நூல்களுடாக, கற்கை நெறிகளுடாக கற்கப்படும் திறன்களாகும். ஆனால் அநேகமான மிருதுவான திறன்கள் பாடசாலைக்கு வெளியே வாழ்க்கைச் சம்பவங்களுடாகவும், வேலைச்சூழல் ஊடாகவும், முயன்று தவறுதல் ஊடாகவும் மிருதுவான திறன்கள் கற்றுக்கொள்ளப்படுகின்றன.

## தொடர்புகள்

அறிவு- கடின திறன்கள் - மிருதுவான திறன்கள் என்பற்றிற்கிடையிலான தொடர்புகள். அவை:

| அறிவு | கடினத்திறன்கள் | மிருதுவான திறன்கள் |
|---|---|---|
| ♦ முறையியல்<br>♦ இலக்கணம்<br>♦ அகராதித் தொகுப்பு<br>♦ உச்சரிப்புக்கலை<br>♦ கற்றல் பாணிகள்<br>♦ கலைச்சொற்களை கற்பித்தல்<br>♦ கற்பித்தலுக்கான கோட்பாடுகள்<br>♦ அறிவை வடிவமைத்தல் | ♦ அறிவுறுத்தல்களை வழங்குதல்<br>♦ எண்ணக்கருவாக்கம்<br>♦ பிழைகளைத் திருத்துதல்<br>♦ வகுப்பறை முகாமைத்துவம்<br>♦ நடத்தை முகாமைத்துவம்<br>♦ பாடத்தைத் திட்டமிடுதல்<br>♦ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல்<br>♦ ஆய்வு செய்யும்திறன்கள்<br>♦ வளங்களைப் பொருத்தமாக பயன்படுத்துதல்<br>♦ மாணவர்களை நெறிப்படுத்துதல் | ♦ மாணவர்களுடன் இணைப்பினை ஏற்படுத்துதல்<br>♦ மாணவர்களை ஊக்குவித்தல்<br>♦ முன்வைத்தல்<br>♦ மாணவருடன் ஒத்துணர்வுடன் பழகுதல்<br>♦ உடல் மொழியைப் பயன்படுத்துதல்<br>♦ சுயமதிப்பீட்டில்ஈடுபடல்<br>♦ பிரதிபலிப்பில் ஈடுபடல்<br>♦ வாண்மைத்துவம் தொடர்பான அக்கறை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்களிடையே விருத்தியாக்க வேண்டிய மிருதுவான திறன்கள்

| மிருதுவான திறன்கள் | துணைத் திறன்கள் | வலுப்படுத்த தேவையான திறன்கள் |
|---|---|---|
| தொடர்பாடல் திறன்கள் | • தான் நினைப்பவற்றை வாய்மொழி மூலம் அல்லது எழுத்துமூலம் நம்பிக்கையுடனும் வினைத்திறானாகவும் செம்மையாகவும் வெளிப்படுத்தும் ஆற்றல்.<br>• ஒன்றை உன்னிப்பாகவும், கருத்தூன்றியும் செவிமடுத்து, துலங்கும் ஆற்றல்<br>• நம்பிக்கையுடனும் தெளிவாகவும் பார்வையாளருக்கு முன்வைக்கும் ஆற்றல். | • முன்வைப்பின் போது தகவல் தொழிற்நுட்பச் சாதனங்களை பொருத்தமாக பயன்படுத்தும் ஆற்றல்.<br>• பன்முக கலாசார சூழலில் கலந்துரையாடி முடிவெடுக்கும் ஆற்றல்.<br>• தனியாள் மீது கவனமெடுத்து வேறுபட்ட கருத்துக்களை பகிரும் ஆற்றல்.<br>• மற்றொருவரின் தொடர்பாடல் திறனை பொருத்தமாக விரிவாக்கும் ஆற்றல் |
| விமரிசன ரீதியான சிந்தனை மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறன்கள் | • சிக்கலான நிலைமைகளில் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதனைப் பகுப்பாய்வு செய்து, நீதியான முறையில் மதிப்பிடும் ஆற்றல்<br>• பகுப்பாய்வு விரிவாக்கல், மற்றும் கலந்துரையாடல், மதிப்பிடுதல் போன்ற விமர்சன ரீதியான சிந்தனைத் திறன்களை விருத்தியாக்கவும் விரிவாக்குவதற்குமான ஆற்றல்<br>• சிறந்த முடிவுகளை கண்டறியவும், மாற்றுத் தீர்வுகளை தேடியறியும் ஆற்றலும். | • தூர நோக்குடன் சிந்திக்கும் ஆற்றல்.<br>• ஏற்றுக் கொள்ளத்தக்க ஆதாரங்களுடன் ஒன்றை முடிவுறுத்தும் ஆற்றல்.<br>• நிலைத்து நின்று ஒன்றை முழுதாக பொறுப்பேற்கும் ஆற்றல்.<br>• வேறுப்பட்ட வேலைச் சூழலை விளங்கிக்கொண்டு அதனோடு இணைந்து பணியாற்றும் ஆற்றல். |
| அணியாக செயற்படல் | • மற்றவர்களுடன் வினைத்திறனாக இடைத்தொடர்புகொள்ளவும் பரஸ்பர புரிந்துணர்வை கட்டி யெழுப்புவதற்குமான ஆற்றல் | • அணியில் செயற்பாடுகளை திட்டமிடவும் இணைப்பாக்கம் செய்யவும் பங்களிக்கும் ஆற்றல்<br>• குழுத் தீர்மானங்களுக்கு பொறுப்பேற்றல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | • ஒரு அணியில் தலைவராகவோ அல்லது தொண்டராகவே தனது வகிபாங்கை நன்கு விளங்கிக் கொண்டு கருமமாற்றும் ஆற்றல்<br>• மற்றவர்களின் மனப்பாங்கு நடத்தைகள் மற்றும் நம்பிக்கைகள் என்பவற்றைக் கண்டறியும் அவற்றைகௌரவப்படுத்துவதற்குமான ஆற்றல் | |
| வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் திறன் | • பல்வேறுப்பட்ட மூலகங்களிருந்து தகவல்களைக் கண்டறிதல் அவற்றைப் பயன்படுத்துதல், அவற்றை முகாமை செய்யும் ஆற்றல்<br>• புதிய எண்ணங்களை உருவாக்குதலும் தன்னியல்பான கற்றலும் | • விசாரிக்கும் மனதை விருத்தியாக்குவதற்கும் புதிய அறிவை உருவாக்குவதற்குமான ஆற்றல் |
| முயற்சியாண்மைத் திறன் | • கிடைக்கும் சந்தர்ப்பங்களைக் கண்டறியும் ஆற்றல் | • புதிய நுட்பங்களை பிரேரிக்கும் ஆற்றல்<br>• எல்லா சந்தர்ப்பங்களிலும் விரிவாக்குதலும் புதிய நுட்பங்களை கண்டறிவதற்குமான ஆற்றல்<br>• சுயமாக கற்பித்தலுக்கான நுட்பங்களை உருவாக்கும் ஆற்றல் |
| ஒழுக்கம் அறநெறிகள் மற்றும் வாண்மைத்துவம் | • பொருளாதாரப் பிரச்சினைகள், சூழல் மற்றும் சமூக கலாசார ஏதுக்கள் என்பவற்றை வாண்மைத்து ம் ரீதியாக விளங்கிக்கொள்ளும் ஆற்றல்<br>• ஒழுக்க ரீதியில் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்யவும் அவற்றை தீர்க்கவும் தேவையான ஆற்றல் | • அறநெறி மனப்பாங்கை வெளிப்படுத்தவும் அது தொடர்பாக சமூகத்துக்குப் பொறுப்புக் கூறுவதற்குமான ஆற்றல் |
| தலைமைத்துவத் திறன்கள் | • தலைமைத்துவம் தொடர்பான அறிவு மற்றும் அடிப்படைக் கோட்பாடுகளை விளங்கிக்கொள்ளல்<br>• ஒரு செயற்றிட்டத்திற்கு தலைமை வகிக்கும் ஆற்றல் | • தலைவராகவும் தலைமைத் துவத்தை பின்பற்றுபவராகவும் தேவைக்கேற்பமாறிக்கொள்ளும் ஆற்றல்<br>• வகுப்பறை முகாமைத்துவம்<br>• மற்றவர்களை மேற்பார்வை செய்யும் ஆற்றல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கட்டுறுப்பயில்வு மாணவ ஆசிரியர்கள் மாணவரின் கற்றல் தொடர்பாக விருத்தியாக்க வேண்டிய மிருதுவான திறன்கள்**

1. மாணவர்களின் விருப்பங்களுக்கு ஏற்ப கலைத்திட்டத்தில் உள்ள அமசங்களை கற்கத் தூண்டுதல்.
2. கற்றலுக்கு வேண்டிய உண்மையான புதுமையான ஆர்வமூட்டக்கூடிய சூழலை ஒழுங்கமைத்துக் கொடுத்தல்.
3. சகல மாணவர்களும் கற்றலுக்கான உயர் இலக்குகளை கொண்டிருக்க ஊக்குவித்தல்.
4. மாணவர்கள் தனித்துவமான கற்றலை மேற்கொள்வதற்கான முன்மாதிரியாக திகழுதல்.
5. மாணவர்கள் தமக்குப் பொருத்தமான கற்றல் பாணிகளை தெரிவு செய்து கற்பதற்கு வழிகாட்டுதல்.
6. மாணவர்களின் தனித்துவத்தை மதித்துக் கற்பித்தல்.
7. சிறப்பான தொடர்பாடலுக்கு முன்மாதிரியாகச் செயற்படல்.
8. மாணவர் முன்னிலையில் தெளிவாகவும் வினைத்திறனாகவும் உரையாடுதல்.
9. ஆசிரியரின் இலக்குகளை மாணவர்கள் அடைந்துகொள்ளக்கூடிய வகையில் மாணவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துதல்.
10. பொருத்தமான மொழி நடை , உச்சரிப்பு, குரல் ஏற்ற இறக்கம், தெளிவு, இலகுவான மொழி நடை என்பவற்றை பயன்படுத்தி மாணவர்களுக்கு விளக்குதல்.
11. உறுப்பெழுத்துக்களில் பொருத்தமான அளவில் மாணவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய அளவில் எழுதுதல்.
12. கற்பித்தலுக்காக மின்னஞ்சல், கணினியில் பொறித்தல், சொல்முறையாக்கம், மென்பொருட்களை பயன்படுத்தல், சமூக வலைதளங்களைப் பயன்படுத்துதல்.
13. கற்பித்தலுக்காக பொருத்தமாக பல்லூடகங்களைப் பயன்படுத்துதல்.
14. மாணவர்களை குழுவாக அணியாக இயக்குதல்.
15. வகுப்பறை முகாமைத்துவத்திற்கான பொறுப்புகளை சரியாக நிறைவேற்றுதல்.
16. மாணவர்களின் ஒழுக்கப் பிரச்சினைகளை ஒத்துணர்வுடன் நோக்குதல்.
17. நேரமுகாமைத்துவத்தை கடைப்பிடித்தல்.
18. முன்னுரிமை அடிப்படையில் பாடங்களைத் திட்டமிட்டு கற்பித்தல்.
19. ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் முடிவுத் திகதியை நிர்ணயித்துச் செயற்படல்.
20. மாணவரின் பங்குபற்றுதல்களுடன் இணைபாடவிதானச் செயற்பாடுகளை திட்டமிட்டு நிறைவேற்றுதல்.
21. கற்றல் கற்பித்தலின் போது நெகிழ்ச்சியாக தொழிற்படுதல்.
22. மாணவர்கள் சலிப்படையும், விரக்தி அடையும் சந்தர்ப்பங்களில் அவர்களை அதிலிருந்து மீட்டெடுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. புதிய புதிய நுட்பங்களை கையாண்டு கற்பித்தல்
24. மாணவர்களிடையே மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக் கொணருதல்.
25. பிரச்சினையை இனங்காணுதலும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
26. முரண்பாடுகளை நேர்நிலையில் தீர்வு செய்தல்.
27. பக்கச்சார்பற்ற முறையில் நெறிப்படுத்தல்களை மேற்கொள்ளுதல்

என்பனவாகும்.

மேற்குறிப்பிட்ட அம்சங்களை விருத்தியாக்கும் பொழுது கட்டுருப்பயில்வு ஆசிரியர்கள் வெற்றிகரமான ஆசிரியர்களாகத் திகழ்வதற்கான மிருதுவான திறன்களை மேலும் மேலும் விருத்தியாக்க முடியும். இக்காலத்தில் அடிப்படையான பொருத்தமான கல்விசார் நூல்களுடன் வாசிப்பை மேற்கொள்ளும் பொழுது தமது உள்ளாற்றல்களை திறன்களை மனப்பாங்கை நடத்தைக் கோலங்களை பொருத்தமாகவும் உறுதியாகவும் வளம்படுத்திக்கொள்ள முடியும்.

*72ஆம் பக் தொடர்ச்சி..*

**இந்தியாவிலிருந்து ஒரு ஆதரவுக் குரல்?**

ஃப்ராய்டின் சிந்தனைகளுக்கு இந்தியாவிலிருந்து ஓர் ஆதரவுக் குரலும் அத்தோடு விமர்சனக் குரலும் எழுந்தது. வடக்கு அமரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஃப்ராய்டின் சிந்தனைகளுக்கு வரவேற்பு கிடைப்பதற்கு முன்பே, இந்தியாவில் அதற்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது.

நவீனத்துவத்தைக் கொண்டு வந்த கிழக்கிந்தியக் கம்பனியின் மையமாக விளங்கிவந்த கல்கத்தாவில் 1922-ம் ஆண்டு முதன்முதலாக இந்திய உள பகுப்பாய்வுச் சங்கம் தோன்றிவிட்டது. கிரிந்தர சேகர் போஸ் என்பவர்தான் சங்கத்தின் ஸ்தாபகர். இந்து முஸ்லிம் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தேடிக்கொண்டிருந்த காந்திகூட ஒரு உளப் பகுப்பாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டிருக்கிறார்.

போஸ் ஆங்கில மருத்துவம் பயின்றவர். வேதியியல் துறையிலும் அவருக்கு ஆர்வம். பகவத்கீதைக்கு உளவியல் ரீதியாக உரை எழுதியவர் பதஞ்சலி யோக சூத்திரத்தை வங்காளத்தில் மொழிபெயர்த்தவர். போஸ், *The Concept of Repression* என்ற உளப் பகுப்பாய்வுக் கோட்பாடுகள் நிறைந்த தனது ஆய்வு நூலை ஃப்ராய்டுக்கு அனுப்பிவைத்தார். தனது கருத்துக்களுக்கு உலகளாவிய பொருத்தப்பாடும் அதற்கான அங்கீகாரமும் கிடைத்ததில் ஃப்ராய்டுக்கு மகிழ்ச்சி.

ஃப்ராய்டும் போஸுக்குக் கடிதம் போட்டார். 20 ஆண்டுகள் வரை இருவருக்கும் கடிதப் போக்குவரத்து நீடித்திருக்கிறது. ஃப்ராய்டின் எழுபத்தைந்தாவது பிறந்த நாளில் தந்தத்திலான விஷ்ணுவின் சிலையை அவருக்குப் பரிசாக அனுப்பி வைத்தார் போஸ். இந்தியாவின் அடையாளமாக விஷ்ணுவின் சிலை ஃப்ராய்டின் மேஜையில் இடம் பிடித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக் கலைத்திட்டமும் சுற்றாடல் தொர்பான விழிப்புணர்வூட்டலும்

* கி.புண்ணியமூர்த்தி

கலைத்திட்டம் ஒன்றின் பிரதான நோக்கம் இலட்சிய சமூகமொன்றின் பங்காளராவதற்குத் தனியாளை ஆயத்தப்படுத்துவதாகும். இந்த அடிப்படையில் ஒரு பாடசாலை மாணவரை இலட்சிய மானிடராக்கு வதற்கான அறிவு, ஆற்றல்கள், தேர்ச்சிகள், மனப்பாங்குகள், விழுமியங்கள் போன்றவற்றை அவர்களுக்கு வழங்குவதற்கான பெரும் பொறுப்பைப் பாடசாலை ஏற்க வேண்டும். அதற்கேற்ற வகையில் கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

கட்டுரையாளர்

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார்.

கலைத்திட்டம் தொடர்ச்சியாக மாற்றம்பெற்று வந்தபோதும் அது சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வுக்கு முக்கியத்துவமளிப்பதாகத் தெரியவில்லை. மாணவர்களை அறிவு மையமானவர்களாக உருவாக்குவதற்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை உலக அழிவுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையிலான பிரயோக மனிதராக உருவாக்குவதில் கவனம்செலுத்துவதில்லை என்ற குற்றச்சாட்டு கல்வியியலாளர்களால் தொடர்ச்சியாகச் சுமத்தப்பட்டு வருகின்றது.

சுற்றாடல் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச ஆணைக்குழு அறிக்கையில் *(WCED-1987)* வருடாந்தம் உற்பத்தி செய்யக்கூடிய 6 மில்லியன் ஹெக்டயர் *(Hectares)* வரண்ட நிலங்கள் பயனற்ற பாலைவனங்களாக மாற்றமடைகின்றன. இன்னும் மூன்று தசாப்தங்களில் இது சவுதி அரேபியாவை *(Saudi Arabia)* விட விசாலமானதாக மாறலாம். அதேபோல் வருடாந்தம் 11 மில்லியன் ஹெக்டயர் காடுகள் அழிக்கப்படுகின்றன. இது இவ்வாறே சென்றால் இன்னும் மூன்று தசாப்தங்களில் இந்தியாவிற்குச் சமமான பிரதேசத்தைக் கொண்டதாக மாறலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இவற்றில் பெருமளவு காடுகள் சாதாரண விவசாய நிலங்களாக மாற்றப்பட்டுள்ள அதேவேளை இவை விவசாயிகளுக்குப் போதுமானளவு பயனளிப்பவையாகவும் அமையவில்லை.

எரிபொருள் தகனத்தின் காரணமாகச் சுற்றாடலில் காபனீரொட்சைட்டின் அளவு அபரிமிதமாக அதிகரித்துச் செல்கின்றது. இதனால் உருவாகும் பச்சை வீட்டுத் தாக்கத்தால் உலக வெப்பமாக்கத்தின் அளவு எல்லை கடந்து செல்கின்றது. இதன் தாக்கத்தால் உணவு உற்பத்தி வெகுவாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்படையும். கடல் மட்டம் உயர்வடைவதால் பெருமளவு கடலை அண்டிய பிரதேசங்கள் கடலுக்குள் உள்வாங்கப்படும். இதனால் தேசிய மற்றும் சர்வதேச பொருளாதாரம் பாதிப்படையும். ஓசோன் மண்டலத்தில் காணப்படும் துவாரம் காரணமாக ஏற்படும் பாதிப்பு இப் பூமியில் வாழும் மனிதர்களுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் புற்றுநோயைத் தோற்றுவிக்கும். நிலத்தடி நீர் நஞ்சாகும் என இந்த அறிக்கை தொடர்ந்து கொண்டு செல்கின்றது

சுற்றாடல் அபிவிருத்தி தொடர்பான சர்வதேச ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டு 3 தசாப்தங்கள் கழிந்துவிட்டன. ஆனால் சுற்றாடல் பிரச்சினைகள் தேசிய, சர்வதேச ரீதியில் விரிவடைந்துகொண்டே செல்கின்றன. அமில மழை, காலநிலை மாற்றம், புவி வெப்பமடைதல், கடல்மட்ட உயர்வு, ஓசோன் படையில் காணப்படும் துவாரம் என இது தொடர்கதையாகவுள்ளது. சர்வதேச நாடுகளில் பாரிய தொழிற்சாலைகளிலிருந்து நாளாந்தம் வெளியேற்றப்படும் கழிவுகள் உலகைப் பெரிதும் அச்சுறுத்துகின்றன. அதுதவிர நகரமயமாக்கம், கையிருப்பிலுள்ள வளங்கள் அபரிமிதமாக உறிஞ்சப்படுதல் ஆகியவற்றால் உருவாகும் சுற்றாடல் பாதிப்புக்கள் ஒப்பீட்டளவில் அதிகரித்துச் செல்கின்றன.

கிஸ் மற்றும் செல்ரன் *(Kiss & Shelton)* ஆகியோர், சிறந்த சுற்றாடல் கோட்பாடு, வளங்களை மாசுபடுத்தல் அல்லது தொல்லையிலிருந்து தடுப்பதை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும். சுற்றாடல் பாதுகாப்பு என்பதனை பொருளாதார மற்றும் விஞ்ஞான ரீதியான ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் இன்றுள்ள பாரிய பிரச்சினை சுற்றாடல் பிரச்சினையாகும். இது தொடர்பில் எமது மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பல தடவைகள் உரையாற்றியிருப்பதுடன் பல்வேறு வகையான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார். குறிப்பாக புகைத்தல், மதுபாவனை போன்றவற்றைக் கட்டுப்படுத்துதல், கழிவுப் பொருட்களை மீள் சுழற்சிக்குட்படுத்துதல், பொலித்தீன் பாவனையைக் குறைத்தல், மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துதல் என அவரது நடவடிக்கைகள் தொடர்ந்துகொண்டு செல்கின்றன.

முறைசார் பாடசாலைகள் சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் எவ்வாறான பங்களிப்பைச் செலுத்தலாம் என்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும். எதிர்கால சந்ததிகளான மாணவர்களுக்கு இப் பாரிய பிரச்சினையின் தாக்கத்தை உணர வைப்பதில் கலைத்திட்டம் சார்ந்த வகையில் நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் போதுமானதா? என்ற கேள்விக்கு "இல்லை" என்ற பதிலையே அனைவரும் கூறுவர். அவ்வாறாயின் எவ்வாறான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளலாம்?

இன்று நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டிய பிரச்சினை சுற்றாடல் பிரச்சினையாகும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. அண்மையில் பதுளை நகரில் குப்பை மேடு எரிந்ததன் காரணமாகப் பல பாடசாலைகள் மூடப்பட்டமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இது நமக்கு ஒரு அபாய எச்சரிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்கிழக்காசிய நாடுகளைப் பொறுத்தவரையில் இலங்கை, சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வூட்டலில் மிகவும் பின்தங்கியுள்ளது. அதிலும் பாடசாலைக் கலைத்திட்டத்தினூடான விழிப்புணர்வூட்டல் மிகக் குறைவானதாகவுள்ளது. இலங்கையில் சுற்றாடல் தொடர்பான அறிவு மாணவர்களுக்குப் போதுமானளவு வழங்கப்படுவதில்லை. குறிப்பாக இந்தியாவின் கூடங்குளம் அணு மின் நிலையத்தால் எமது நாட்டுக்குப் பாதிப்பு உண்டா? துறைமுக நகரத்தால் சுற்றாடலுக்கு எவ்வாறான பாதிப்புகள் ஏற்படும்? நுரைச்சோலை அனல் மின் நிலையத்தால் எவ்வாறான சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன? மேல் கொத்மலை மின் உற்பத்தி நிலையத்தால் சுற்றாடல் பாதிப்புக்கள் கண்டறியப்பட்டுள்ளனவா? முத்துராஜவெல அபிவிருத்தித் திட்டம், உமா ஓயாத்திட்டம் போன்றவற்றுக்கும் சுற்றாடல் பாதிப்புக்களுக்கும் இடைத்தொடர்பு உண்டா? நாடு முழுவதும் காணப்படும் கல் உடைக்கும் தொழிற்சாலைகளால் பாதிப்புக்கள் உண்டா? காடழிப்பைக் கட்டுப்படுத்த எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன? அவை விளைதிறன்மிக்கவையாக உள்ளனவா? மணல் அகழ்வதால் எத்தகைய பாதிப்புக்கள் ஏற்படுகின்றன? மரம், மணல், கல் போன்றவற்றுக்கு மாற்று ஏற்பாடுகள் உண்டா? என்பன போன்ற சுற்றாடல் தொடர்பான விடயப் பரப்புக்களை மையமாகக் கொண்டு மாணவர்களை ஆய்வுக்குட்படுத்தும் வகையில் கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்படுதல் வேண்டும்.

இன்று சுற்றாடல் தொடர்பான நீதி முறை நடவடிக்கைகளில் மாணவர்களுக்குப் அதிக பரிட்சயத்தை ஏற்படுத்துதல் பொருத்தமாக அமையும். ஏனெனில் சுற்றாடல் பாதிப்புக்களில் பல மாணவர்கள் தம்மை அறியாமலேயே ஈடுபடுகின்றனர். குறிப்பாக வனச் சட்டம் (1979) தேசிய சுற்றாடல் சட்டம் (1980) கடல் மாசுத் தடைச் சட்டம் (1981) கடற்கரைப் பாதுகாப்புச் சட்டம் (1981) என்பன போன்ற சுற்றாடலுடன் தொடர்புபட்ட சட்டங்களின் அடிப்படையில் எவ்வாறான சுற்றாடல் பாதிப்புக்களை ஒரு பொதுமகன்/மகள் சுற்றாடலுக்கு ஏற்படுத்தக்கூடாது என்பது தொடர்பிலும், அவ்வாறு ஏற்படுத்துவதால் எதிர்நோக்கக்கூடிய சட்ட ரீதியான விளைவுகள் தொடர்பிலும் இடைநிலை மற்றும் உயர்தர மாணவர்களுக்கு முறைசார் கலைத்திட்டத்தினூடாகவோ அல்லது மறைக் கலத்திட்டத்தினூடாகவோ தெளிவுபடுத்துவது அவசியப்படுகிது.

"சர்வதேச சுற்றாடல் சட்டக் கோட்பாடுகள்" என்னும் நூலில் பிலிப் சான்ட்*(Philippe Sands-1995)* குறிப்பிடும்போது இந்த உலகம் பல்வேறு சுற்றாடல் சார் சவால்களுக்கு முகங்கொடுக்கின்றது. அமில மழை, ஓசோன் துவாரம், காலநிலை மாற்றம், உயிர் பல்வகைமை இழப்பு. விச மற்றும் ஆபத்தான கழிவுகள், ஆறுகள் மாசடைதல், தூய நீர் வற்றிப்போதல், போன்றவற்றைக் குறிப்பிடுகின்றார். இவை தொடர்பில் சர்வதேச சட்டங்கள் அதிக கவனம் செலுத்தவில்லை என்கிறார்.

மானிட சுற்றாடல் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு முதன் முதலில் சுவீடனின் தலைநகரான ஸ்ரொக்ஹோமில் *(Stockholm)* 1972 இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றது. இதில் 113 நாடுகள் பங்குகொண்டன. பொதுமக்களைக் கவனயீர்ப்புச் செய்வதே இம் மாநாட்டின் நோக்கம் என பிலிப் சான்ட் தெரிவித்தார். இதில் 26 கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. ஜூன் ஐந்தாம் திகதியைச் சர்வதேச சுற்றாடல் தினமாகப் பிரகடனம் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டமை இம் மாநாட்டிலேயேயாகும். அது தவிர அணுவாயுதப் பரிசோதனையை நிறுத்துதல், சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான நடவடிக்கைத் திட்டத்தை *(Action Plan)* உருவாக்குதல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைத் திட்டத்தின் கீழ் உலகப் பாதுகாவலன் *(Earth Watchrer)* எனும் கருத்தேற்பு முன்வைக்கப்பட்டது. இதனைச் செயற்படுத்த அங்கத்துவ நாடுகளுக்குப் பயிற்சியும் நிதியும் வழங்கவேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

இம் மாநாட்டின் முதலாவது கோட்பாடே சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வுக்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்துள்ளமை ஆகும். அதாவது "ஒவ்வொரு மனிதருக்கும் காலநிலையைப் போதுமானளவு சுதந்திரத்துடனும் சமமான உரிமைகளுடனும் வாழ்வதற்கு உரிமை உண்டு என்பதுடன், தற்கால எதிர்கால சந்ததிக்கான சூழலைப் பாதுகாப்பதற்கான தேவையும் உண்டு" எனக் கூறப்படுகின்றது.

இதன் இரண்டாவது கோட்பாடு, சிறந்த திட்டமிடல் அல்லது முகாமைத்துவ முறையியல்களைப் பயன்படுத்தி நிலம், நீர், காற்று ஆகியவற்றை நிகழ்கால, எதிர்கால சந்ததிக்காகப் பாதுகாக்க வேண்டும் என்கிறது. இதன் ஐந்தாவது கோட்பாடு மீளப் பெற முடியாத வளங்களை எதிர்கால சந்ததிக்காகப் பாதுகாக்க வேண்டும் என்கிறது.

ஸ்ரொக்ஹோம்*(Stockholm-1972)* மாநாட்டின் பின் உலகில் சுற்றாடல் தொடர்பான விழிப்புணர்வு அதிகம் ஏற்பட்டது எனலாம். அதாவது இம் மாநாட்டைத் தொடர்ந்து

- கப்பல்களால் ஏற்படுகின்ற மாசினைத் தடுப்பதற்கான சமவாயம் *(International Convention for the Prevention of pollution by Ships 1972)*
- இடம்பெயரும் வகையைச் சேர்ந்த காட்டு விலங்குகளைப் பாதுகாப்பதற்கான சமவாயம் *(Convention on the Conservation of Migratory Species of Wild Animals 1979)*

போன்றவை இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து 1982.10.28 இல் இயற்கை தொடர்பான உலகப் பட்டயம் ஐக்கிய நாடுகள் சபையால் கைச்சாத்திடப்பட்டது. இயற்கை வளங்களைத் துஷ்பிரயோகம் செய்வதைத் தடுப்பதே இச் சமவாயத்தின் நோக்கமாகும். உறுப்புரை 23 இன்படி அனைவரும் அவர்களது தேசிய சட்டத்தின் பிரகாரம் தனித்தோ அல்லது ஏனையோருடன் இணைந்தோ தமது சுற்றாடலை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கான உறுதிமொழியை வழங்க வேண்டும் என இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Stockholm* உடன்படிக்கை இடம்பெற்று இருபது வருடங்களின் பின் இரண்டாவது உலக சுற்றாடல் மாநாடு 1992 இல் பிரேசிலின் தலைநகர் றியோவில் *(Rio)* இடம்பெற்றது. இதில் 100 நாடுகளுக்கு மேல் கலந்துகொண்டன. காலநிலை மாற்றம் தொடர்பிலும், உயிர்ப் பல்வகைமை தொடர்பிலும் நிலைபேண்தகு அபிவிருத்தி தொடர்பிலும் இதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. இங்கு 27 கோட்பாடுகள் கட்டியெழுப்பப்பட்டன. இதில் முதலாவது கோட்பாடு "ஒவ்வொரு மனிதரும் நிலைபேண்தகு அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டும்" என்கிறது.

மூன்றாவது கோட்பாடு, தற்கால எதிர்கால சந்ததியினரின் சூழல் மற்றும் அபிவிருத்திக்கான தேவைகளை நியாயமான முறையில் நிறைவேற்றிக் கொள்ளும்முகமாக அபிவிருத்திக்கான உரிமையினைப் *(Right of development)* பயன்படுத்த வேண்டும் என்கிறது.

றியோ மாநாடு இடம்பெற்று 10 வருடங்களின் பின், அதாவது 2002 ஆம் ஆண்டு (26.8.2002 - 04.09.2002) வரை தென்னாபிரிக்காவின் தலைநகரான ஜொகன்ஸ்பேர்க்கில் நிலைபேண்தகு அபிவிருத்தி தொடர்பான மாநாடு இடம்பெற்றது. *(The World Summit on Sustainable Development - WSSD)* என்னும் இந்த மாநாட்டில் சர்வதேச ரீதியில் இடம்பெற்ற சுற்றாடல் மாற்றங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் விபரிக்கப்பட்டது. அவை:

1. நீரும் சுகாதாரமும்
2. சுகாதாரமும் சுற்றாடலும்
3. விவசாயம்
4. உயிர்ப் பல்வகைமை தொடர்பான முகாமைத்துவம்

இதில் பொதுவான சில கருப்பொருட்களும் கலந்துரையாடப்பட்டன அவையாவன :

1. கோட்பாடுகளினதும் நுட்பங்களினதும் தேவை
2. பொருத்தமான ஆலோசனை, கொள்கை உருவாக்கம்
3. நிலைபேண்தகு அபிவிருத்தி தொடர்பான தீர்மானமெடுத்தல்
4. உள்ளகக் கட்டுமானத் தேவையும் தொழிநுட்பப் பரிமாற்றமும்
5. முறைசார்ந்ததும் எதிர்வுகூறக்கூடியதுமான நிதித் தேவையை அடைவதற்கான மேலதிக வளங்களை இடம்பெயர்த்தல்
6. உட்கட்டுமான அபிவிருத்தியின் தேவை
7. நடைமுறைசார் நிகழ்ச்சித்திட்டத்தினதும் செயற்பாடுகளினதும் தேவை

மேலும் பொருளாதார அபிவிருத்தி ஒரு நாட்டிற்கு இன்றியமையாத ஒரு விடயமாகும். ஆனால் அது சுற்றாடல் பாதிப்பை ஏற்படுத்துவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையக்கூடாது. இதை உறுதிப்படுத்துவதாக நீதியரசர் வீரமந்திரி *Gabcikovo-Nagimaros* என்னும் செயற்றிட்டம் தொடர்பான வழக்கில் *(Hungary v.Slovakia-1997)* தெரிவித்திருந்த கருத்து அமைகின்றது. அதாவது "சூழல் பாதுகாப்பும் பொருளாதாரஅபிவிருத்தியும் முக்கிய இரு விடயங்களாகும். இவை இரண்டையும் சமப்படுத்துவதற்கு நிலைபேண்தகு அபிவிருத்தி அவசியமாகும்" என அவர் குறிப்பிட்டிருந்தார்.

**சுற்றாடலும் மனித உரிமையும்**

இப் பூமியில் பிறக்கும் அனைவருக்கும் வாழும் உரிமை உண்டு அனைத்து உரிமைகளையும் அனுபவிப்பதனால் சிறந்த சுற்றாடல் அவசியபடுகின்றது. சுற்றாடலுக்கும் மனித உரிமைகளுக்குமான இடைத்தொடர்பு சர்வதேசிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது Stockholm மாநாட்டிலாகும்.

தற்காலத்தில் சுற்றாடல் உரிமை, குடியியல் மற்றும் அரசியல் உரிமை என்பவற்றுடன் மாத்திரமன்றி பொருளாதார மற்றும் சமூக உரிமைகளுடனும் தொடர்புபட்டுள்ளது. உதாரணமாக பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான சுற்றாடலுக்கான உரிமை, அபிவிருத்திக்கான உரிமையுடன் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளது.

Stockholm பிரகடனத்தில் குறிப்பிட்டதுள்ளதன்படி ஒரு மனிதருக்கு சிறப்பாக வாழ்வதற்கும், தொழில்புரிவதற்குமான (திருப்தியுடனும் ஆரோக்கியத்துடனும்) சுற்றாடலை உருவாக்குவதற்கும் பொருளாதார அபிவிருத்தி அவசியமாகும். அதேவேளை மனிதரின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கும் அவசியமாகும்.

றியோ பிரகடனத்தின் முதலாவது கோட்பாட்டிலும் நிலைபேண்தகு அபிவிருத்தியை உருவாக்குவதற்கு திருப்திகரமான சுற்றாடலை உருவாக்குவதற்கான உரிமை அவசியம் என்பதனை தெளிவுபடுத்துகின்றது.

இலங்கை அரசியலமைப்பின் மூன்றாவது அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும் அதில் பொருளாதார, சமூக உரிமை, சுகாதாரமான சுற்றாடலுக்கான உரிமை, வாழ்வதற்கான உரிமை ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்பது அனேகமான ஆசிரியர்களுக்குத் தெரியாத ஒரு விடயமாகும்.

இலங்கை போன்ற ஒரு ஜனநாயக நாட்டில் சமூக பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இவ்வாறான செயற்றிட்டங்கள் அவசியமானவை. எனினும் இச் செயற்றிட்டத்தின் ஊடாக சுற்றாடல் பாதிப்பு ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். இலங்கையில் வாழ்வதற்கான உரிமை இல்லாததன் காரணமாக ஏனைய உரிமைகள் யாவும் அர்த்தமற்றவையாகவுள்ளன என்ற விமர்சனமும் எழுப்பப்படுகின்றது. சுற்றாடலுக்கான உரிமை இல்லாமல் செய்யப்படுவது மனித கௌரவத்துக்குரிய உரிமை மறுக்கப்படுவதற்குச் சமனாகும். மனித கௌரவத்துக்கான உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கப்படுவது வாழ்வதற்கான உரிமை மறுக்கப்படுவதற்குச் சமமாகும் *(Kinkri Devi v.Himachal Pradis).*

பிலிப்பைன்சில் காடழிப்பினால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புத் தொடர்பில் பராயமடையாத சிறுவர்கள் தமது பெற்றோருடாக வழக்கிட்டனர். பிறக்காத பரம்பரையின் பிரதிநிதிகளாகத் தாம் வழக்கிடுவதாக அவர்கள் தெரிவித்தனர். இதில் அவர்கள் சமநிலையானதும் சுகாதாரமானதுமான சுற்றாடலுக்காகத் தெளிவான அரசியலமைப்பு உரிமைகள் தமக்கு உண்டு என்றும், அதனால் அரசு அந்த உரிமைகளைப் பாதுகாத்தல் வேண்டும் என்றும் வாதிட்டனர். அத்துடன் பிரதிவாதிகளின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படவேண்டும் என்றும் கோரியிருந்தனர். இல்லையேல் எதிர்காலத்தில் தமது பரம்பரைக்குப் பாலைவனமே மிஞ்சும் எனத் தெரிவித்தனர்.*(Juan Antonio Oposa and others v. The Honorable Fulgencio S Factoran and others,1994)*

இலங்கையில் தேசிய சுற்றாடல் சட்டம் 1980 இல் (47), பிரிவு 17 இல் இயற்கை வளங்களிலிருந்து உச்சப் பயன் பெறப்படவேண்டிய அதேவேளை எதிர்காலச் சந்ததியையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இச் சட்டத்தின் மூலம் மத்திய சுகாதார அதிகார சபைக்கு *(CEA)* வளங்களை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்துவதற்குரிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரவு 15*(B)* இன்படி நிலத்தைப் பயனுடைய விதத்தில் பயன்படுத்துதல் வேண்டும். நாட்டின் தேவைக்கும் வளப் பயன்பாட்டுக்கும் இடையில் சமநிலையைப் பேண வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பல இடங்களில் பல்வேறு செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. ஆனால் அவை சுற்றாடல் மதிப்பீட்டுக்குட்படுத்தப் படுகின்றனவா? என்பது கேள்விக்குறியாகும். உதாரணமாக எப்பாவெல பொஸ்பேற் சுரங்கம் தொடர்பில் *Freeport MacMoran and IMC Agri co* என்னும் பிரதான பங்குதாரர் தனது சொந்த நாடான அமெரிக்காவில் பல சுற்றாடல் பாதிப்புக்களை ஏற்படுத்தியவர். எப்பாவெலையைப் பொறுத்தவரையில் 25 மில்லியன் மெற்றிக் தொன் பொஸ்பேற் மாத்திரமே கையிருப்பிலுள்ளது. சாதாரணமாக 40000 மெற்றிக் தொன் மாத்திரமே எமது நாட்டுத் தேவைக்காக நாம் பெற்றுப் பயன்படுத்தி வருகின்றோம்.

ஆனால் மக்மோறன் நிறுவனம் முதல் 12 வருடங்களுக்கு 1.2 மில்லியன் தொன்னும் அதன் பின் வருடாந்தம் 9 (900000 மெற்றிக் தொன்னும்) அகழ்வதற்குத் திட்டமிட்டிருந்தது. இவ்வாறே சென்றால் 30 வருடங்களில் எமது நாடு பொஸ்பேற்றை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும் எனச் சுட்டிக்காட்டி சுற்றாடல் ஆர்வலர்களால் வழக்கிடப்பட்டது. இந்த வழக்கில் *(Bulankulame v. The Secretary Ministry of Industrial Development and others,2000)* அமரசிங்க நீதிபதி குறிப்பிடும்போது "ஒரு நாட்டிற்குத் தமது இயற்கை வளங்களை உபயோகிக்க உரிமையுண்டு. எனினும் அது நாட்டின் அபிவிருத்தி மற்றும் சூழல் கொள்கைகளுக்கு இயைபானதாக அமைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்றார். அவர் மேலும் குறிப்பிடும்போது இலங்கை, ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்துவ நாடு என்ற வகையிலும் சர்வதேச சமூகத்தின் அங்கத்துவ நாடு என்ற வகையிலும் *Stockholm* மற்றும் *Rio* பிரகடனங்களை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். எனவே பொஸ்பேற் மீள உற்பத்தி செய்ய முடியாத வளமாகும். அதனால் அதனைத் தற்போதைய மற்றும் எதிர்காலப் பரம்பரைக்காக மீதப்படுத்துதல் வேண்டும் என்றார்.

இலங்கையில் நன்னீர் நிலைகளை அண்டிப் பாரிய அளவில் இறால் வளர்ப்பு நிலையங்கள் நிறுவப்படுகின்றன. இதனால் மண்வளம் வெகுவாகப் பாதிக்கப்படும். குடிநீர் உவர் நீராக மாறும். சூழவுள்ள தாவரங்களும் விலங்குகளும் அழிந்துபோகும். இதே போன்றதொரு நிலை இந்தியாவில் ஏற்பட்டபோது நீதிமன்றம் இறால் பண்ணையை உடனடியாக மூடிவிடுவதுடன் சுற்றுப்புறச் சூழலைச் சீராக்கும் பொறுப்பினை உரிய நிறுவனமே ஏற்க வேண்டும் எனும் தீர்ப்பினையும் வழங்கியுள்ளது *(S.Jehanathan v. Union of India)*.

மேலும் இந்த வழக்கில் திருகோணமலைக் குடாவிற்கு அண்மையில் 450 ஏக்கர் நிலப்பரப்பில் பொஸ்பேற் அமிலமும் சல்பூரிக் அமிலமும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது. இதனால் கடுமையான சுற்றாடல் பாதிப்பு ஏற்படுவதுடன் எதிர்கால சந்ததியால் இப் பிரதேசத்தைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். அத்துடன் பொஸ்பேற் அகழ்வினால் உற்பத்திக் கழிவுகளும் பொஸ்பேற் உப்புக்களும் வேறு கதிரியக்கப் பொருட்களும் உருவாகும். சுரங்கச் செயற்பாடுகளால் உருவாகும் குழிகளில் நுளம்பு பெருகி மலேரியா, மூளைக் காய்ச்சல் போன்ற கொடிய நோய்கள் உருவாகும் எனவும் வாதிடப்பட்டது.

இந்த வழக்கில் மேலும் கருத்துத் தெரிவித்த அமரசிங்க நீதிபதி, சுற்றுப்புறச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு செயற்படுவதுடன் எம்மால் போற்றப்படும் அனைத்து உரிமைகளுடனும் சுற்றாடலுக்கான உரிமைகளுடனும் வாழ்வதற்கான உரிமைகளுடனும் தொடர்புபட்டதாகும். திருப்தியான சுற்றாடல் இன்றி வேறு எந்த உரிமைகளையும் போற்ற முடியாது. இதனால் அனைத்து உரிமைகளும் இணைந்த உரிமைகளாகவே கொள்ளப்படும். உதாரணமாக ஒரு நாட்டின் குடிமகனுக்கு/மகளுக்கு வாழ்வதற்கேற்ற சிறந்த சுற்றாடல் இல்லாவிட்டால் அது குரூரமான மனிதத்துவமில்லாத நிலைமையை உருவாக்கும். அதேபோல் திருப்தியான சுற்றாடல் இன்றி விருப்பமான இடத்துக்குச் செல்வதற்கான உரிமை, விருப்பமான தொழிலைப் புரிவதற்கான உரிமை, மொழி மற்றும் வெளியிடுவதற்கான உரிமை போன்ற எவையும் மதிக்கப்படத்தக்கவையல்ல என்றார்.

பொது அதிகார சபைகளால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு தேசிய மட்டத்திலான சுற்றாடல் செயற்பாடுகளிலும் அவை தொடர்பான தகவல்களைப் பெற தனியாட்களுக்குப் போதுமானளவு வசதிகள் செய்யப்படவேண்டும். பொதுமக்களுக்குத் தகவல்களைப் பெற்றுக்

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வதற்கு வசதியளித்தல் வேண்டும். அதேபோல் சுற்றாடல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தேசிய மட்டத்திலான தீர்மானங்களை எடுக்கும்போது அதில் பொதுமக்களின் பங்களிப்புக்கு முக்கியத்துவமளித்தல் வேண்டும். பொதுமக்களுக்குத் தகவல் பெறுவதற்கும் வழங்குவதற்கும் உரிமை உண்டு. இது 19ஆம் சீர்திருத்தத்தில் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தியாவில் சுற்றாடல் தொடர்பான வழக்கொன்றில் *(MC Mehta v. Union of India and Others, 1984)* பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்க அரசாங்கத்துக்குக் கடப்பாடு உண்டு. அரசியலமைப்பின் ஏதாவது உறுப்புரையின் கீழ் படமாளிகை, வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற பொதுசன ஊடகங்களின் மூலம் சுற்றாடலுடன் தொடர்புபட்ட செய்திகளை மக்களுக்குப் பரப்புவதற்குக் கட்டளையிடப்படுதல் வேண்டும். அத்துடன் பாடசாலைக் கலைத்திட்டத்தில் கட்டாய பாடமாக இது உள்ளடக்கப்படுதல் வேண்டும் என முறைப்பாட்டாளர் கோரிக்கை விடுத்தார்.

இன்று நீர் மாசுபடுவதால் சிறுநீரகப் பிரச்சினை இலங்கையில் பாரிய பிரச்சினையாகவுள்ளது. குறிப்பாக வடமத்திய மாகாணத்தில் இந்த நிலமை உக்கிரமடைந்துள்ளது. இதனைக் கட்டுப்படுத்த இன்று பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக,

1. சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பாக நாடளாவிய ரீதியில் கவனயீர்ப்பை மேற்கொள்ளுதல்.
2. சுற்றாடல் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துதல்.
3. விவாசாயச் செய்கையில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பிலும் அவற்றைப் பாதுகாப்பாகக் கையாள்வது தொடர்பிலும் நீர் மற்றும் சுற்றாடல் மாசுபடுத்தப்படுதல் தொடர்பிலும் அவற்றால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பிலும் விவசாயிகளுக்கு அறிவூட்டுதல்.
4. பழங்களையும் மரக்கறிகளையும் அறுவடை செய்வதற்கு முன்னரும் கொண்டு செல்வதற்கு முன்னரும் பயன்படுத்தும் இரசாயனப் பாவனையை முற்றாகத் தடுத்தல்.
5. சுகாதாரமான குடிநீரை வழங்குதல்.

போன்றவை இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றன.

இயற்கை வளங்கள் தனியாருக்குச் சொந்தமானவையல்ல அரசாங்கங்கள் இயற்கை வளங்களைக் காவலர் என்ற நிலையிலிருந்து பாதுகாகக்க வேண்டும். பாடசாலை மாணவர்களுக்கு சுற்றாடல் தொடர்பான சட்டங்கள், நியாயாதிக்கங்கள் கோட்பாடுகள், விழுமியங்கள் தொடர்பில் கலைத்திட்டத்தினூடாக விளக்கமளிக்கப்படுதல் வேண்டும். வெறுமனே பண்டைய வரலாறுகளையும், புனைகதைகளையும் போதிப்பதை விட சுற்றாடல் சிந்தனை சுற்றாடல் தொடர்பான சட்டங்கள் என்பன காலத்தின் தேவையாகும் இவற்றை கலைத்திட்ட உருவாக்க நிபுணர்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக தேசிய கல்வி நிறுவகம் இதில் கூடிய அக்கறை செலுத்துதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன ஓவியம் :
# யாழ்ப்பாணத்து நவீன ஓவிய முன்னோடிகளும் கல்வி நிறுவனங்களில் ஓவியக்கல்வியும்

✸ கோ.கைலாசநாதன்

கட்டுரையாளர்
ஓய்வுநிலை
உதவிக்கல்விப்
பணிப்பாளர்
(அழகியல்)

மரபானது கைவிடப்படும் போது நவீனம் உருவாகின்றது. *"Modern"* என்பதற்கான ஆங்கில அகராதி வழிவரும் தமிழ்க்கருத்தானது "தற்காலத்திய" அல்லது "சமீப காலம் சார்ந்த" என்றே எழுதப்பட்டிருக்கின்றது. எனவே நவீன ஓவியங்கள் எனக் குறிப்பிடப்படும் போது தற்காலத்திய ஓவியங்கள் என்ற கருத்துக்கே நாம் வரவேண்டியவர்களாகின்றோம். உண்மையில் இக்கருத்துத் தவறானது என்பதுடன் அகராதி ஊடாக மேற்குறிப்பிட்டவாறு பொருள் கொள்ளல் பிழையானதுமாகின்றது. அவ்வாறாயின் "நவீன" என்பதன் சரியான விளக்கம் யாது? வழமையிலிருந்து வித்தியாசமானது அல்லது மாறுபட்டது என்பதே அச்சொல்லுக்கானதொரு விளக்கமுமாகின்றது. பலவருடங்களுக்கு முன்னர் வரைந்த ஓவியமொன்று நவீன ஓவியமாக இருக்கலாம், ஆனால் இன்று வரையப்பட்டது நவீன ஓவியமாக இல்லாதும் போகலாம்.

மரபுவழி ஓவியங்களில் பயன்படுத்தப்பட்ட சித்திர விதிமுறைகளான "சித்திரவெறியம்" *(Perspective)* "முற்குறுக்கம்" *(Foreshortening)* ஆகியவற்றைக் கைவிட்டதுடன் அவற்றையே மிகவும் நுட்பமாக மாற்றமடைகின்ற நிறபேதங்களால் வெளிப்படுத்த பிரெஞ்சு ஓவியரான "போல்சிசான்" முற்பட்டார். இவரே நவீன ஓவியத்துக்கான ஆரம்பகர்த்தா என்பதுடன் அதன் தந்தையுமாகின்றார். கூம்புகளும் கனவுருக்களும் அவரின் வடிவமைப்புக்களுடன் தொடர்புபடுவதுடன் மேலும் உருக்களின் திண்மத் தன்மையையும் அவர் வலியுறுத்தியவராவார். மேலே குறிப்பிடப்படும் "மாற்றமுறும் நிற பேதங்கள்" என்ற சொற்றொடர் மிகவும் சூக்குமமாகப் பொருளின் திண்ம இயல்பை நிறங்கள் வழியாக வெளிப்படுத்தும் ஓர் உத்தி எனலாம்.

போல்சிசானின் இந்த உத்திகளையடுத்து நவீன ஓவிய உலகுக்குள் ஆழச்சென்றவர்கள் பிக்காஸோவும் பிறேக்குமாவார்கள். தங்குதடையற்ற கோட்டோட்டம், மிகவும் இரேகைச் சிக்கனத்துடன் கூடிய உருக்கள், குறியீடுகள் , தேவையையொட்டியவாறு உருவங்களின் நீட்சிகள், உருவங்களில் சில மூலகங்களின் விடுபாடுகள், மூலகங்களின் விடுபாட்டிற்குப் பதிலீடாக, வேறு மூலகங்களின் பகுதிகளை இணைத்தல் என்றவாறு நவீன ஓவியம் தன்னகத்தே பற்பல அம்சங்களையும் உள்ளடக்கியுமுள்ளது. நவீன ஓவியத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதிஒன்றாகக் கற்பனை செய்தால் அந்த வீதியின் இரு மருங்கிலும் நிற்பவர்கள், மொனே, போல்சிசான், போல்கொகையின் , வான்கோ, பிக்காஸோ, பிறேக், ஜக்சன்போலக் என நீண்டு செல்லும் பெயர்களைக் கொண்ட ஓவியர்களே ஆவார்கள்.

ஓவியம் தொடர்பான அடிப்படை அறிவு இல்லாமல் நவீன ஓவியத்தை வரைந்து விடமுடியும் எனப் பலர் நினைக்கின்றனர். எருதினைச் சரியாக வரையத் தெரிந்தால்தான் "நவீன எருது" ஒன்றினை ஓவியரால் காட்ட முடியும். உண்மையில் அந்த எருதிற்தான் "எருதுத்தனம்" என்ற உயிர் வெளிப்படும். அவ்வாறு இல்லையெனின் "எருதுத்தனம்" இறந்தும்விடும்.

காட்சிகளைப் பிரதி பண்ணாமல் காட்சிகளை உருவாக்குவதிலேயே நவீன ஓவியம் பெரும் பங்கு வகிக்கின்றது. ஒரு பொருள் இவ்வாறு தான் இருக்கும் என்ற எமது நிபந்தனை வயப்பட்ட சிந்தனையுடன் நவீன ஓவியமொன்றைப் பார்த்துப் புரிந்துகொள்ளவும் முடியாது. இது போலவே நிபந்தனைப் பெட்டிக்குள் இருந்து கொண்டு புதியதைப் படைக்கவும் முடியாது. புதியது வேண்டுமெனில் நிபந்தனைப் பெட்டிக்குள்ளிருந்து வெளியே வருவதுடன் அதற்கு வெளியே வந்து சிந்திக்கவும் வேண்டியிருக்கின்றது.

இந்தியாவிலிருந்து வெளிவருகின்ற ஆனந்த விகடன், கல்கி, குமுதம், அம்புலிமாமா போன்ற சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சித்திரங்களுடனும் வீட்டில் உள்ள சுவாமிப்படங்களுடனும் எமது மக்களுக்கு நெருங்கிய தொடர்பொன்று இருந்து கொண்டே வருகின்றது. அவர்கள் இரசித்து மகிழ்வுறும் சித்திரங்கள் மேற்குறிப்பிட்டவையேயாகின்றன. இவற்றிற்கெல்லாம் நிறுதிட்டமானதொரு வடிவமைவும், மக்களின் நாடிபிடித்தறிந்து அதற்கு இசைவாகக் கதை மாந்தர்களின் முக உணர்வுகளைக் காட்டுவதுவும், சுவாமிப்படங்களின் வழுவழுப்பும், கண்ணைக் கவரும் வண்ணங்களும் என இங்கு குறிப்பிடப்படும் அம்சங்கள் மக்கள் மனதில் தொடர்ச்சியாகப் பதிவாகியும் வந்துமுள்ளன. இத்தகைய முற்கற்பிதங்களுடன் இருக்கும் மக்களின் மனதில் நவீன ஓவியங்கள் எனக் குறிப்படப்படுபவை எடுபடாப்படைப்புகளே ஆகின்றன.

இத்தகைய இரசனை உணர்வை ஓரளவு மாற்றியதுடன் அழகினை இவ்வாறான வடிவமைப்புகளின் ஊடாகவும் இரசிக்கலாம் என்ற எண்ணப்பாட்டை யாழ்ப்பாண மக்களின் மத்தியில் எழச்செய்தவர்கள் ஓவியர்களான திரு.க.கனகசபாபதி, திரு அ.மார்க், திரு .வை. சிவசுப்பிரமணியம் ஆகியோர்களேயாவார்கள். நவீன ஓவியக் கலைக் காலநிலைக்குள் அழைத்துச் சென்ற திருப்புமுனைகளாக இவர்கள் இருந்துள்ளார்கள். இதற்கு முன்னரெல்லாம் தேய்ந்ததும் பலமுறை தரிசித்ததால் சலிப்பையும் ஏற்படுத்தும் வடிவமைப்புகளின் பதிவுகளே எமக்குள் இருந்தன. வடிவமைப்புகள் மட்டுமல்லாது கருத்துநிலை சார்பாகவும் இவர்களின் வெளிப்பாடுகள் ஓரளவு வித்தியாசமாகவும் அமைந்திருந்தன எனலாம். இங்கு குறிப்பிடப்பட்ட மூவர்களுள் திரு.அ.மார்க்கின் பாணி, எண்ணக்கரு ஆகியவை பற்றி ஏற்கனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்ச்சைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. அவை பற்றி இங்கு எவையும் குறிப்பிடமாட்டா என்பதுடன், இக்கட்டுரையின் நோக்கம் திருப்பு முனைகளைப் பற்றிப் பேசுவதாகவே அமையவும் உள்ளது.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியின் சித்திரக்கலை விரிவுரையாளராகப் பணிபரிந்த திரு.க.கனகசபாபதியின் சேவற்சண்டை, புத்தகம் வாசிக்கும் பையன் ஆகிய ஓவியங்கள் வழமையில் இருந்தும் மாறுபாடானவையாக இருக்கின்றன. கேத்திரகணிதத் தள உருக்கள் பல சேர்ந்து சேவல்கள் இரண்டு ஆகியுள்ளன. நிறங்களின் மென்சாயல்களுடன் இருண்ட சாயல்களும் அருகருகே வைக்கப்படும் போது அவை தள உருக்களாக இருந்தபோதிலும் முப்பரிமாணப் பண்பைத் தூக்கிக் காட்டுவனவாகவே காணப்படுகின்றன. இத்தோற்றப்பாடு மிகச்சில இடங்களிலேயே காணவும் படுகின்றது. பிக்காஸோவின் கனவடிவப்பாணி இங்கு தோற்றங்கொள்கின்றது. அந்தக் காலகட்டத்தில் இக்கருத்து வெளிப்பாடு புதுமையானதாகவே இருந்துள்ளது. அந்தநேரம் இது புதுமையானது. எனவே வெளிப்படுத்துகையில் ஒரு திருப்புமுனையாகவே இது அமைகின்றது என்பதுடன் சண்டையை விடுத்துச் சண்டைக்கு ஆயத்தமாக நிற்கும் நிலையே இதில் வெளிப்பட்டுமுள்ளது எனக் கூறவும் முடியும்.

இவருடைய புத்தகம் படிக்கும் பையன் என்ற ஓவியத்தில் மரபும் நவீனமும் கலந்துமுள்ளன. பையனின் முகத்தில் மரபும் ஏனையவற்றில் கோடுகளின் ஊடாக எளிமையும் காணப்படுகின்றன. பையனின் கைகள், கால்கள் அவனின் புத்தகம் இவையாவற்றிலும் வளைவுகளின் ஒத்திசைவான ஒருங்கிணைவு நவீனத்துவமாக இருக்கின்றது. பிற்புலத்தில் சித்திர எறியத்தை அவர் பயன்படுத்தாது தள உருவங்களை ஒன்றன் பின் ஒன்றாக மறைப்பதன் மூலம் "ஆழம்" என்பதனைக் காட்டியுமுள்ளார். பையனின் "சேட்டில்" காணப்படும் கோடுகளுடன் பிற்புலத்தில் உள்ள கோடுகளும் சேர்ந்து சமநிலையைத் தோற்றுவித்துமுள்ளன. நிறங்களும் கோடுகளும் ஐக்கியப்படும் வகையில் இக்காட்சி அமைந்திருப்பதுடன் பையனின் முழுஉருவுமே விரைவுடன் கண்ணுக்குள் அகப்பட்டும் விடுகின்றது.

மிகவும் குண்டான கைகள், குண்டானகால்கள், சிறியமுகம், பருத்தஉடல் அத்துடன் இவைகளுக்கிடையே குறுகிய இடைவெளி என மார்க்கின் மனித உருவங்கள் காட்சி தருகின்றன. பெருவீதவளை கோடுகளை நன்கு அனுபவித்தே அவர் வெளிப்படுத்துவார். அரட்டையில் ஈடுபட்டிருக்கும் மூன்றுபெண்கள், சிவன், மகாத்மாகாந்தி, சிலுவையில் அறையப்பட்ட இயேசு, இரண்டு நாதஸ்வரக் கலைஞரும் தவில் கலைஞர் ஒருவரும், விவசாயி, சேவல், கிற்றார் வாசிப்பவர் என்னும் தலைப்புகளில் நீண்டு செல்லும் ஓவியங்களுள் மேற்குறிப்பிட்டவை சிலவாகும். ஏற்ற இறக்கங்கள், வளைவுகளும் சுழிவுகளும், ஒன்றுக்குமேற்பட்ட மனித உருக்கள் வரும் போது அவைகளுக்கு இடையேயான "இடவெளி ஒதுக்கீடுகளில்" கவனத்தைக் குவித்துக் கச்சிதமாகவும் கண்ணுக்கு இதமாகவும் அவற்றை வைப்புச் செய்யும் பாங்கு ஆகியன மார்க்கின் ஓவியங்களில் புடைத்து நிற்கும் அழகியல் அம்சங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனலாம். இதேவேளை சில ஓவியங்களைக் கவனிக்கும் போது முன்னணி உருக்களில் எடுத்த கவனம் பின்னணியில் எடுக்கப்படாது இருப்பதுடன் முன்னணியில் இருக்கும் உருவங்களின் நவீனத்துவம் பின்னணிக் காட்சிகளில் வலுவிழந்தும் இருப்பதைக் கண்டும் கொள்ளலாம்.

ரமணி எனச் சுருக்கமாக ஒப்பமிடும் திரு.வை.சிவசுப்பிரமணியம் ஆசிரியராகவும் அழகியற்பாட உதவிக்கல்விப்பணிப்பாளராகவும் பணியாற்றி ஒய்வு பெற்றவர். ரமணியின் படைப்புகளை உடனடியாகவே அவரின் படைப்புத்தான் என இனங்கண்டு கொள்ள அவரின் "பாணி" துணை செய்கின்றது. மரபும் நவீனமும் ஒன்றிணையும் அம்சங்கள் இருவருடைய படைப்புகளில் காணப்படுவதுடன் புத்தக அட்டைப்பட ஓவியங்கள், விளக்கப்படங்கள் ஆகியவற்றின் ஊடாகப் புதிய படைப்புலகைச் சிருஷ்டித்த முதல் முன்னோடியாகவும் இவர் இருக்கின்றார். ரமணியின் காலத்தில் அல்லாது, அதற்கு முன்னர் வெளிவந்து கொண்டிருந்த அட்டைப்பட ஓவியங்களில் உள்ள எழுத்துக்கள் அச்சிடப்பட்டனவாகவோ அல்லது கையால் எழுதப்பட்டனவாகவோ இருந்துமுள்ளன.

இந்த எழுத்துக்கள் பலசந்தர்ப்பங்களில் அட்டைப்பட ஓவியத்துடன் ஒத்திசையாமலேயே காணப்பட்டன. அட்டைப்படங்களுடன் இலாவகமாக இணையும் எழுத்துக்களைப் பொருத்தமாக வடிவமைப்புச் செய்து "எழுத்து வடிவக்கலை" ஒன்றினைத் தோற்றுவித்த எழுத்துருவ வடிவமைப்பாளர் ரமணியே ஆவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவரின் அட்டைப்பட ஓவியங்களையும் விளக்கப்படங்களையும் தற்போது பார்க்கக்கூடியனவாக இருப்பதுடன் அவரின் ஓவியப்படைப்புகளில் ஒன்றையேனும் பார்க்க முடியாமலும் இருப்பதற்கான காரணம் ஓவியங்கள் இல்லாமையேயாகும். அட்டைப்படங்களும் விளக்கப்படங்களும் இருந்த போதிலும் இவற்றைவிடக் கலைஞர் ஒருவரின் படைப்பாற்றற் புலவீச்சானது அவரின் ஓவியங்களுக் கூடாகவே நிர்ணயிக்கப்பட வேண்டியதொன்றாகவும் இருக்கின்றது. தேக்கமுறாத விரைவான கோட்டோட்டம், உருவங்களில் மேலோங்கும் அசைவு, நேர்த்தியைப் பேணுவதற்காகச் சிறு விடயங்களிலும் கவனிப்பு, திண்மத்தன்மையைப் பேணுவதற்காக உருக்களின் ஒரு பக்கத்தில் மட்டும் இடையிடையே வைக்கப்பட்டுள்ள புடைத்து நிற்கும் நிறத்திட்டுகள், சேலைக்கரைகள், உடைகள் ஆகியவற்றின் மீது காட்டப்பட்டிருக்கும் அலங்கரிப்பு அம்சங்கள் என இவருடைய வெளிப்பாடுகள் நீள்கின்றன.

யாழ்ப்பாணத்து நவீன ஓவியர்கள் எனச் சிலரைக் குறிப்பிட்டால் குறிப்பிடப்படும் ஓவியர்களுக்கு முன்னோடிகளாக இருப்பவர்கள் இவர்கள் மூவருமே. மரபுவழியில் வந்த ஓவியர்களுள் இவர்கள் மூவருமே நவீனத்தை உள்வாங்கியவர்களாக இருந்தும் உள்ளனர். இவர்கள் மூவருக்குமிடையேயும் நவீனத்துவம் தொடர்பாக விலகல்கள் இருப்பினும் அவை பற்றிய குறிப்பிடுகைகள் இங்கு அவசியமற்றவையே. இங்கு குறிப்பிடப்படுபவர்களின் ஓவியங்களின் கருப்பொருளில் பாரிய அளவு மாற்றங்கள் இல்லாதிருப்பினும் வடிவமைப்புகளில் மாற்றங்கள் இருந்தேயாகின்றன. ஒவ்வொருவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணியும் வித்தியாசமாகவே இருக்கின்றது. வடிவமைப்புகளில் மட்டுமல்லாது விடய உள்ளடக்கமும் கனதிமிக்கதாகச் சிந்தனையைத் தூண்டுபவையாகவும் சிந்தனையைக் கிளறி விடுபவையாகவும் அமைய வேண்டும். மரபு வழியிலிருந்து விலகிப் புதிய பாணியொன்றுக்குள் செல்லும் ஓவியரொருவர் தொடர்ச்சியாகவே அப்பாணியையே பின்பற்றி வரும்போது அதுவே மீளவும் மரபாகிவிடும் அபாயம் இருப்பதுடன் நவீன ஓவியமென்பது வடிவமைப்புகளில் மட்டுமே தங்கிவிடாத கருத்தியில் நிலைகளுடன் வடிவங்களையும் கடந்து அரூப நிலைகளுக்கும் அது ஊடுபோகும் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகின்றது.

இங்கு பெயர்கள் குறிப்பிடப்பட்ட ஓவியர்கள் மூவரும் தமது காலகட்டத்தில், அந்நேரத்தில் இருந்த ஏனைய ஓவியர்களை விடவும் தமது வெளியீடு திறன்களில் மாற்றங்களை ஏற்படுத்தியவர்கள். எனினும் இம்மாற்றங்கள் அந்நேரத்திற்கான பெரும் பாய்ச்சல்கள் எனக்கருதவும் முடியாதுள்ளது. மேலும் மரபுவழி ஓவியம் என்ற கணித வரைபில் இதுவரையும், வரையப்பட்டு வந்த வளையியானது இவர்களின் காலத்தில் திரும்பற் புள்ளிகளைச் சிறு அளவிலேயே ஏற்படுத்தியது என்பதே ஓர் உண்மையாகவும் இருக்கின்றது. இவர்களிடம் கற்ற மாணவர்களின் சிந்தனைப் போக்குகளிலும் அவர்களின் செயற்பாடுகளிலும் புதுமைகளைக் கொண்டு வருவதற்கான வித்துக்களை ஊன்றியவர்கள் என்ற பாராட்டுதலுக்குமுரியவர்கள் ஆகின்றனர். அ.மார்க் அவர்கள் யாழ்ப்பாணத்தில் வசித்துக்கொண்டிருந்த இறுதிநாள் வரை மாணவர்களை வீட்டுக்கு அழைத்து, இலவசமாகவே ஓவிய வகுப்புகளை நடத்திக்கொண்டிருந்ததுடன் வாழ்நாள் முழுவதும் "மாணவர்களுக்குக் கற்பித்த ஆசான்" என்ற பெயரையும் ஈட்டிச் சென்றுள்ளார்.

கற்பித்தல் தொடர்பாக இவர்களின் நடைமுறைகளை இன்றைய சித்திர ஆசிரியர்கள் அறிந்து கொள்ள முயற்சிக்கவேண்டும். இன்று 80% மான சித்திர ஆசிரியர்களிடம் தொழில்வாண்மை இல்லை என உறுதிபடக் கூறுவதுடன், மிகுதி 20% மான சித்திர ஆசிரியர்களும் தாம் கற்ற அல்லது பயிற்சி பெற்ற பல்கலைக்கழகங்களுக்கோ அல்லது ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளுக்கோ அவை இறந்துபோகாமல் இருப்பதற்குரிய ஒக்சிசனை வழங்கும் வழங்கிகளாக இருந்து கொண்டும் வருகின்றனர். இவர்கள் சுயஆற்றல் உள்ளவர்கள் என்பதுடன் இவர்களுக்குச் செயன்முறையாகக்கற்பிக்கக்கூடிய வாண்மை கூட இவர்களின் போதனாசிரியர்களிடம் முயற் கொம்பாகவே இருந்தும் வருகின்றது. மிகமிகச் சிறு தொகையான போதனாசிரியர்கள் மட்டுமே வாண்மை மிக்கவர்களாகவும் உள்ளனர்.

இங்கு குறிப்பிடப்பட்ட கல்வி நிறுவனங்கள் என சொல்லப்படுபவைகளின் உள்வீட்டிலேயே என்ன நடைபெற்றுக்கொண்டு வருகின்றது என வெளியுலகிற்கு எதுவுமே தெரியாது. திறமையானவர்களும் சிந்தனையைத் தூண்டும் வகையில் வினாத்தொடுப்பவர்களும் ஓரங்கட்டப்படுவதுடன் பழிவாங்கவும் படுகின்றனர். இந்த மாணவர்களுள் பலர் விரக்தி நிலையிலும்கூட உள்ளனர். இங்கு மாணவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுக்கட்டுரைகளை மதிப்பீடு செய்தல் என்பது வினோத நிகழ்ச்சிகளில் ஒன்றாகவே கொள்ளத்தக்கது. மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகளுக்கு உதவியவர்கள் தமக்கு வேண்டியவர்களாக இருப்பின் அவற்றிற்கு உயர் புள்ளிகளையும், மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகளுக்கு உதவியவர்கள் தமக்கு வேண்டத்தகாதவர்களாக இருந்தால் அதற்கு தாழ் புள்ளிகளையும் வழங்குவதே அதுவாகும். தமக்கு வேண்டத்தகாதவர்களிடம் உதவிபெற்ற மாணவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதுடன் திறமை மிக்கவர்களாக இருப்பதே அவர்களுக்கான தடைக்கற்களாகவும் காணப்படுகின்றன.

இவர்களுடன் "இடி அமீன்" பாணியிலேயே கேள்விகளும் குறுக்கு விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இந்த உண்மைகள் வெளிவராமல் இருக்க செறிவான பூச்சிமருந்துகள் அவைமீது விசிறப்பட்டும் உள்ளன. இதன் காரணமாக உண்மைகள் மயக்க நிலையிலேயே உள்ளன. எது எப்படியிருப்பினும் உண்மைகளை எவராலும் கொல்லமுடியாது என்பதுடன் அவை வெளிவருவதும் உண்மையாகவே இருக்கவும் போகின்றது.

சித்திரக் கல்வியின் வீழ்ச்சிக்கு மேலே குறிப்பிடப்பட்டவற்றுடன் இன்னும் பல காரணிகள் காரணமாகின்றன. 80% மான சித்திர ஆசிரியர்கள் எனக் கூறப்பட்டவர்கள் வகுப்பறைக் கற்பித்தலில் தாம் வரைந்து காட்டுவதற்காக ஒருபோதும் கரும்பலகையைப் பயன்படுத்தாதவர்களே. ஆசிரியர்களுக்குத் தெரிந்தவற்றை மட்டும் மாணவர்கள் அறிந்து கொள்ளவேண்டிய சூழ்நிலைகளும் இந்தப்பாடத்தைப் பொறுத்தவரை வகுப்பறைகளில் இருக்கின்றன.

மாணவர் வரையும் பாணியை அறிந்துகொண்டு அப்பாணிக்கு ஏற்ற வகையில் அவர்களுடனே சென்று அவர்களின் ஆக்கங்களில் திருத்தங்களைச் செய்யாது, "எனது பாணி இதுதான், எனது பாணிக்குள் நீங்கள் வாருங்கள்" எனத் தனது அச்சுக்குள் மாணவர்களை உட்செலுத்தும், ஒருவகையில் "இயாந்திரிகப் பாங்கு கொண்ட ஆசிரியர்களும்" நிறையவே உள்ளனர். இதன் காரணமாக மாணவர்களின் "சுயம்" நசுக்கப்படுவதுடன் அவர்களின் புதுமையான அல்லது வித்தியாசமான சிந்தனைப்போக்குகளும் அதன் வழி வடிவமைப்புகளும் வெளிவராது தடுக்கவும் படுகின்றன.

ஆசிரியர் இயங்குவது, ஆசிரியரும் மாணவரும் இயங்குவது, மாணவர்கள் மட்டும் இயங்குவது என்ற நிலைகளை வகுப்பறைகளில் காணமுடியாமலும் இருக்கின்றது. சித்திரக்கலை தொடர்பான வளர்ச்சியானது மறைப்பெறுமதியாக நகர்ந்துகொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் இலக்கியவாதியொருவர் அண்மையில் வெளிவந்த சஞ்சிகையொன்றில் "யாழ்ப்பாணத்தில் ஓவியக்கலை வளர்ச்சியடைந்து வருகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். ஓவியக் கலையை வளர்ப்பவர்கள் எனப் பேசப்படுபவர்கள் இலக்கியவாதிக்கு மிகவும் வேண்டியவர்களாக இருப்பதால் அவர்களுக்காக இவர் வக்காலத்தும் வாங்கியுள்ளார் என்பதை இதனுடன் தொடர்புபட்டவர்கள் தெளிவாகப் புரிந்தும் கொள்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரச விருதுகளைப் பெறுவதற்காகவும் , தமது பதவிகளைத்தக்க வைத்துக் கொள்வதற்காகவும் தமது பலவீனங்களை வெளியே தெரியாமல் மூடிமறைப்பதற்காகவும் மேற்தட்டு வர்க்கமொன்றைக் குளிர்விக்க வேண்டிய தேவையும் ஓவியக்கலையை வளர்த்து வருபவர்கள் எனச் சொல்லப்படுபவர்களுக்கு இருக்கின்றது என்பதே ஓவியக்கலை வளர்ச்சி என்ற சொற்றொடர்களுக்குள் அமிழ்ந்து போயிருக்கும் உண்மையாகவும் இருக்கின்றது.

உயர்கல்வி நிறுவனமொன்றின் ஓவியப்பிரிவில் மாணவர் ஒருவருக்கும் போதனாசிரியர் ஒருவருக்குமிடையே நடைபெற்ற உரையாடல் ஒன்று இங்கு கீழே தரப்படுகின்றது. இந்த உரையாடல் உண்மையிலேயே நடந்ததொன்றாகும்.

மாணவன் : கோழி ஒன்றைப் பலமுறை வரைந்தும் சரியாக வரைய முடியாமல் இருக்கின்றது. கோழியொன்றை எனக்கு வரைந்து காட்டுங்கள்சேர்.

போதனாசிரியர்: எத்தனை தடவைகள் உங்களுக்குக் கூறினாலும் நீங்கள் திருந்துவதாக இல்லை. நான் வரைந்தால் எனது பாணியை, நீங்கள் பிரதிபண்ணியதாகவே அமைந்துவிடும். நீங்களே முயற்சி செய்து வரையுங்கள்.

மாணவன்: ஒருமுறை கூட நீங்கள் எமக்கு எதுவும் வரைந்து காட்டவில்லை. இம்முறையாவது அதை மட்டும் வரைந்து காட்டுங்கள்.

போதனாசிரியர்: வரைதாளையும் பென்சிலையும் தாரும்.

மாணவன்: இந்தாருங்கள் சேர். போதனாசிரியர் தாளில் எதையோ வரைந்து முடிக்கின்றார்.

போதனாசிரியர்: இந்தாரும் நான் வரைந்தது இதுதான் இதனைப் பாரும்.

மாணவன்: என்னசேர் நான் கோழியை வரைந்து காட்டும்படி கேட்க, நீங்கள் கோழி முட்டையை அல்லவா வரைந்திருக்கின்றீர்கள்.

போதனாசிரியர்: முட்டையில் இருந்துதான் கோழி வரும். இப்போது முட்டை வரைந்து காட்டப்பட்டிருக்கின்றது. அதிலிருந்து கோழியை நீரே உருவாக்கும். ஓர் அடிப்படை உமக்குத்தரப்பட்டுள்ளது. அடிப்படையை மட்டும் காட்டிக்கொடுப்பதே எனது வேலை

மாணவன்: ஐயோ இது என்ன கொடுமை.

போதனாசிரியரால் வரையப்பட்ட கோழிமுட்டையானது தாளுடன் ஆவணப்படுத்தப்பட்டு வருகிறது. என்றோ ஒருநாள் அதிலிருந்து வெளிவரவிருக்கும் கோழியை நாம் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் வாழ்வும் அழகியற் கல்விச் சிந்தனைகளும்

* சபா.ஜெயராசா

கட்டுரையாளர்
கல்வியியல்துறைப் பேராசிரியர் (ஓய்வு)
பன்னூல் ஆசிரியர்

செய்யும் தொழில்களை அடியொற்றிச் சிந்தனைகள் வளர்ச்சியடைந்தமைக்கு இணையாக அழகியற் செயற்பாடுகளும் சிந்தனைகளும் நீட்சி கொண்டு வந்துள்ளன. அழகை உணர்தல் வாழ்வின் இருப்போடு இணைந்த ஓர் உளவியற் செயல்முறையாக இருப்பதனால் அது வர்க்கசார்புடையதாகவுமுள்ளது.

தமிழர் வாழ்விலே அழகு என்பது பலமுனைத் தொடர்புகளைக் கொண்டிருந்தமையால், அதனைக் குறிப்பதற்கு பல சொற்கள் தோற்றம் பெற்றன. பிங்கல நிகண்டில் அழகு என்பதைக் குறிக்கும் பல சொற்கள் எடுத்தாளப்பட்டுள்ளன.

எடுத்துக்காட்டு வருமாறு: ஏர், வனப்பு, எழில், இராமம், காரிகை, மா, அம்மை, கவின், செழுமை, பந்தம், தேசிகம், நோக்கு, அணி, அணங்கு, யாணர், பாணி, மாதர், மாழை, சாயல், வகுப்பு, வண்ணம், வளம், பூ, பொற்பு, சேடு, பொன், சித்திரம், பத்திரம், மாமை, தளிமம், மயம், மஞ்சு, மதன், பாங்கு, அம், சொக்கு, சுந்தரம், தோட்டி, ஒப்பு, அந்தம், ஒண்மை, விடங்கம், அமலம், குழகு, கோலம், வாமம், காந்தி அலங்காரம், கொம்மை, மனோகரம் மற்றும் சாரு.

பிங்கல நிகண்டு தமிழரின் வரன்முறைக் கல்விச் செயல்முறையை அடியொற்றி எழுந்த நூல். அழகியல் பற்றிய சிந்தனைகள் வரன்முறைக் கல்வியில் இடம்பெற்றிருந்தமையை மேற்குறித்த நீண்ட செயற்பாட்டியல் விளக்குகின்றது.

தொழில்முறைகளுக்கும் அழகுணர்ச்சிக்குமிடையே காணப்பெற்ற இணைப்பையும் மேற்குறித்த சொற்கள் புலப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக ஏர் என்ற சொல் வேளாண் செழிப்பிலிருந்து அழகைக் குறிக்கும் எண்ணக்கருவாக நீட்சி கொண்டது. தொழில் செய்யும் கை, எழில் எனப்பட்டது. அதுவே அழகைக் குறிக்கும் சொல்லாகவும் நீட்சி கொண்டது. மேலும் "கை" என்ற சொல் அழகைக் குறிக்கும் என்று ஆசிரிய நிகண்டிலே குறிப்பிடப்பட்டிருத்தல் தொழிலும் அழகும் தொடர்பான கருத்தை மீள வலியுறுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரன்முறை சார்ந்த கல்வியில், செய்யுள் அழகின் வடிவமாகக் கொள்ளப்பட்டது. மேலும் தொல்காப்பியப் பொருளதிகார செய்யுளியலிலே செய்யுளுக்கு அழகுக்குமுள்ள தொடர்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (பொருள் 537)

*"செய்யுள் மொழியால் சீர்புனைந்தியாப்பு*
*அவ்வகைதானே அழகெனப்படுமே"*

செய்யுள் வழியாகக் கையளிக்கப்படும் பொருள், மனவெழுச்சிக் கோலங்கள், உவமை, உருவகச் சித்திரிப்புக் கோலங்கள், இசை உள்ளீடு முதலியவற்றின் செழும் கலவைச் சேர்க்கை *(Blend)* அழகை உருவாக்குகின்றது. வாய்மொழி மரபிலிருந்து தோற்றம்பெற்ற பாடல் கல்வி நிலையில் ஒழுங்கமைக்கப்பட்ட இலக்கண விதிகளின் ஏற்றம் பெற்றமை அழகும் ஒழுங்கமைப்பும் தொடர்பான பிறிதொரு செயற்பாடு.

நாட்டார் வழக்கில் உடலியக்கம் *(Psychomotor)* தொழிற்பாடுகளுடன் கலைகள் இணைந்திருந்தன. கூத்தும், சிற்பங்கள் ஆக்குதலும், ஓவியங்கள் வரைதலும் என்றவாறான செயற்பாடுகள் அவற்றுக்குரிய சுட்டற்காட்டுக்கள்.

தொன்மையான வரன்முறைக் கல்வி வழக்கில், சொல் *(Verbal)* ஊடகத்தைக் கொண்ட அழகியல் ஆக்கமே மேலோங்கியிருந்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு யாப்பும் வளர்ச்சியடையத் தொடங்கியது. அச்செயற்பாடுகள் அனைத்தும் வரன்முறை அறிவுடன் உறவாடும் மேட்டுக்குடியினருக்குரிய "புலனெறி வழக்கு" என்ற நிலையை எட்டியிருந்தன.

சமூக வளர்ச்சியோடும் வரன்முறையான கல்வி வளர்ச்சியோடும் "செய்யுள்" என்ற வடிவம் நீண்ட பொருளுரைக்கும் தொடர் வடிவமாக நீட்சி கொண்டது. அதன் தொடர்ச்சியானது காவிய வடிவத்தை எட்டியது.

தமிழ்ச் சூழலில் வரன்முறைக் கல்வி நிலைபேறு கொண்டிருந்தமையை தொல்காப்பிய நூலாக்கம் தெளிவுபடுத்தியுள்ளது. மெய்பாடுகளும், செய்யுள் நயப்பும் உள்ளிட்ட அழகியற் பண்புகளை விளக்கும் முதல் நூலாகவும் அது விளங்குகின்றது.

வரலாற்றுத் தொடர்ச்சியில் செய்யுள் என்ற முத்தமிழ் நிலைக்குரிய வளர்ச்சி நிகழத் தொடங்கியது. "முத்தமிழ்" என்ற கருத்துவடிவம் தமிழ் அழகியற் கல்வியில் நிகழ்ந்த அகன்ற ஏற்றத்தைக் குறிப்பிடுகின்றது. தமிழ்ச் சூழலில் மட்டுமன்றி வடமொழிச் சூழலிலும் மூவகை நோக்கு வளர்ச்சியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வடமொழியில் ரசபிரமவாதம், நாதப்பிரமவாதம், வஸ்து பிரமவாதம் முதலாம் அழகின் உருவாக்க முப்பொருள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வடிவிலே தோற்றம் பெற்ற காவியமாக, சிலப்பதிகாரம் எழுதப்பட்டது. நீண்ட அழகியல் அனுபவக் கையளிப்பு காவியங்களுக்குரிய சிறப்புப் பரிமாணமாகின்றது.

நீண்ட காவிய அமைப்பில் அனைத்துச் சுவைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அச்சுவைகள் பாத்திர வளர்ச்சியோடும், பாத்திர இடைவினைகளோடும் இணைந்திருந்தன. சிலப்பதிகாரம் அந்தப் பண்புகள் அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு காவியம்.

வடமொழிக் கல்வி மரபில் காவிய அழகியலை உருவாக்குவதில் "ஒளசித்யம்" ஒரு முக்கியமான பண்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பொருள் "பொருத்தப்பாடு" அல்லது "உற்றிணைப்பு" என்பதாகும். சிலப்பதிகாரத்தில் கதைக்கோல கதைமாந்தர், கதைமாந்தர்களின் இடைவினைகள் உரிய முறையில் உற்றிணைப்புச் செய்யப்பட்டிருக்கும் நிலை, தமிழகத்து அழகியற் கல்வி வளர்ச்சியினையும், அழகியலாக்கச் செயற்பாட்டினையும் தெளிவுபடக் காட்டுகின்றது.

அழகியற் கல்வியும் அழகியலாக்கங்களும் சமூக மாற்றங்களோடு இணைந்து மாறுதலடைந்து வந்துள்ளமையைக் காணமுடியும். வணிக சமுதாயத்துக்குரிய அழகியல் சிலப்பதிகாரத்தில் எழுகோலம் பெற்றுள்ளது. அரங்க அமைப்பு, ஆடை அணிகலன்கள், பல்வகை ஆடல் முறைமை, ஆடுவோருக்குரிய வெகுமதி, வரன்முறையான அரங்கேற்றம் முதலானவை வணிகப் பண்பாட்டுடன் இணைந்த அழகியற் செயற்பாடுகள்.

பக்திநெறிக் காலத்தில் "இறைசார்ந்த அழகியல்" என்ற பண்பு வளர்ச்சியடையத் தொடங்கியது. வாழ்க்கை இருளிலிருந்து தோற்றம் பெற்ற அன்பு இறைவனை நோக்கித் திருப்பப்படலாயிற்று. அன்பின் அடிப்படையாகவே "பக்தி" என்ற அனுபவம் மேலெழு கொண்டது.

பக்தி நெறிக் காலத்தில் பக்தியும், பாடலும் மீயுணர்வும் இசையும் கலந்த இலக்கிய அழகியல் தோற்றம் பெற்ற நாயன்மாரது, ஆழ்வாரதும் பாடல்கள் பக்தி இலக்கிய அழகியலை ஆழ்ந்து வெளிபடுத்தின.

தமிழகத்தில் நிகழத் தொடங்கிய சொத்துரிமை வளர்ச்சியும் தனியாள் நிலைப்பட்ட உணர்வுகளின் வெளிப்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை. தனியாள் நிலைப்பட்ட உணர்வுகள் பக்தியெழுச்சியுடன் ஒன்றிணைந்த வேளை முன்னர் கண்டறியப்படாத தனித்துவமான அழகியற் கோப்புடன் இணைந்த பாடல்கள் தோற்றம் பெற்றன. அவை கேட்டல், தனித்துப்பாடுதல், கூட்டாகப் பாடுதல் என்ற முப்பரிமாணங்களைக் கொண்டதாக எழுச்சி கொண்டன. இணை சார்ந்த பக்தி அழகியல் ஈடுபாட்டுக்கு அவை உறுவளம் செய்வதாக அமைந்தன.

பக்திச் செறிவும், இசைச் செறிவும், கவிதைக்குரிய அணி நலன்களும் இணைந்த நிலையில் "பாடப்படும் பாடல்களாக" அவை எழுச்சி கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பு வாழ்க்கையில் நிகழும் ஆளிடைத் தொடர்புகளையும் உறவுமுறைகளையும் இறை அனுபவத்துடன் தொடர்புபடுத்துதல் பக்தி அழகியலின் பிறிதொரு பரிமாணமாகக் காணப்பட்டது.

இறைவனைத் தந்தையாகவும், தம்மைப் புதல்வனாகவும் கொண்ட உறவுமுறை ஞானசம்பந்தரிடத்துக் காணப்பட்டது. இறைவனைத் தோழனாகக் கருதுதல் சுந்தரரது தேவாரங்களில் இடம்பெற்றது. மணிவாசகர் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு திருக்கோவையாரை "மதுரபாவம்" மேலோங்கப் பாடினர். ஆண்டாளும் அதே நிலையிலே தனது இறையன்பை மேலும் தீவிரமாக வெளிப்படுத்தினார்.

பக்தி அழகியலின் பிறிதொரு சிறப்புப் பரிமாணம் முழுமையான உடற்கூற்றுத் துலங்கலுடன் *(Total Physical Response)* தொடர்பட்டு நிற்றலாகும். வகை மாதிரிக்கு மணிவாசகரின் திருச்சதகப் பாடல் ஒன்றினை குறிப்பிடலாம்.

"மெய்தான் அரும்பிவிதிர் விதித்தது
உன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக்
கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உனைப்
போற்றி சயசய போற்றியென்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய்
என்னைக் கண்டுகொள்ளே"

அறிதல், உணர்தல், உடலியக்கம் ஆகியவற்றுடன் இணைந்ததாக பக்தி அழகியல் வளர்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

பக்திநெறிக் காலத்தில் தமிழகத்து வரன்முறைக் கல்வி நிலையங்களுள் கோயில்களும், மடங்களும் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. பக்தியும், வழிபாடும், கல்விச் செயல்முறையும் ஒன்றிணைந்து கொண்டன. அவற்றுக்கு அரச ஆதரவும் கிடைக்கப்பெற்றது. கல்விக் கையளிப்பில் "நிறுவனமயப்பாடு" என்பது அக்காலத்தில் மேலும் வலிமை கொண்டு மேலோங்கியது.

பக்தி அழகியல் தனித்து பாடல்களுடன் மட்டும் கட்டுப்பட்டிராது பிரயோக அழகியலாகவும் மாற்றம் பெறத் தொடங்கியது. கோயிற் கட்டடக் கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை முதலாம் துறைகளில் பிரயோக நிலை மேலோங்கியது. இறைவனது ஆடல் என்ற மனக்காட்சிக்கு உருவம் கொடுக்கும் வகையில் ஆடல்வல்லானின் உருவங்கள் செதுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயன்மாரதும், ஆழ்வாரதும் கருத்துநிலை வடிவங்களுக்குக் காட்சி வடிவங்கொடுத்து தேவரடியார் ஆடல் உருவாக்கம் பெற்றது. அதுவே பிற்காலத்தில் பரதம் என்ற அடையாளத்தைப் பெற்றது.

பக்தி அழகியலையும் ஆடல் அழகியலையும் ஒன்றிணைக்கும் கல்விச் செயற்பாடுகளும் நிலைபேறு கொண்டன. திருமூலரது திருமந்திரப்பாடலில் (2725) அதன் வளர்ச்சியைத் தெளிவாகக் காணலாம்.

"ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல்லியம் ஆனந்தம் வாச்சியம்
ஆனந்தம் ஆக அகில சராசரம்
ஆனந்தம் ஆனந்தக் கூத்தனுக்கே"

இதுவே தேவரடியார் ஆடலில் இறைவணக்கப் பாடலாக அமைந்ததென்று சொல்லப்படுகின்றது. தேவரடியார் ஆடல் வடமொழி அடைப்புக்கள் கொண்டு செல்லப்பட்ட வேளை (1930 ஆம் ஆண்டுக்குப் பின்) மேற்குறித்த திருமந்திரம் பாடும் முறைமை கைவிடப்பட்டு "ஆங்கிகம் புவனம்....." என்று தொடங்கும் நந்திகேஸ்வரரின் அபிநய தர்ப்பணப்பாடல் அறிமுகம் செய்யப்பட்டது.

தமிழில் அழகியல் வடிவங்களின் ஆக்கத்தில் கிராமிய அல்லது நாட்டார் மூலகங்களின் இணைப்பு இடம்பெற்று வந்தமை ஒரு முக்கியமான நிகழ்ச்சி. பொதுவாக அனைத்துப் பண்பாடுகளினதும் அழகியற் செயற்பாடுகளில் இப்பண்பு நீண்டு விரவியுள்ளது. பழந்தமிழ் இலக்கியங்களில் மட்டுமன்றி பிற்கால இலக்கியங்களிலும் அப்பண்பு மேலும் விரிவாக உள்வாங்கப்பட்டது.

தமிழ் மரபில் அழகியற் கல்வி என்பது தனித்த ஒரு பாடமாக இடம்பெறவில்லை. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழோடு இணைந்ததாகவே அழகியல் எண்ணக்கரு கையளிக்கப்பட்டு வந்தது.

மேலை நாடுகளிலும் கடந்த நூற்றாண்டிலே தான் "அழகியல்" என்பது தனித்த ஓர் அறிவுத் துறையாகவும் ஆய்வுத்துறையாகவும் மேலெழுச்சி கொண்டது. ஆயினும் வரலாற்றுக் காலங்களில் அழகு பற்றிய சிந்தனை நீள்பதிவு கொண்டு வளர்ந்து வந்தமை மனிதருக்கும் கலைகளுக்குமுள்ள உறவின் வெளிப்பாடாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

# காலம் மறந்த கணித மேதை?

✸ இரா.சிவராமன்


எஸ்.எஸ்.பிள்ளை

கணிதத்தில் அளப்பரிய சாதனைகள் புரிந்த ராமானுஜனுக்குப் பிறகு இந்தியாவின் கணிதப் புகழை உலகறியச் செய்த மேதைகளில் முக்கியமானவர் சுப்பைய சிவசங்கரநாராயண பிள்ளை (எஸ். எஸ். பிள்ளை). திருநெல்வேலி மாவட்டத்தில் வல்லம் கிராமத்தில் எளிய குடும்பத்தில் பிறந்த எஸ்.எஸ்.பிள்ளை சிறு வயதிலேயே பெற்றோரை இழந்தார்.

படிப்பில் படுசுட்டியாக இருந்தாலும் வாழ்க்கைச் சூழல் இடம் கொடுக்கவில்லை. இருப்பினும் பல ஆசிரியர்களின் உதவியால் செங்கோட்டை எஸ். எம். எஸ், எஸ். அரசு உயர்நிலைப் பள்ளி, திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரியில் கணிதத்தில் பி. ஏ. பட்டப் படிப்பு எனப் படிப்படியாக முன்னேறினார். (அந்நாளில் கணிதத்தில் வழங்கப்படும் பட்டத்தைப் பி. ஏ. பட்டம் என்றே குறிப்பிடுவர்.)

**போராடிப் பெற்றப் பட்டம்**

பி.ஏ. கணிதத்தில் இரண்டாம் வகுப்பில் எஸ்.எஸ்.பிள்ளை தேர்ச்சி பெற்றதால் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் படிப்புக்கு அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்பு இராமானுஜன் இதே போன்ற சூழலில் சிக்கித் தவித்தபோது சென்னை பச்சையப்பன் கல்லூரியின் அன்றைய முதல்வர் சின்னதம்பிப்பிள்ளை உட்படப் பலரின் பரிந்துரையால் சென்னைப் பல்கலைக்கழகம் அவருக்காக விதிகளைத் தளர்த்தியது. இம்முறை எஸ். எஸ். பிள்ளைக்கும் யாரேனும் உதவ முன்வருவார்களா?

எஸ்.எஸ். பிள்ளையின் கணித அறிவைக் கண்டுணர்ந்து மீண்டும் சின்னதம்பிப்பிள்ளையே சென்னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவில் "சாதாரண மாணவர்களுக்கென உருவாக்கிய விதிமுறைகளை மேதைகளின் மீது திணிக்காதீர்கள்" என வாதிட்டார். ஒரு வழியாக, எஸ். எஸ். பிள்ளை சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1927-ல் ஆய்வு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டார்.

**நூற்றாண்டுப் புதிருக்கான விடை?**

இங்கிலாந்தில் கிங்க்ஸ் கல்லூரியில் ராமானுஜனருடன் ஆய்வு புரிந்த ஆனந்த ராவ்விடம் இப்போது எஸ்.எஸ்.பிள்ளை ஆய்வு மாணவரானார். எண்ணியலில் நான்கு ஆண்டுகள் சிறப்பான ஆய்வு மேற்கொண்டு எம்.எஸ்.சி. பட்டம் பெற்றார். 1929-ல் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்

கட்டுரையாளர்
நிறுவனர், பை கணித மன்றம், சென்னை, அறிவியல் விழிப்புணர்வுப் பணிக்காகத் தேசிய விருது பெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிவுரையாளர் ஆனார். பன்னிரண்டு ஆண்டுகள் அங்கு பணிபுரிந்தவர் கணிதத்தில் மிகச் சிறந்த கண்டுபிடிப்புகளைச் செய்தார்.

அவருடைய அரிய கண்டுபிடிப்புகளுக்காக முனைவர் பட்டதுக்கும் மேலான *D.Sc. (Doctor of Science)* கவுரவத்தைச் சென்னை பல்கலைக்கழகம் அவருக்கு வழங்கியது. சென்னைப் பல்கலைக்கழகக் கணிதத் துறையின் முதல் ஆய்வு மாணவர் இராமானுஜன் என்றால், அதன் ஆகச் சிறந்த கணித ஆய்வு பட்டத்தை முதலில் பெற்றவர் எஸ்.எஸ்.பிள்ளை.

1770-ல் இங்கிலாந்து கணித அறிஞர் எட்வார்ட் வேரிங் யாரும் விடை கண்டுபிடிக்க முடியாத "வேரிங்ஸ் புதிர்" எண் கணிதப் புதிரை உருவாக்கினார். பல்வேறு ஐரோப்பியக் கணித மேதைகளே தடுமாறிய அந்தப் புதிருக்கு எஸ். எஸ். பிள்ளை பொதுவான தீர்வு கண்டார்.

குறிப்பாக ஓர் இயல் எண்ணை அதிகப் பட்சமாக எவ்வளவு எண்களைக் கொண்டு இருபடி, முப்படி, நாற்படி, ஐந்து படி, ஆறு படி, போன்ற படிகளின் கூடுதலாக எழுதலாம் என்ற கேள்விக்கு, எஸ். எஸ். பிள்ளை எனும் பொழுது எண்ணிக்கையில் உள்ளபடி எண்களை அதிகபட்சமாகப் பயன்படுத்தி எழுதலாம் என 1935-ல் நிரூபித்தார்.

இதன்மூலம் 165 ஆண்டுகள் நீடித்த புதிருக்கு விடை கிடைத்தது. இதற்காக அவருக்குப் பிரெஞ்சு குடியரசின் மகத்தான கவுரவ விருது 2003-ல் வழங்கப்பட்டது.

எண்ணியலில் 76 அரிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்திய எஸ். எஸ். பிள்ளையை அமெரிக்காவில் புகழ் பெற்று விளங்கும் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் ஆய்வு புரிய ஐன்ஸ்டைன், ஓபன்ஹைமர் உள்ளிட்ட மாமேதைகள் அழைப்பு விடுத்தனர். இதற்கு எஸ். எஸ். பிள்ளை, "எனது கணித ஆய்வுக்கு என் தாய்நாடே போதும்" எனப் பதிலளித்தார்.

பின்னர்த் தொடர் கோரிக்கைக்கு இணங்கி 1950-ல் அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் சர்வதேசக் கணித மாநாட்டில் *(ICM)* சிறப்புரை ஆற்ற ஆகஸ்ட் 30, 1950 *Star of Maryland* விமானத்தில் சென்னையிலிருந்து புறப்பட்டார். ஆனால் அடுத்த நாள் படுகோரமான விமான விபத்தில் காலமானார்.

இராமானுஜன் கணிதக் கழகம் சார்பில் 2009-ல் எஸ். எஸ். பிள்ளையின் கணித ஆய்வுகள், கடிதங்கள் போன்றவற்றை இரு புத்தகங்களாகத் தொகுத்து ஆர். பாலசுப்ரமணியன் மற்றும் ஆர். தங்கதுரை வெளியிட்டுள்ளனர்.

இராமானுஜன், எஸ். எஸ். பிள்ளை போன்ற தலைசிறந்த கணித மேதைகளை உலகுக்கு வழங்கிய தமிழகத்திலிருந்து மேலும் பல கணித மேதைகள் உருவாக வேண்டும். அதற்கு முதல்படியாக, கணிதத்தின் மீது, நம் முன்னோர்களுக்கு இருந்த ஆளுமையை இக்கால மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லி, ஒரு பெருமித உணர்வை வளர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியத்தில் உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகள்

* அன்பு ஜவஹர்ஷா

> ? 2009ஆம் ஆண்டு தொடக்கம் கடமை நிறைவேற்று அதிபராகக் கடமையாற்றி வருகின்றேன். நிரந்தர நியமனம் கிடைக்க வழி உண்டா?

2015ஆம் ஆண்டு கல்வியமைச்சின் புள்ளிவிபர வெளியீட்டின்படி 2541 உங்களைப் போன்று கடமையாற்றி வருகின்றனர். இந்த தொகையில் நீண்ட காலம் உள்ளவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கிலேயே உள்ளது.

கடந்த வருடமும் இவ்வருடமும் கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்கல் தொடர்பாக பலவித செயற்பாடுகள் இடம்பெற்றன. இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிரதமர் தலைமையில் குழுவொன்று ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்து உள்ளது. மூன்று வருடங்கள் தொடர்ச்சியாக கடமையாற்றியுள்ளவர்களை பரீட்சை ஒன்று வைத்து நிரந்தரமாக்குவதே இந்த தீர்வாகும்.

போட்டிப் பரீட்சை மூலம் 3901 பேர்களை நியமனம் பெற்று பயிற்சியும் பெற்று நியமனம் பெற காத்து இருப்பதாலும், கடமை பார்க்கும் அதிபர்கள் முன் அரசாங்கத்தில் நியமனம் பெற்றவர்கள் என்றபடியாலும் இரண்டு பிரதான கட்சிகள் இடையே பனிப்போரே நடந்து கொண்டு இருக்கின்றது. 2016.10.17 அன்று, அமைச்சரவை தீர்மானம்படி போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் மாகாண சபைகளுக்கு நியமனம் வழங்குமாறு அறிவுறுத்தலோடு கல்வியமைச்சால் அனுப்பப்பட்டுள்ளது.

மாகாண சபைகள் வேறு நிலைப்பாட்டில் நிற்கின்றன. வடமாகாண சபை மட்டுமே இந்த விடயத்தில் வேறு ஒரு நிலைப்பாட்டில் உள்ளது. அதுவும் தொழில்சங்கங்களின் நியாயமான போராட்டத்தின் பின்னர் தான் அந்த நிலை உண்டானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமத்திய மாகாண சபை இம்மாகாணத்தில் கடமையாற்றும் 394 கடமை நிறைவேற்றும் அதிபர்கள் அப்பாடசாலைகளில் தொடர்ந்து அவ்வாறே கடமையாற்ற விட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது. ஆகவே இந்த குறிப்பு எழுதப்படும் வரை இந்த பிரச்சினைக்கு சரியான தீர்வு காணப்படவில்லை.

? 2016.10.06 திகதி தொடக்கம் செயற்படும் வகையில் வழங்கப்பட்டுள்ள போதனாவியல் கல்விக் கல்லூரி டிப்ளோமாதாரி ஆசிரியர்களின் நியமனத்தில் சம்பளத் திட்டம் தொடர்பாக தெளிவில்லாது உள்ளது. இதை தெளிவுபடுத்த முடியுமா?

இந்த விடயத்தில் இரண்டு முறைகள் உள்ளன. உங்களது நியமனக் கடிதத்தில் ரூபா 27740 - 6x300 - 7x380 - 2x380 - 2x445 - 33090/- என்ற சம்பளத் திட்டத்தில் 9வது படிநிலையான 30300/- என்ற சம்பள படிநிலையில் வைக்க வேண்டும் என்று உள்ளது. இது 2020.01.01 தொடக்கம் முழுமையாக செயல்படும் 03/2016 இலக்க சம்பளச் சுற்றறிக்கை அறிவுறுத்தலின்படி வழங்கப்பட வேண்டியதாகும்.

06/2016 (xii) ஆம் இலக்கச் சுற்றறிக்கைப்படியும், அது தொடர்பாக கல்வியமைச்சால் வெளியிடப்பட்ட 35/2014, 35/2014 (i) ஆம் இலக்கச் சுற்றறிக்கைகளின்படியும் 11வது படிநிலையான 15000/- வே ஆரம்ப சம்பளமாக வழங்கப்பட வேண்டும். கல்வியமைச்சு கடந்த வருடமும் இந்த பிழையையேவிட்டது. பின்னர் 2015.05.27 திகதி ஆரம்ப சம்பளமாக 15000/- வழங்குமாறு சுற்றறிக்கையை கல்வியமைச்சு செயலாளர் அனுப்பியிருந்தார். ஒரு வருடத்தின் பின்னர் மீண்டும் அதே தவறை விட்டுள்ளார்கள். உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதத்தில் 11வது படிநிலையான 31060/- வில் வைக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருக்க வேண்டும். தொழில் சங்கங்களில் எதிர்ப்பை அடுத்த இது திருத்தப்பட உள்ளது. இதன்படி திருத்தப்பட்டால் வருடாந்த சம்பள ஏற்றங்களுடன் பின்வருமாறு அடிப்படைச் சம்பளம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| திகதி | படிநிலை | சம்பளம் |
|---|---|---|
| 06.10.2016 | 11 | 18212/- |
| 01.01.2017 | 11 | 21424/- |
| 06.10.2017 | 12 | 21684/- |
| 01.01.2018 | 12 | 24936/- |
| 06.10.2018 | 13 | 25236/- |
| 01.01.2019 | 13 | 28528/- |
| 06.10.2019 | 14 | 28868/- |
| 01.01.2020 | 14 | 32200/- |
| 06.10.2020 | 15 | 32645/- |

மேல்படி விபரத்தை பார்த்தால் உண்மையான வருடாந்த சம்பள அதிகரிப்பு 445/- வும் 2020க்கு பின்னரே கிடைக்கும்.

? திருமணமான அரசாங்க ஊழியர் யார் யாருக்கு புகையிரத ஆணைச்சீட்டுக்களை பெறலாம்?

மேற்படி அரசாங்க ஊழியரின் மனைவி அரசாங்க ஊழியராய் இருந்தால் யாருக்கு உயர் வகுப்பு உரியதோ அதை எடுக்கலாம். பிள்ளைகள் அவர்களில் தங்கியிருந்தால் அவர்களுக்கும் அரசாங்க ஊழியர்களைப் போல் ஆறு பயணங்களுக்கு (3சோடிகள்) எடுக்கலாம். சுருக்கமாக சொல்வதாக இருந்தால் பின்வரும் அறிவுறுத்தலின்படி எடுக்கலாம்.

ஊழியர்களின் திருமணமாகாத, தொழில் இல்லாத பிள்ளைகளுக்கு வயது கட்டுப்பாடு இன்றி ஆண் பெண் என்ற வேறுபாடு இல்லாமல் புகையிரத ஆணைச்சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம். 18 அல்லது 21 வயது என்ற கட்டுப்பாடு இல்லை.

? மாகாண பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய எனக்கு போட்டிப் பரீட்சை மூலம் 2016.05.09 தொடக்கம் 3ஆம் அதிபர் வகுப்பு கிடைத்துள்ளது. 2016.10.17 அன்று திகதியிட்டு தற்காலிகமாக மாகாண சேவைக்கு விடுவிக்கப்பட்டுள்ளதாக கடிதம் வந்துள்ளது இதன் கருத்து என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13வது அரசியல் திட்டத்தில் உள்ள கல்வி தொடர்பாக நியதிகளின்படி இலங்கை அதிபர் சேவை தொடர்பான விடயங்களில் மத்திய அரசாங்கத்திற்கு அதாவது நிரல் அமைச்சுக்கே அதிகாரம் உள்ளது. அதன் அடிப்படையில் இலங்கை அதிபர் சேவை நியமனம் மத்திய அரசாங்க நியமனமாகும். மாகாண சபைகளில் கீழ் இயங்கும் பாடசாலைகளில் அதிபர்களாக நிலைப்படுத்துவதற்காகவே நீங்கள் தற்காலிக அடிப்படையில் மாகாண சபைக்கு விடுவிக்கப்பட்டு உள்ளீர்கள். இதை தெரியப்படுத்தும் அறிவுறுத்தல் கடிதமே அதுவாகும்.

? இலங்கை ஆசிரியர் சேவையின் முதலாம் வகுப்பைச் சேர்ந்த எனது சம்பளத்திட்டத்தில் 1335/- சம்பள படியேற்ற நிலை உள்ளது. ஆனால் 2016.01.01 சம்பள ஏற்றமாக 783 ரூபாவே கிடைத்தது. ஏன் இப்படி?

03/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை சம்பள மாற்றம் தொடர்பாக ஆசிரியர் உட்பட பல ஊடகங்களில் விளக்கமளித்துள்ளேன். அடிப்படைச் சம்பளமும், வருடாந்த சம்பள ஏற்றமும் இரண்டு மடங்காகியுள்ளது. ஆனால் இந்த அதிகரிப்பு ஒரு குறிப்பிட்ட வாய்ப்பாட்டின் அடிப்படையில் 5 வருடங்களில் ஐந்து கட்டங்களாகவே கிடைக்கின்றது. 2015.12.31 அன்று 26265/- சம்பளம் பெற்றுக் கொண்டு இருந்த ஒரு ஆசிரியரின் வருடாந்த சம்பள ஏற்றமும் அந்த வாய்ப்பாட்டின் அடிப்படையில் 2016 தொடக்கம் 2020 வரை பின்வருமாறே கிடைக்கும்.

2016 - 783/-

2017 - 921/-

2018 - 1059/-

2019 - 1191/-

2020 - 1335/-

? 2016.01.01 தொடக்கம் நியமிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியம் தொடர்பாக தெளிவு இல்லாமல் உள்ளது. எவ்வளவு கழிப்பார்கள்? என்ன அடிப்படையில் ஓய்வூதியம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பாக இன்னும் தெளிவான கொள்கை ஒன்றை அரசாங்கம் தயாரித்து முடிக்கவில்லை. பங்குபற்றல் ஓய்வூதியம் தொடர்பாக பேசப்பட்டாலும் இன்னும் முடிவு இல்லாமல் உள்ளது.

2016.01.01 நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியராயின் அவரது அடிப்படை சம்பளமாகவுள்ள 18872/-க்கு 6வீதமான 1132/32 பணம் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்காக கழிக்கப்படும். கல்விக் கல்லூரி ஆசிரியராக இருந்தால் 18212/-க்கு 6 வீதமாக 1092/72 பணம் அறவிடப்படும்.

? பாடசாலை தொடங்கும் நேரம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. வடமாகாணம் 2017 ஆம் தொடக்கம் 7.30 மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கப்படும் என்று கூறப்படுகின்றது. இதன் உண்மை நிலை என்ன?

1981 ஆம் இது தொடர்பாக தெளிவான சுற்றறிக்கை வெளியிடப்பட்டு இருந்தாலும் நூற்றுக்கணக்கான முகாமைத்துவ பயிற்சி வகுப்புக்களில் இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட்டு இருந்தாலும் இன்னும் சந்தேகங்கள் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. இது பற்றி விரிவாக கட்டுரையொன்றை உங்கள் கேள்விக்குப் பின்னர் ஆசிரியத்தில் எழுதியுள்ளேன்.

இலங்கையில் உள்ள 10144 அரச பாடசாலைகளுக்கும் உள்ளது ஒரு சட்டமாகும். காலநிலையை அண்டி சில தீர்மானங்களை எடுக்கலாம். 2006/26 இலக்கம் கொண்ட கல்வியமைச்சின் சுற்றறிக்கைப்படி காலை 7.30 மணிக்கே பாடசாலை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன்னர் பாடசாலை ஆளணியினர் பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும். இதன் பின்னர் ஒரு நிமிடம் தாமதமாக வந்தாலும் தாமதமாக வருதல் என்ற கணக்கில் சேர்க்கப்படும்.

இது தொடர்பாக விரிவாக விளக்கம் இம்முறை ஆசிரியம் இதழில் உள்ளதால் மேலதிக விளக்கங்களை இங்கு தவிர்த்துள்ளேன்.

? இலங்கை ஆசிரியர் சேவையில் 2-1 தரத்தில் உள்ளேன். இத்தரத்திலேயே கல்விமாணி *(BEd)* சித்தியடைந்தேன். கல்வி முதுமாணி *(MEd)* பாடநெறிக்கு விண்ணப்பிக்க வுள்ளேன். இதனால் ஆசிரியர் சேவையில் சம்பள உயர்வுகள் பதவி உயர்வுகள் கிடைக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008.07.01 முதல் செயற்படும் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின்படி 2008.07.01 அன்றுக்கு முன்னர் சேவையில் இருந்தவர்களுக்கு இந்த தகைமையால் உள்ளீர்ப்பின் போது சம்பள படிநிலைகளில் அதிகரிப்பு இருந்தது.

2008.07.01 க்கு பின்னர் வழங்கப்படும் பதவி உயர்வுகளில் 2-11 தரத்தில் இந்த தகைமைகள் இருந்தால், கல்விமாணி தகைமையின்படி 3வது படிநிலையில் உள்வாங்கப்பட்டவர்களுக்கு 7 வருடங்களின் பின்னரும் கல்வி முதுமாணியும் கல்வி டிப்ளோமாவும் இருந்தால் 5வது படிநிலையில் உள்வாங்கப் பட்டவர்களுக்கு 5 வருடங்களின் பின்னரும் 2-1 பதவி உயர்வு கிடைக்கும்.

2-1 அல்லது 1ஆம் வகுப்பு தரங்களில் உள்ளவர்ள் இந்த மேற்படிப்பை செய்வதால் ஆசிரியர் சேவையைப் பொறுத்தவரையில் சம்பள உயர்வோ பதவி உயர்வோ கிடைக்கமாட்டாது. ஆசிரியர் ஆலோசகர், அதிபர் சேவை பதவி உயர்வுகளின் போது இதற்கு புள்ளிகள் வழங்கப்படலாம்.

? நான் ஆசிரியர் சேவைக்கு வருமுன்னர் முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 5 வருடங்கள் சேவை செய்துவிட்டு பட்டதாரி ஆசிரியராக நியமனம் போட்டி பரீட்சை மூலம் பெற்றேன் எனது சேவைக்காலமும், வருடாந்த சம்பளங்களும் கவனத்தில் கொள்ளப்படுமா?

நீங்கள் பட்டதாரி நியமனம் போட்டிப் பரீட்சைக்கு உங்களது திணைக்களத் தலைவர் ஊடாக விண்ணப்பித்து அவர் முறைப்படி விடுவிப்பு வழங்கி இருந்தால் கல்வியமைச்சின் 07/2016 இலக்கம் கொண்ட 2016.03.19 திகதிய சுற்றறிக்கையின்படியும், தாபனக் கோவை விதிமுறைகளின்படியும் பின்வரும் நன்மைகளை பெற்றுக்கொள்ளலாம்.

இப்படியானவர்களுக்கு தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் 9ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி செயற்படுத்த முடியும். இதன் சம்பள ஏற்ற நன்மைகளை வழங்கல் ஆசிரியர் சேவையின் ஆரம்ப சம்பளத்தை தீர்மானிக்கும் போது கவனத்தில் கொள்ளப்படல் போன்றவை இடம்பெறும்.


இதற்கு மேலதிகமாக ஓய்வூதியத்திற்காக சேவைக்காலம் கணக்கிடும்போது இந்த முன்சேவைக் காலமும் சேர்த்துக்கொள்ளப்படும். நீண்ட காலமாக ஆசிரியர்களுக்கு இருந்த இந்த பிரச்சினை 07/2016 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃப்ராய்டின் மேஜையில் விஷ்ணு சிலை

✸ ச.ஃபி



இருபதாம் நூற்றாண்டில் மனித சிந்தனை மரபிற்குக் கூடுதல் வளத்தைச் சேர்த்தவர்களில் ஒருவர் சிக்மண்ட் ஃப்ராய்ட். முதுமையடைந்த ஃப்ராய்டின் சிகிச்சை அறையைப் புகைப்படத்தில் பார்க்கும் போதெல்லாம் அங்கு பல்வேறு சிற்பங்கள் கண்களை உறுத்துகிற மாதிரி நிறைந்திருப்பதைக் காணமுடியும். எகிப்திய, கிரேக்க, ரோமானிய ஆப்பிரிக்க தேசத்துச் சிற்பங்கள். மனநலம் சம்பந்தப்பட்ட ஒரு மருத்துவர் அறையில் புராதனப் பொருட்களுக்கு என்ன வேலை என்ற ஆச்சரியம் ஒருவருக்கு எழும்.

**கறாரான அறிவியல் சார்ந்த துறைகளில் மிகவும் தேர்ச்சி பெற்ற ஃப்ராய்டுக்கு ஏன் கடந்து போன நாகரிகங்களின் மேல் ஆசை வந்தது?**

அடுத்து சிகிச்சைக்காக ஃப்ராய்ட் பயன்படுத்திய சாதனங்களும் வித்தியாசமானவைதான். ஒரு கட்டில். அதையொட்டி தலைமாட்டில் ஒரு நாற்காலி. சிகிச்சைக்காக வருபவர்கள் படுத்துக்கொண்டு மனதில் தோன்றுவதை கலாசாரம் மற்றும் ஒழுக்கவியல் ரீதியான "சரி", "தவறு" என்ற தணிக்கைக்கு ஆட்படுத்தாமல் பேச வேண்டும்.

சிகிக்சை நேரத்தில் நோயாளியின் தணிக்கைசெய்யப்படாத பேச்சு ஏற்படுத்தும் உணர்வுத் தத்தளிப்பை உளப் பகுப்பாய்வாளரும் நோயாளியும் பரஸ்பரம் பார்த்துக்கொள்ளாதபடி, தோதாகத்தான் கட்டிலையொட்டி கண்மறைவாக நாற்காலியைப் போட்டிருப்பார் ஃப்ராய்ட்.

**மனிதனின் கடந்த காலம்?**

கிடைத்த தொல் சாட்சியங்களை வைத்துக்கொண்டு வரலாற்றில் விடுபட்டுப்போன இடைவெளிகளை நிரப்பிக் கடந்தகால வரலாற்றை மீண்டும் உருவாக்கிக்கொள்வது, அகழ்வாராய்ச்சித் துறையின் பணியாகும். உளப் பகுப்பாய்வின் செயல்பாடுகளும் அதற்கு ஒப்பானதுதான். நோயாளி பேசும், பேசத் தவிர்க்கும் விஷயங்களை சாட்சியாகக் கொண்டு ஒரு தனிமனிதனின் கடந்த காலத்தை மறுநிர்மாணம் செய்வதுதான் உளப் பகுப்பாய்வு. ஆகவே தொல்லியல் ஆய்வுக்கும், உளப் பகுப்பாய்வுக்கும் இடையே அதிகமான பொதுத் தன்மைகள் உண்டு என ஃப்ராய்ட் சொல்லுவார்.

**கட்டுரையாளர்**

கிளினிக்கல் சைக்காலஜிஸ்ட் தேனி மருத்துவக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்த தொல் சாட்சியங்களை வைத்துக்கொண்டு வரலாற்றில் விடுபட்டுப்போன இடைவெளிகளை நிரப்பிக் கடந்தகால வரலாற்றை மீண்டும் உருவாக்கிக்கொள்வது, அகழ்வாராய்ச்சித் துறையின் பணியாகும். உளப் பகுப்பாய்வின் செயல்பாடுகளும் அதற்கு ஒப்பானதுதான். நோயாளி பேசும், பேசத் தவிர்க்கும் விஷயங்களை சாட்சியாகக் கொண்டு ஒரு தனிமனிதனின் கடந்த காலத்தை மறுநிர்மாணம் செய்வதுதான் உளப் பகுப்பாய்வு. ஆகவே தொல்லியல் ஆய்வுக்கும், உளப் பகுப்பாய்வுக்கும் இடையே அதிகமான பொதுத் தன்மைகள் உண்டு என ஃப்ராய்ட் சொல்லுவார்.

**டாக்கிங் க்யூர்?**

உளப் பகுப்பாய்வின் ஆரம்ப வரலாறு ஒரு பெண் சிறுகதை ஆசிரியரை உருவாக்கியதோடு தொடர்பு கொண்டிருக்கிறது. ஃப்ராய்டும் அவரது மருத்துவ நண்பரான ப்ருயரும் சேர்ந்து 1895-ல் ஐந்து பெண் ஹிஸ்டீரியா நோயாளி களைப் பற்றி ஆய்வுக் குறிப்புகளை எழுதி *Studies on Hysteria* என்ற பெயரில் வெளியிட்டார்கள். அதில் முதல் கேஸ் ஹிஸ்டரி அன்னா ஓ என்பவரைப் பற்றியது.

“சிம்னி விளக்கில் படிந்த புகைக்கரியை தேய்த்து சுத்தமாக்குவது போல, நான் பேசப் பேச மனது லகுவானது” என்று தனக்குக் கொடுக்கப்பட்ட சிகிச்சை பற்றிச் சொன்னார் அன்னா. மொழி வழியாகத் தானே சுயமாக அடைந்த சிகிச்சைக்கு அன்னா விளையாட்டாகச் சொன்ன பெயர்தான் "டாக்கிங் க்யூர்" *(Talking Cure)*.

ஒருவரின் நினைவுச் சுவடுகளுக்கும் வார்த்தைகளுக்கும் உள்ள முக்கிய இணைப்பை அடையாளப்படுத்திய நிலையில் உளப் பகுப்பாய்வு பிறந்தது. அன்னா ஓ, பின்னாளில் சிகிச்சையைக் கைவிட்டுவிட்டார். வார்த்தைகளால் அலைகழிக்கப்பட்ட அவர், வார்த்தைகளை ஆளும் நல்ல சிறுகதை ஆசிரியராகப் பின்னாளில் ஆனார். குழந்தைகள், பெண்கள், அபலைகள், பாலியல் தொழிலாளிகள் போன்றோர்களின் உரிமைப் பிரச்சினைகளைக் கையிலெடுத்த அரசியல் செயல்பாட்டாளராகவும் மாறிவிட்டார். நவீன ஜெர்மனியின் முதல் பெண் சமூகப் பணியாளர் என்று புகழ்பெற்றார்.

**சிகிச்சை முறையா கலையா?**

உளப் பகுப்பாய்வு கலையா, அல்லது விஞ்ஞானமா? கலையும் விஞ்ஞானமும் சந்தித்த புள்ளிதான் ஃப்ராய்ட். அதுவரை அறிவியல், முகம்கொடுக்காமல் இருந்த பல விஷயங்கள் அவருடைய எழுத்துக்களால் பிரகாசம் பெற்றன.

கனவின் நற்பலன்கள் மற்றும் தீயசகுனங்கள் பற்றிப் பேசப்பட்ட காலத்தில் கனவுகள் தெரிவிக்கும் அர்த்தங்களை மொழியியல் ரீதியாக ஃப்ராய்ட் விளக்கினார். அவர் நகைச்சுவையைப் பற்றி விரிவாக எழுதினார். அவருடைய *~Jokes and Its relation to the Unconscious|* என்ற நூலை வாசிப்பது வடிவேலின் நகைச்சுவை தமிழ்ச் சமூகத்தில் ஏற்படுத்திய செல்வாக்கு குறித்து புதிய புரிதலைத் தரும். இனம் புரியா விபரீத உணர்வுகளை *(Uncanny)* பற்றிய அவரின் கட்டுரை, த்ரில்லர் படங்களைப் பார்த்து நாம் பயப்படுவதை விளங்கிக்கொள்ள உதவி செய்யும்.

பண்பாடு சார்ந்த விசாலமான பார்வையும், அறிவியலாளனுக்குத் தேவையான படைப்புத் திறனும் இருந்ததால்தான் ஃப்ராய்டால் அறிவியலின் எல்லை தாண்டிப் பல தளங்களில் இயங்க முடிந்தது.


தொடர்ச்சி 41ஆம் பக்..




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமமடு பதிப்பகத்தின் புதிய வெளியீடு

உசாத்துணைப் பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்




**விலை 760.00**




**விலை 380.00**



## CHEMAMADU BOOK CENTRE

**U.G.50, People's Park, Colombo -11**
**Tel: 011-2472362, Fax:011-2448624**
**E=Mail:chemamadu@yahoo.com**
**Website:www.chemamadu.com**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CHEMAMADU BOOK CENTRE

IMPORTERS OFFICE/ SCHOOL STATIONARY





UG.50 PEOPLE'S PARK, COLOMBO -11

TEL: 011-2472362, 2321905, FAX:011-244862

E-MAIL:chemamadu@yahoo.com

WEB:chemamadu.com

MOB:077-7279983, 077-3147442, 077-8323561

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org